

# இலங்கையிற் கலைவளர்ச்சி

க. நவரத்தினம்

# இலங்கையிற்
# கலை வளர்ச்சி

இந் நூல்
'தென்னிந்திய சிற்ப வடிவங்கள்'
என்னும் நூலின் ஆசிரியர்
**க. நவரத்தினம் அவர்களால்**
இயற்றப்பட்டது.

**ஈழகேசரிப் பொன்னையா நினைவு**
**வெளியீட்டு மன்றம்**
குரும்பசிட்டி, இலங்கை
**1954**

ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டுமன்றப் பிரசுரம் — 1

உரிமை பதிவுசெய்யப்பட்டது.

1954

சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில்
அச்சிடப்பட்டது.

# வெளியீட்டுரை

ஈழநாட்டில் கடந்த கால்நூற்றாண்டாக தமிழ் வளர்ச்சிக்கும், கலாசார முன்னேற்றத்துக்கும், அரசியற் சுதந்தரத்துக்கும் தொண்டாற்றிய பெருமக்களில், 'ஈழகேசரி' அதிபர் திரு. நா. பொன்னையா, J. P. அவர்கள் முன்னணியில்வைத் தெண்ணப்படத்தக்கவர் என்பது தமிழகம் அறிந்த ஒன்று.

'கற்றலிற் கற்றாரை வழிபடல் சிறந்தன்று' என்பதற் கிணங்க திரு. நா. பொன்னையா அவர்கள் தமிழ்ப் புலவர் பலரை ஆதரித்தும், புதிய முறையில் உயரிய தமிழ்நூல்கள் பல வெளிவர முயற்சிசெய்தும், மொழி, கலை ஆகிய பயிர்களை வளர்க்கும் பருவக் கார்மேகம்போலப் பயன் கருதாது செய்த பணிகள் தமிழ்மக்கள் என்றென்றும் நினைவுகூரற் குரியன. இதனால், தமிழ்ப்பயிரும் கலைப்பயிரும் ஈழத் தமிழகத்திற் செழித்து வளர்ந்தன. ஆயின், 30-3-51இல் திரு. நா. பொன்னையா அவர்கள் இவ்வுலக வாழ்வை ஒருவிய பின் தமிழுலகுக்கு முதுவேனிற் பருவம் தோன்றிற்றெனல் மிகையாகாது.

'வாழையின் கீழ்க் கன்றும் கனி உதவும்' அன்றோ! திரு. நா. பொன்னையா அவர்களது பத்தினியும், புத்திரியும், நண்பர்களும் பொன்னையா அவர்களின் பிரிவால் ஈழத் தமிழகத்திற்கு ஏற்பட்ட முதுவேனிலை இளவேனிலாயாவது ஆக்க முயன்று 27-2-54இல் '**ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்**' என்னும் பெயருடைய கழகமொன்றினை ஆரம்பித்து அதன் மூலம் அப் பெரியாரது தொண்டினைத் தம்மாலியன்ற அளவு தொடர்ந்து நடாத்த விரும்பினர். அக் கழக நோக்கங்கள்:

(1) இக்கால ஆராய்ச்சி முறைகளைத் தழுவித் தமிழிற் புதிய நூல்களும், சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவர முயலுதல்.

(2) சிறந்த நூல்களை எழுதி உதவும் அறிஞர்களை இயன்ற பொருளுதவி புரிந்து கௌரவித்தல்.

(3) மன்ற வெளியீடுகளின் மூலம் கிடைக்கும் ஊதியத்தை, தமிழில் உயர்தர ஆராய்ச்சி முறைகளிற் கல்விகற்க விரும்பும்

மாணவர்களுக்கு உதவி, இலங்கைப் பல்கலைக் கழகம், இந்திய பல்கலைக் கழகங்களிற் கல்வி பெற இயன்றளவு உபயோகித்தல்; என்பனவாம்.

தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, கலை, சமயம், சரித்திரம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் நூல்கள் எழுதும் விருப்புடைய அன்பர்களது ஒத்துழைப்பை இம்மன்றம் மிகவும் ஆவலுடன் எதிர் பார்க்கின்றது.

இம் மன்றத்தின் பணியைத் தமிழகம் ஏற்று ஆதரிக்கவேண்டு மென்பது நமது பெரு விருப்புக்களுள் ஒன்று.

கலாரசிகரும், தமிழன்பரும், திரு. நா. பொன்னையா அவர்களது நண்பருமாகிய திரு. க. நவரத்தினம் அவர்கள் யாத்துதவிய இந் நூலை, இம் மன்றத்தின் முதற் பிரசுரமாக மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

வணக்கம்.

ஈழகேசரிப் பொன்னையா நினைவு
வெளியீட்டு மன்றத்தார்,

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

# சிறப்புப்பாயிரம்

### வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

**இ**லகுதமிழ் மொழியினொடு மாங்கிலந் தன்னிலுறு
மிணையில்பெரு நூல்களாய்ந்தோன்
யாழ்ப்பாண நாட்டிலுறு வண்ணைநகர் வாழ்பவன்
இயம்புநவ ரத்தினப்பேர்
இயைந்தவன் 'றென்னிந்த்ய சிற்பவடி வங்க'ளென்
றிசை நூலை முன்செய்தவன்
'இலங்கையிற் கலைவளர்ச் சி'ப்பெயர்கொ ணூலொன்றை
இந்நா ளியற்றியதனை

**அ**லகில்வள முற்றிடுந் தென்மயிலை தோன்றினோன்
அமைந்தபொன் னையநாமன்
அறிஞர்வாழ் சென்னையம் பதியினிலோ ரச்சகம்
அமைத்துநற் றமிழ் நூல்களை
அச்சிற் பதித்துமுய ரீழகே சரியெனும்
அறிவுதரு பத்திரிகையை
அதிபனா யிருந்தங்கு நடாத்தியும் பெருநன்மை
ஆற்றினோ னினைவுமன்றின்

**கு**லவுமுதல் வெளியீட தாகவிங் காக்கியே
கூறுதமி ழாங்கிலத்தில்
கொண்டபெரு நூலெலாங் கற்றபே ரறிஞனைக்
குரையாழி சூழிலங்கைக்
கோவேந்தர் மன்றிலோ ரமைச்சுமாய் விளங்குவோன்
கோதிலுயர் சாந்தமென்னுங்
குணமதே வடிவாய சிறிநடேச பிள்ளையாங்
கோமான்றன் றலைமைதன்னில்

**உ**லகுநிகழ் சகவருட மாயிரத் தெண்ணூறெ
டுற்றவெழு பத்தேழினில்
ஒன்றிவரு ஜயவருட முறுமாசி மதிதன்னி
லோரெட் டதாந்தேதியில்
ஒளிசெய்வெங் கதிரவன் வாரநிகழ் சிவராத்ரி
உறுதினம் வைத்தீஸ்வர
உயர்கலா சாலையிற் பண்டிதர்கள் சபையினிடை
ஓதிமகிழ் வித்தனனரோ.

# பொருளடக்கம்


| அத் : | | பக்கம் |
|---|---|---|
| | வெளியீட்டுரை ... ... | III |
| | மதிப்புரை ... ... | IX |
| | முன்னுரை ... ... | XI |
| 1. | இந்தியாவும் இலங்கையும் ... | 1 |
| | இலங்கை மக்கள் — பூர்வீக இலங்கை மக்கள் — திராவிடரும் தென்னிந்தியாவும் — தென்னிந்தியாவும் பிறநாடுகளும் — தமிழ் நூல்களும் ஈழமும் — இலங்கையிற் சைவமும் பௌத்தமும். | |
| 2. | இலங்கையிற் சிற்ப வளர்ச்சி (1) ... | 8 |
| | அநுராதபுரக் காலம் :— மௌரிய சிற்பமுறை — ஆந்திர சிற்ப முறை — குப்த சிற்பமுறை — பல்லவ சிற்ப முறை. | |
| 3. | இலங்கையிற் சிற்ப வளர்ச்சி (2) ... | 15 |
| | பொலநறுவாக் காலம் :— சோழ சிற்ப முறை — பாண்டிய சிற்ப முறை ; கண்டிநகர்க் காலம் :— விஜய நகர நாயக்க சிற்ப முறைகள் ; கொழும்புநகர்க் காலம். | |
| 4. | தாது கோபங்கள் ... ... | 24 |
| | தாதுகோப அமைப்புமுறை — வாகல்கடங்கள் — வாயில்கள். | |
| 5. | பௌத்த சிற்ப வடிவங்கள் ... | 31 |
| | புத்தரின் திருவடிவம் — புத்தர் வடிவங்களின் அளவுப் பிரமாணம் — வேறு சிற்ப வடிவங்கள் — சிற்பத் தூண்கள். | |
| 6. | சைவ சிற்ப ஆலயங்களும் வடிவங்களும் ... | 37 |
| | பௌத்த ஆலயங்களும் சைவத் திருவுருவங்களும் — இலங்கையிற் சைவத்தின் தொன்மை — சைவ ஆலயங்கள் — சைவ ஆலயங்களின் காலமும் வரலாறும் — சைவத் திருவடிவங்கள். | |
| 7. | யாழ்ப்பாணத்திற் சைவ ஆலயங்கள் ... | 46 |
| 8. | இலங்கை ஓவியங்கள் ... ... | 50 |
| 9. | கலையும் கைத்தொழிலும் ... ... | 54 |
| | கைத்தொழில் முறை — தொழிலும் கலைகளும் — கைத்தொழில் வகைகள் — இக்கால நிலை — எதிர்காலம். | |
| 10. | இந்திய கலா தத்துவம் ... ... | 64 |
| | ஐரோப்பிய கலையும், இந்திய கலையும். | |
| 11. | படங்களின் விளக்கம் ... ... | 69 |

## அநுபந்தம்

பக்கம்

டக்டர் ஆனந்தக் குமாரசுவாமி 81

வாழ்க்கைச் சுருக்கம் — அவர் வெளியிட்ட நூல்கள் — அவர் சிறப்பாகச் செய்துள்ள பணி — புகழுரைகள்.

மேற்கோள் நூல்கள் 93

அரும்பொருள் அட்டவணை 95

## படங்கள்

1. தூபாராம தாதுகோபம் ...
2. ருவான்வெலிசாயா தாதுகோபம் ... I
3. சேதவனராம தாதுகோபம் ... II
4. கந்தக சைத்திய தாதுகோபம் ... „
5. சிராவத்தியின் அற்புதச் செயல் ... III
6. மாயாதேவியின் கனவு ... „
7. தொலுவிலா புத்தர் வடிவம் ... IV
8. தம்பதிகள் ... ... V
9. சந்திரவட்டப் படிக்கல்லு ... ... „
10. யானைச் சித்திரங்கள் ... ... VI
11. மனித வடிவமும் குதிரைத் தலையும் ... „
12. நாலந்தா கெடிகே ... ... VII
13. இரண்டாம் சிவாலயம் ... ... VIII
14. கிரிவிகார தாதுகோபம் ... ... VII
15. இலங்கைத் திலக ஆலயம் ... ... IX
16. சேதவனராம விகாரம் ... ... „
16 a. தூபாராம ஆலயம் ... ... X
17. கல்விகாரை வடிவங்கள் ... ... XI
17 a. பராக்கிரமபாகு ... ... XII
18. வட்டதாகே ... ... XIII
19. ஹட்டதாகே ... ... XIV
20. லதா மண்டபம் ... ... „

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 21. | புத்தர் திருவடிவம் | .... | XV |
| 22. | முதலாம் சிவ தேவாலயம் | .... | XVI |
| 23. | யாப்பகூவா அரண்மனை | .... | XVII |
| 24. | இலங்காதிலக விகாரை | .... | ,, |
| 25. | கடலதேனிய விகாரை .... | .... | XVIII |
| 26. | கண்டி புத்த தந்த ஆலயம் | .... | ,, |
| 27. | எம்பக்க தேவாலயச் சித்திரம் | .... | XIX |
| 28. | களனியா விகாரை .... | .... | ,, |
| 29. | பொன்னம்பலவாணேஸ்வரம் | .... | XX |
| 31. | வாகல் கடம் .... | .... | ,, |
| 32. | ,, .... | .... | XXI |
| 33. | நீள்சதுரக் கல் .... | .... | ,, |
| 34. | வாயில் .... | .... | XXII |
| 35. | நாகராஜ துவாரபாலகர் .... | .... | XXIII |
| 36. | துவாரபாலகர் .... | .... | XXIV |
| 37. | கைப்பிடி வரிசை .... | .... | ,, |
| 38. | புத்தர் திருவடிவம் (அபயகிரி) | .... | XXV |
| 39. | ,, ,, (பங்குளியா) | .... | ,, |
| 40. | ,, ,, (கல்விகாரை) | .... | XXVI |
| 41. | ,, ,, (கல்விகாரைக் கர்ப்பக்கிரகம்) | | ,, |
| 42. | ,, ,, (வட்டதாகே) | .... | XXVII |
| 43. | மைத்திரேய போதி சத்துவ | .... | ,, |
| 44. | பத்தினி .... | .... | XXVIII |
| 45. | சிற்பத் தூண்கள் .... | .... | ,, |
| 46. | நீராடு துறை .... | .... | XXIX |
| 47. | முருகன் ஆலயம் .... | .... | ,, |
| 48. | சுந்தரமூர்த்தி நாயனர் | .... | XXX |
| 49. | திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் | .... | XXXI |
| 50. | திருநாவுக்கரசு நாயனர் .... | .... | XXXII |
| 51. | சண்டேசுவர நாயனர் .... | .... | XXXIII |
| 52. | சிவமூர்த்தம் .... | .... | ,, |

| | | பக்கம் |
|---|---|---|
| 53. | நடராஜ வடிவம் ... ... | XXXIV |
| 54. | திருகோணமலைத் திருவடிவங்கள் ... | XXXV |
| 55. | அநுமார் ... ... | XXXVI |
| 56. | வாயிற்படிக்கல்லு ... | XXXVII |
| 57. | கஜலக்ஷ்மி ... ... | ,, |
| 58. | சிகிரியா ஓவியம் ... ... | XXXVIII |
| 59. | திவங்க ஆலய ஓவியம் ... | XXXIX |
| 60. | சிம்மாசனம் ... ... | XL |
| 61. | வெள்ளி மயிலும் திருவாசியும் ... | ,, |
| 62. | மரச் சித்திர வேலை ... | XLI |

| | | |
|---|---|---|
| 1. | இலங்கை — புராதன நகரங்கள் ... | 8 |
| 2. | தாதுகோபத்தின் பகுதிகள் ... | 26 |
| 3. | டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி ... | 81 |


*28, 29, 48, 49, 50, 51, 52, 54, 55, 56, 61, 62* எண்களையுடைய படங்களைத் தவிர ஏனைய படங்கள் யாவும் இலங்கைப் புராதனப் பொருள் ஆராய்ச்சிப் பகுதியாரால் உதவப்பட்டன.

தமிழ் அறிஞரும்,

இலங்கையின் தபால் - ஒலிபரப்புப் பகுதி அமைச்சருமாகிய

கௌரவ சு. நடேசபிள்ளை B. A., B. L., F. R. E. S. அவர்களது

# மதிப்புரை

பாரத நாட்டின் கலை கடல் கடந்து இலங்கை, சாவகத்தீவு, சீயம், கம்போடியா என்ற தேசங்களிற் பரவிய வரலாறு பாரத நாட்டுச் சரித்திரத்தில் ஒரு முக்கிய பகுதியாகும். இலங்கையில் அக்கலை இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்னரே வளர ஆரம்பித்தது. அசோக மன்னரின் புத்திரனை மஹிந்தனும், புத்திரியாகிய சங்கமித்திரையும் இலங்கையில் கி. மு. மூன்றுவது நூற்றுண்டில் புத்த சமயத்தை நிலை நிறுத்தினர் என்பது சரித்திரப் பிரசித்தம். அக்காலத்தி லிருந்து, இலங்கை மன்னர்கள் தங்களது தலைநகரமாகிய அநுராதபுரத்திலும் வேறு இடங்களிலும், பாரத நாட்டைப் பின்பற்றி, புத்த சிலைகளையும் தாகோபா என்ற ஆலயங்களையும் தாபித்தனர். அவற்றிற் பெரும்பாலானவை இப்பொழுது சிதைந்த நிலையில் இருக்கின்றன. ஆயினும் அவை இலங்கையிற் பூர்வீக கலைச் சின்னங்க ளாக விளங்குகின்றன. அநுராதபுரத்திலும், பொலன்னறுவா என்ற புலத்தி நகரிலும் காணப்படும் புத்த விக்கிரகங்கள் அதிசயிக்கத்தக்க சிற்ப இலக்ஷணம் பொருந்தியவை. சிகிரியா என்ற குன்றில் தீட்டப்பட்ட ஓவியங்கள் அஜண்டாவி லுள்ள அற்புத ஓவியங்களை நிகர்த்தனவாய், இலங்கையின் பூர்வீகக் கலைச் சிறப்பை இன்றும் எடுத்துக் காட்டுகின்றன.

இலங்கையின் கலை புத்த சமயத்தோடு அதிகம் தொடர்புற்றதாகக் காணப் படினும் சைவ சமயச் சார்பும் கலந்துள்ளது. சோழ மன்னரும் பாண்டிய மன்னரும் இலங்கையில் ஆதிக்கஞ் செலுத்திய காலத்தில், அவர்களால் பொலன்னறுவாவில் கட்டப்பட்ட சிவாலயங்கள் அழகிய சிற்பத் திறம் வாய்ந்தவை. அவ்வாலயங்களுக் கருகில் புதைபொருள் ஆராய்ச்சியாளராற் கண்டெடுக்கப்பட்டுக் கொழும்புப் பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ள பஞ்சலோக விக்கிரகங்கள் கலா விற்பன்னர்களின் உள்ளத்தைக் கவர்வனவாகும். அவற்றுள் ஒன்றுகிய சுந்தர மூர்த்தி விக்கிரகம் பக்திப் பரவச நிலையைப் படிவத்திற் காட்டும் திறனில் நிகரற்ற தாக விளங்குகிறது. இவ் விக்கிரகங்கள் தமிழ்க் கலை உச்சநிலை அடைந்திருந்த காலத்தைக் குறிக்கும்.

இலங்கையின் கலை வளர்ச்சிக்குத் தமிழ்ச் சிற்பிகளே பெரிதும் துணைசெய் தார்கள் எனக் கருதுவதற்கு ஆதாரம் இருக்கிறது. அநுராதபுரத்தில் ஈசுவரமுனியா ஆலயத்தில் கருங்கல்லிற் செதுக்கப்பட்ட அழகிய சிற்பமும், நாலந்தா என்ற இடத்திலுள்ள கருங்கல் ஆலயமும் பல்லவர் காலத்திலிருந்த தமிழ் நாட்டுச்

சிற்பிகளின் கைவண்ணத்தைக் காட்டுகின்றன. முதலாம் பராக்கிரமபாகு என்ற அரசன் பொலன்னறுவாவிற் கட்டிய ஆலயங்கள் தமிழ்ச் சிற்பமுறையைத் தழுவியன என்பது எளிதிற் புலப்படும். கண்டி நகரத்துக்கு அண்மையிலுள்ள கடலதெனியா பௌத்தாலயம் முழுதும் தமிழ் முறையை அநுசரித்த கருங்கற் கட்டிடமாகும். இரண்டாம் இராஜசிங்கன் என்ற சிங்கள மன்னன் கட்டிய சிவாலயம் சீதாவகா என்ற இடத்திற் சிதைந்த நிலையில் உள்ளது. அதன் விசாலமான அடித்தளங்கள் கருங்கற் கட்டிடமாக அமைந்து தமிழ்ச் சிற்பமுறையைக் காட்டுகின்றன. இலங்கையின் தென்கோடியிலுள்ள கடற்கரைப் பட்டினமாகிய தேவிநுவரையில் பிரசித்தம் பெற்று விளங்கிய விஷ்ணு ஆலயம் கருங்கல்லால் தமிழ் முறையிற் கட்டப்பட்டது என்பதற்கு இப்பொழுது அங்குக் காணப்படும் சிற்பவேலைப்பா டமைந்த கற் றூண்கள் சான்று பகரும். கருங்கற் சிற்பத்திற் கைதேர்ந்த குடும்பங்கள் பரம்பரையாகப் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டில் இருந்து வருவதுபோல் இலங்கையில் அன்றும் இல்லை, இன்றும் இல்லை என்று துணிந்து கூறலாம். இலங்கை மன்னர்களால் தமிழகத்தினின்று அழைக்கப்பட்ட தமிழ்ச் சிற்பிகளே இலங்கையின் கலைச் செல்வத்தைப் படைத்துத் தந்தார்கள் என்று சொல்வது மிகையாகாது.

இலங்கையிற் கலைச் செல்வத்தைப் பற்றித் தமிழ் மக்கள் அறிந்துகொள்வதற்குத் துணையாகத் திரு. க. நவரத்தினம் அவர்கள் 'இலங்கையிற் கலைவளர்ச்சி' என்ற இந் நூலை எழுதி வெளியிடுகின்றார்கள். கலைநூல்கள் தமிழில் இல்லாத குறையை நீக்கும் வகையில் திரு. நவரத்தினம் அவர்கள் தனிச்சிறப்புப் பெற்றுள்ளார்கள். சில ஆண்டுகளுக்கு முன் 'தென்னிந்திய சிற்ப வடிவங்கள்' என்ற ஒரு நூலை இவர்கள் வனப்பு மிக்க முறையில் இயற்றித் தமிழகத்துக்கு உதவியுள்ளார்கள். தமிழில் முதன்முதலாக வெளிவந்த விரிவான கலைநூல் இது என்றே கூறலாம். இந் நூல், தமிழகச் சிற்பக்கலையின் கருவூலமாக அமைந்துள்ளது. கலாயோகி என்று புகழ்பெற்ற இலங்கைப் பெருமகனுர் ஆநந்தக் குமாரசுவாமி பாரதநாட்டுக் கலையின் சிறப்பை உலகம் அறிந்துகொள்வதற்குக் கண்கொடுத்துதவிய பெருமையைப் பெற்றனர். அவர் காட்டிய வழியைப் பின்பற்றித் திரு. நவரத்தினம் தமிழ்மொழி வாயிலாகச் செய்துவரும் கலைத்தொண்டு, தமிழ்மக்களின் பாராட்டிற் குரியதாகும். 'இலங்கையிற் கலைவளர்ச்சி' என்ற இந்நூல் இலங்கையின் கலை வனப்பைக் காண்பதற்குக் கண்கொடுத்துதவுங் கலைநூலாக வரவேற்கப்படும் என்று எதிர் பார்க்கின்றேன்.

சு. நடேசபிள்ளை

**கொழும்பு,**
**30-11-54.**

# முன்னுரை

*சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்*
*செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.*

—பாரதியார்.

இலங்கையும் இந்தியாவும் கலைப்பொக்கிஷங்கள் நிறையப்பெற்ற அயல் நாடுகள் என்பதை இக்காலத்தில் எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இருநாட்டுக் கலைகளும் ஒரேசிகரத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் இரு பேரருவிகளெனலாம். எவ்விதம் இந்தியா சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களுக்கும், அவற்றோடு தொடர்புடைய கலைகளுக்கும் இருப்பிடமாக விளங்குகின்றதோ, அவ்விதமே, இலங்கையும் பௌத்தம், சைவம் ஆகிய சமயங்களுக்கும், அச் சமயங்களோடு தொடர்புடைய கலைகளுக்கும் இருப்பிடமாக விளங்குகின்றது.

எல்லா நாட்டு மக்களும் தங்கள் முன்னோர்கள் விட்டுச் சென்ற கலைச் செல்வத்தின் சிறந்த இயல்புகளை ஆர்வத்துடன் கற்று, போற்றி வளர்த்தல் வேண்டும். முற்போக்குடைய மேலைத்தேச மக்கள் தங்கள் பண்டைய கலைப்பொருள்களையும், கலா நிலையங்களையும் போற்றி வாழ்வதை நாம் நன்கு அறிவோம். பண்டைப் பெருமையினைப் போற்றி வாழும் மனப்பான்மை ஆங்கில மக்களிடத்தே காணப்படும் சிறந்த உளப்பண்பாகும். அவர்களிடத்தே இப் பண்பு விளங்குவதற்குக் காரணம், அவர்கள் சிறுபராயந் தொட்டே நாட்டின் சரித்திரத்தை முறையாகக் கற்று வருவதேயாகும்.

இலங்கை மக்களாகிய நாம், எமது பண்டைய நாகரிகச் சிறப்புகள் யாவற்றையும் மறந்து, பிறநாட்டு நாகரிகத்தில் மயங்கி வாழ்கின்றோம். இக் நிலைக்குக் காரணம் எமது நாடு ஏறத்தாழ 400 வருடங்களாக அன்னியர் ஆதிக்கத்தில் இருந்தமையேயாகும். நாம் அரசியல் சுதந்திரத்தை இன்று பெற்றுவிட்டோமாயினும், கலாசாரச் சுதந்திரத்தை இன்னும் பெறவில்லை. நாம் இன்றும் எமது நாட்டில் உடை, உணவு, கலாசாரப் பண்பு, கல்விமுறை ஆகியனவற்றைப் பொறுத்தமட்டில், அன்னியர்களாகவே வாழ்கின்றோம். நாட்டின் கல்விமுறை எமது சமயத்தையும், கலாசாரப் பண்புகளையும் வளர்க்கக்கூடிய விதத்தில் இன்னும் உருப்பெறவில்லை.

நாட்டில் கலாசார வாழ்வு மறுமலர்ச்சி யடைய வேண்டுமாயின், இந்நிலை மாறுதல் அடைய வேண்டும். இலங்கையின் பூர்வீக சரித்திர வரலாற்றையும், கலை வளர்ச்சியையும் எடுத்துக்கூறும் நூல்கள் நாட்டில் தோன்றுதல் வேண்டும். இக்கால ஆராய்ச்சி முறைகளைப் பின்பற்றித் தமிழிலும், சிங்களத்திலும் கலை, சமயம், கலாசாரம், சரித்திரம் முதலிய துறைகளிற் பல நூல்கள் வெளிவருதல் வேண்டும். இலங்கையின் சரித்திர வரலாறு சிறந்த முறையில் இன்னும் எழுதப்படவில்லை. இன்று காணப்படும் சரித்திர நூல்கள் யாவும் பள்ளிக்கூட மாணவர்களின் தேவைக்காகச் சுருக்கமாக எழுதப்பட்டனவேயாகும். அவையும் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே ஆக்கப்பெற்றிருக்கின்றன.

இலங்கையிற் கலைகள் எவ்விதம் வளர்ச்சிபெற்றன வென்பதையும், அக்கலைகளின் சிறந்த இயல்புகள் எவை யென்பதையும் சுருக்கமாக எடுத்துக் கூறுவதே இந் நூலின் நோக்கமாகும். இப் பொருள்பற்றித் தமிழில் வெளிவரும் முதல் நூல் இதுவேயாகும். ஆங்கிலத்திலும், இலங்கையின் கலை வளர்ச்சியைத் தொடர்ந்து கூறும் தனி நூல் இல்லையென்றே கூறுதல் வேண்டும். டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் 'இடைக்காலச் சிங்களக் கலைகள்' (Medieval Singhalese Art) என்னும் ஒரு நூலை 1908ஆம் ஆண்டு வெளியிட்டார்கள். அந் நூல் கண்டி அரசர்களுக்குப் பிற்பட்ட காலச் சிங்களக் கலைகளைப் பற்றியே கூறுகின்றது.

இலங்கையின் கலை வளர்ச்சி, இந்திய கலைகளைப்பற்றி எழுதப்பட்ட விரிந்த ஆங்கில நூல்களில் தனியிடம் பெற்றுள்ளது. வின்சென்ற் ஏ. ஸ்மித் (Vincent A. Smith) என்பார், தாம் எழுதிய 'இந்திய இலங்கை நுண்கலை வரலாறு' (History of Fine Art in India and Ceylon) என்னும் நூலிலும், டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் தமது 'இந்தியாவினதும், இந்திய - ஆசியாவினதும் கலைகள் வரலாறு' (History of Indian & Indonesian Art) என்னும் நூலிலும், பேர்சி பிறவுன் (Percy Brown) தாம் எழுதிய 'இந்திய கட்டடக்கலை' (Indian Architecture) என்னும் நூலிலும், பெஞ்சமின் றவுலண்ட் (Benjamin Rowland) தாம் எழுதிய 'இந்தியக் கலைகளும், கட்டடக் கலையும்' (Indian Art and Architecture) என்னும் நூலிலும், டக்டர் வோகல் (Dr. Vogel) தாம் எழுதிய 'பௌத்த

கலை' (Buddhist Art) என்னும் நூலிலும், டக்டர் பேர்குசன் தாம் எழுதிய 'இந்தியாவினதும், கீழ் நாடுகளினதும் கட்டடக் கலை வரலாறு' (History of Indian and Eastern Architecture) என்னும் நூலிலும் இலங்கையின் கலைகளுக்குத் தனி இடம் கொடுத்து விளக்கியுள்ளார்கள்.

மேலே கூறப்பட்ட அறிஞர்கள் ஆராய்ந்து கண்ட உண்மைகளை ஆதாரமாகக் கொண்டே இந்நூல் எழுதப்பட்டது. இந்தியக்கலை இலக்கணங்களை நன்கு ஆராய்ந்து முடிவுகண்ட பேரறிஞர்களின் கருத்தைப் பின்பற்றியே நாமும் இலங்கையின் கலைவளர்ச்சியை இந்திய கலைகளின் வளர்ச்சியோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளோம்.

இலங்கையிற் காணப்படுங் கலைப் பண்புகள் யாவும் பௌத்த சமயத்தையும், சைவ சமயத்தையும் ஆதாரமாகக் கொண்டே வளர்ந்தன. இவ்விரு சமயப் பண்புகள் யாவும் இந்தியாவிலிருந்தே பிறநாடுகளுக்குப் பரவியன என்பது சரித்திரம் கூறும் உண்மையாகும். பௌத்த சமயப் பண்புகள் தமிழ்நாட்டுக்கு வடக்கேயுள்ள பிரதேசங்களிலிருந்து உலகமெங்கும் பரவின. சைவசமயப் பண்புகள் யாவும் தமிழ்நாட்டிலிருந்தே பிற நாடுகளுக்குப் பரவின. எனவே, இவ்விரு பண்பாடுகளுக்கும் தாயகமாக விளங்குவது இந்திய நாடாகிய பரதகண்டமேயாகும்.

இந்திய நாட்டிற்கும், இலங்கைக்கும் சமயம், சமூக அமைப்பு, கலாசாரம் ஆகிய துறைகளில் மற்றெல்லா நாடுகளிலும் பார்க்க, மிக நெருங்கிய தொடர்பு பண்டைக் காலந் தொடக்கம் ஏற்பட்டிருந்ததால், இலங்கையின் கலைகளில், இந்திய கலைகளின் அம்சங்கள் மிக விளக்கமாகக் காணப்படுகின்றன. இந்திய கலா தத்துவத்தைக் கற்று அறிவதற்கு இலங்கையின் கலைப்பொருள்களும் இன்றியமையாச் சாதனமாக விளங்குகின்றனவெனக் கூறின் அது மிகையாகாது. இருநாட்டுக் கலையையும், ஒருநாட்டுக் கலையாக மதித்தே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், கற்கும் மாணவர்களுக்கும், ஏனைய மக்களுக்கும் உபயோகப்படக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது. இலங்கைச் சரித்திர சம்பந்தமான விஷயங்களில், நாட்டிற் பலதிறப்பட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. ஆதலால், இந்நூலிற் கூறப்பட்டுள்ள முடிபுகள் சிந்தித்துத் தெளிதற்

குரியன. இந்நூல் தமிழ் மக்கள் இலங்கையின் கலைகளைக் கற்பதற்கு ஏதுவாக அமைதல் வேண்டுமென்பதே எமது பெரு விருப்பாகும்.

இந்தியக் கலைகளையும், இலங்கைக் கலைகளையும் கலையுலக அரங்கில் ஏற்றி வைத்த பெரியார் டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களேயாவர். அவர் ஓர் இலங்கைத் தமிழ்மகன் என்பதை இக்கால மாணவர்கள் அறியார்கள். காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் கௌரவ டி. எஸ். சேனநாயக அவர்கள், "இலங்கைமக்கள் தமது கலைகளையும், ஆத்மீக இயல்புகளையும் பாராட்டும் மனப்பான்மையை டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களிடமிருந்தே கற்றார்கள்" எனக் கூறியுள்ளார். அத்தகைய ஒரு பெரியாரைத் தமிழ் உலகம் நன்கறியவேண்டியது அவசியமென்பது சொல்லாமலே அமையும். இலங்கையிற் கலைகளின் மறுமலர்ச்சிக்கு வழி கோலியவர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களேயாவர். அன்னாரின் சீவிய சரித்திரம், இலங்கையின் கலைகளைப்பற்றிக் கூறும் இந் நூலில் இடம் பெறுவது மிகப் பொருத்தமெனப் பலர் விரும்பியதனால், அதை அநுபந்தமாகச் சேர்த்துள்ளோம்.

இலங்கையிற் காணப்படும் கலைப்பொருள்களிற் சிறந்தனவெனப் பலராலும் மதிக்கப்படுவனவற்றின் படங்களை மாத்திரமே இந்நூலில் வெளியிட்டுள்ளோம். அப் படங்களைப் பிரசுரிக்க அனுமதியளித்த இலங்கைப் புராதனப் பொருள் ஆராய்ச்சிப்பகுதி அதிபர் அவர்களுக்கும், கொழும்பு நூதனப் பொருட்காட்சிச்சாலை அதிபர் அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகும்.

இலங்கையின் கலைப்பொருள்களைப் பற்றிய ஒரு நூலைத் தமிழில் எழுதும் வண்ணம் எம்மை இடைவிடாது தூண்டியவர் காலஞ்சென்ற எமது பிரிய நண்பர் திரு. நா. பொன்னையா அவர்களேயாவர். இந் நூல் வெளிவரும் இதுகாலை, அவர் இதனை வரவேற்க இல்லாதிருப்பது துக்கமான நிலையாகும். ஆயினும், இந்நூல், அவரது ஞாபகப் பிரசுர மன்றத்தாரால் முதல் வெளியீடாக வெளியிடப்படுவது ஓர் அளவுக்கு அக் குறையைத் தீர்க்கின்றதெனலாம்.

இந் நூலைச் சிரமத்தோடு கண்கவர் வனப்புடன் அச்சிட்டு வெளியிடுவதற்கு வேண்டிய பல ஒழுங்குகளைச் செய்து உதவியவரும், திருமகள் அழுத்தக அதிபரும், எமது நண்பருமாகிய

திரு. கோ. அப்பாக்குட்டி அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேம்.

கையெழுத்துப் பிரதியை அன்போடு வாசித்து, அதனுட் காணப் பட்ட வழுக்களைத் திருத்தி உதவிய பண்டிதர் வ. நடராஜன் அவர்களுக் கும், அச்சுப்பிரதிகளை வாசித்துப் பிழைகளைத் திருத்தி உதவிய 'ஈழ கேசரி'ப் பதிப்பாளர் திரு. மு. சபாரத்தினம் அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகும்.

தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பல வழிகளிலும் உழைத்து வரு பவரும், இலங்கையில் தபால் – ஒலிபரப்புப் பகுதி அமைச்சராகப் பணி யாற்றுபவருமாகிய கௌரவ திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் எமது வேண்டுகோளுக் கிணங்கித் தமது பல அலுவல்களுக்கிடையில் இந் நூலுக்கு ஒரு மதிப்புரை எழுதி உதவிய பெருந்தகைமைக்கு நாம் என்றும் கடப்பாடுடையேம்.


இந் நற்பணியில் எம்மைப் புகுத்தி, இது இனிது முடிவெய்தும் வரை எமக்குத் தோன்ருத் துணையாகவிருந்த ஸ்ரீ நடராசப் பெருமா னது திருவடிகளை மன மொழி மெய்களால் வழுத்துகின்றேம்.

'சாந்திநிகேதன்'
யாழ்ப்பாணம்
15-12-54

இங்ஙனம்,
க. நவரத்தினம்.

**திருத்தம் :**

(20, 40ஆம் பக்கங்களிற் காணப்படும் 'இரண்டாம் பராக்கிரம பாகு' என்பதை 'மூன்ரும் பராக்கிரமபாகு' எனத் திருத்திக் கொள்க.)



இல. 1. தூபாராம தாதுகோபம்

முதலாம் அத்தியாயம்

# இந்தியாவும் இலங்கையும்

இந்திய நாடு, ஈழமெனப்படும் இலங்கையுடன் பல துறைகளிலும் தொன்றுதொட்டுத் தொடர்புடையதாக இருந்து வருகிறது. இத் தொடர்பை விளக்கும் சான்றுகள் இரு நாட்டுச் சரித்திரங்களிலும், சிலாசாசனங்களிலும், கர்ண பரம்பரைக் கதைகளிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

## இலங்கை மக்கள் : சிங்களரும் தமிழரும்

இலங்கை மக்களிற் கூடிய தொகையினர் சிங்களராவர். அவர்களுக்கு அடுத்தபடியாகத் தொகையிற் கூடியோர் தமிழர்களே.

கி. மு. 500 ஆண்டுகட்கு முன்னர் **விஜயன்** என்பவனும், அவன் சகாக்களும் இந்தியாவின் வட பகுதியிலிருந்து இலங்கைக்கு வந்தார்களென்பதும், சிங்களர் அவர்களின் சந்ததியாரென்பதும் **மகாவம்சம்** முதலிய பௌத்த நூல்கள் கூறும் வரலாறாகும். ஆனால், சரித்திர ஆராய்ச்சியாளர், மகாவம்சம் முதலிய நூல்களிலுள்ள விஜயன் வரலாற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாது, சிங்களர்கள் காலத்திற்குக் காலம் இலங்கைக்கு வந்த ஆரியர்களின் வழித்தோன்றல்களெனப் பொதுப்படக் கூறுகின்றார்கள். சிலர், சிங்களர் ஆரியர்களின் வழித்தோன்றல்களே எனினும், அவர்களிடத்துத் திராவிடக் கலப்பும் உண்டென்று கூறுகின்றனர்.

வட இந்தியாவிலிருந்து வந்த விஜயனும் அவன் சகாக்களும், தமிழ் நாடாகிய பாண்டி நாட்டுப் பெண்களை மணஞ் செய்தார்கள். அப் பாண்டி நாட்டுப் பெண்களோடு தமிழ் நாட்டுக் குடும்பங்களும் வந்து குடியேறின. அக் கலப்பினால் ஏற்பட்ட சந்ததியினரே சிங்களரெனக் கொள்ளுதல் மகாவம்சம் முதலிய நூல்களின் கருத்துக்குப் பொருத்தமான முடிபாகும். இலங்கைச் சரித்திர ஆராய்ச்சி வல்லுனரான டக்டர் ஜீ. சி. மெண்டிஸ் பின்வருமாறு கூறுகின்றார்:

"சிங்கள சாதிக்கு ஆக்கம் கொடுத்த இன்னுமொரு சாதியினர் திராவிடராவர். அத் திராவிடர் இத் தீவில் எப்போது குடியேறினார்க

ளென்பதற்குரிய சான்றுகள் கிடையா. இலங்கையைக் கைப்பற்றும் நோக்கமாகவும், சமாதானக் குடிகளாகவும் திராவிடர் இலங்கைக்கு மிகப் புராதன காலந் தொடங்கி வந்தார்கள். கிறிஸ்த சகாப்தத்தின் ஆரம்பந் தொடங்கிச் சில நூற்றாண்டுகளாகத் திராவிடர் சிங்களச் சாதியின் ஆக்கத்திற்குத் துணை புரிந்தே வந்திருக்கின்றார்கள்."[1]

## பூர்வீக இலங்கை மக்கள் : இயக்கரும் நாகரும்

**பூ**ர்வீக இலங்கையில் இயக்கரும் நாகரும் வாழ்ந்து வந்தனர் என்றும், அவர்கள் நாகரிக இயல்புகள் பொருந்தியவர்களாகவே இருந்தனர் என்றும் நாம் அநுமானிக்கக்கூடிய ஏதுக்கள் மகாவம்சம் முதலிய நூல்களிற் காணப்படுகின்றன. இலங்கை மக்களைச் **சிங்களர், தராச்சர், மோரியர், கலிங்கர், இலம்பகர்ணர், பலிபோஜகர்** என்னும் பிரிவுகளாக வகுத்து மகாவம்சம் கூறுகின்றது. இப் பிரிவுகள் விஜயன் வருகைக்குப் பிந்தியனவாதல்வேண்டும். ஏனெனில், **நாகர், இயக்கர்** என்னும் பெயர்கள் இவற்றுள் இல்லை; எனவே இயக்கர், நாகர் இப் பிரிவினர்களுக்கு முந்தியவர்கள் ஆதல் வேண்டும்.

**நாகர்** என்பார், ஒரு காலத்தில் — புத்தர் காலத்துக்கு முன் — இந்தியநாடு முழுவதிலும் பரவியிருந்தனர் என்பதை இந்திய சரித்திர நூல்களால் அறிகின்றோம். வட இந்திய சரித்திரத்தில், வேத காலத்திற்கும், இதிகாச காலத்திற்கும் பின்பு, நாக அரசர்களின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்தது; மகத நாட்டில் **சிசுநாகன்** என்ற அரசன் நாகர்களின் சிறிய பிரிவுக்குத் தலைவனாக இருந்தான் எனக் கூறப்படுகின்றது. கி. மு. 544 இல் அரசுக்கு வந்த **பிம்பிசாரன்** பெரிய பிரிவைச் சேர்ந்தவனாவன்.[2] நாகர்களுடைய சமயக் கொள்கைகள் பலவும், வழிபாட்டுப் பொருள்கள் பலவும் இந்திய சமய வழிபாட்டு முறைகளுக்குள் இன்றும் விரவி நிற்பதை நாம் அறிவோம். பௌத்த சமய ஆரம்ப கால சிற்பங்களில் எல்லாம் நாகரது வடிவங்கள் காணப்படுகின்றன. இலங்கையின் வடபகுதி **நாகதீபம்** என்று அழைக்கப்பட்டது. நாக தீபத்தின் அரசர்களிருவரது வாக்குவாதத்தைத் தீர்ப்பதற்காகப் புத்தர்

1. இலங்கைப் பூர்வ சரித்திரம் — பக். 12.
2. *History and Culture of the Indian People — Vol. II – p. 19.*

இலங்கையின் வட பகுதிக்கு வந்தாரென்று இலங்கைப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு வாழ்ந்த நாகதீபத்தின் மக்களாகிய நாகர்களின் பிற்கால வரலாறு எப்படி முடிவெய்தியதென்பதை நாம் அறியக்கூடியதாகவில்லை.

இராவணனின் சந்ததியாரே **இயக்கர்** என்பதும், விஜயன் சந்தித்த **குவேனி** என்பாளும், அவள் கூட்டத்தினரும் இயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர்களென்பதும் ஒரு சாரார் முடிபு.

மகாவம்சம் கூறும் **சிங்களர், மோரியர், கலிங்கர்** என்பார் யாரென்பது அவ்வவர்களின் பெயர்களிலிருந்து விளங்குகின்றது. சிங்களர் விஜயனது வம்சத்தினர் ; மோரியர் மௌரிய நாட்டினர் ; கலிங்கர் கலிங்க தேசத்தினர். **தராச்சர், இலம்பகர்ணர், பலிபோஜகர்** என்போர் யார் யார் என அறியக்கூடியதாயில்லை. இக் கூட்டத்தினர், திராவிடர் தென்னிந்தியாவில் குடியேறமுன் அங்கு வாழ்ந்த மக்களினத்தைச் சேர்ந்தவர்களாயிருத்தல் வேண்டும் என்று டக்ளஸ் மெண்டிஸ் கூறுகின்றார்.[1]

## திராவிடரும் தென்னிந்தியாவும்

திராவிடர்கள் பிறநாட்டிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்த மக்கள் என்னும் கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்வதில்லை. இக் கருத்து, ஆங்கில ஆராய்ச்சி முறை இந்தியாவிற் புகுந்தபின்புதான் தோன்றியது. மேற்கு ஐரோப்பாவுக்கும், இங்கிலாந்துக்கும் நாகரிகம் தென்கிழக்கு ஐரோப்பாவிலிருந்துதான் சென்றது. எனவே, அவர்கள், எல்லா நாடுகளுக்கும் நாகரிகம் பிற நாடுகளிலிருந்துதான் சென்றிருத்தல் வேண்டுமெனக் கருதுகின்றனர்போலும். மக்களின் ஆதித் தோற்றத்தைப் பற்றிய முடிபான கருத்து இன்னும் அறியப்படவில்லை. எகிப்தின் பண்டைய நாகரிகச் சின்னங்களை ஆராய்ந்த பலர், எகிப்திலிருந்தே நாகரிகம் உலகம் முழுவதிலும் பரவியதென்கின்றனர். ஆரிய நாகரிகப் பற்றுடையோர், இந்திய நாட்டின் நாகரிகப் பண்புகள் யாவும் ஆரிய மக்களின் வழிவந்தனவே யென்கின்றனர். திராவிடப் பற்றுடையோர், திராவிடரே உலகின் ஆதி மக்களென்றும், தமிழ் மொழியே உலகின் முதன்மொழியென்றும் கூறுகின்றனர். இவ்

1. **இலங்கைப் பூர்வ சரித்திரம் — பக். 8.**

வேறுபட்ட கருத்துக்களுள் எது உண்மையென்பதை எவரும் அறுதியிட்டுக் கூற இயலாதென்பது மாத்திரம் நிலையான உண்மையாகும். சமயாபிமானம், பாஷாபிமானம், தேசாபிமானம் முதலியனவே இவ்வித பலதிறப்பட்ட கருத்துகளுக்குக் காரணங்களாகும்.

தமிழ் நாட்டுப் பழைய கதைகளிலாவது, சங்க இலக்கியங்களிலாவது, தமிழ் மக்கள், பிறநாட்டிலிருந்து தென்னிந்தியாவிற் குடியேறினார்கள் என்ற கருத்துக்குச் சான்றுகளில்லை. தமிழர்கள் (திராவிடர்கள்) ஆதிகாலந் தொட்டுத் தென்னிந்தியாவிலேயே வசித்து வருகிறார்களென்றும், அங்கிருந்து உலகின் பல பகுதிகளுக்குஞ் சென்று வியாபாரம் நடாத்தி வந்தனரென்றும் இத்துறையில் ஆராய்ந்தோர் பலர் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.[1] எனவே, ஆதிகாலந்தொட்டுத் திராவிடர்கள் தென்னிந்தியாவிலேயே வசித்து வருகின்றார்களென நாம் கொண்டால், தென்னிந்தியாவிலிருந்து வந்து இலங்கையிற் குடியேறிய தராச்சர், இலம்பகர்ணர், பலிபோஜகர் என்போர் தமிழ்நாட்டு மக்களே யென்பது பொருந்தும்.

### தென்னிந்தியாவும் பிற நாடுகளும்

தமிழ் நாட்டின் பூர்வீக சரித்திர வரலாறும், திராவிடர்களாகிய தமிழர்களே வட நாட்டினர் வருமுன், இலங்கையிற் குடியேறிய மக்களா யிருத்தல்கூடுமென நாம் கருதுவதற்கு இடமளிக்கின்றது. பழந் தமிழர் கி. மு. 3000 ஆண்டுகட்கு முன்னர் **சுமேரியா, எகிப்து, பாரசீகம்** முதலிய நாடுகளுடன் வாணிபம் நடாத்தி வந்தனரெனச் சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவ் வாராய்ச்சியாளர் கி. மு. 4000 ஆண்டுகட்கு முற்பட்ட சுமேரியத் தலைநகராகிய **ஊர் (Ur)** என்னும் பட்டினத்தில், தென்னிந்திய தேக்கமரத் துண்டுகள் காணப்பட்டன என்றும், கி. மு. 3000 ஆண்டுகட்குமுன் எகிப்தில், தென்னிந்திய கருங்காலி, யானைத் தந்தம், பருத்திநூற் புடைவை முதலியன வாணிபப் பொருள்களாக உபயோகிக்கப்பட்டன என்றும் கூறுகின்றனர்.[2] கி. மு. 5000 ஆண்டுகட்கு முந்தியனவாகக் கருதப்படும் **மொஹஞ்சதாரோ, ஹரப்பா** நகரங்களில் திராவிட நாகரிகச்

---

1. *Dravidian India — Vol. I. p. 24 - 64; History of the Tamils — p. 3.*
2. ஷை — ப. 36 – 43.

சின்னங்கள் காணப்படுகின்றனவென அந் நகரங்களின் புதை பொருள்களை ஆராய்ந்தோர் கூறுகின்றனர்.

எனவே, இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன் உலகத்தின் பல பாகங்களிலும் நாகரிக முறையில் வாணிபம் நடாத்திய தமிழ் மக்கள் கி. மு. 600 வரையிற்றான் — தமக்கு ஒரு காலத்தில் தாயகமாகவும், பிற்காலத்தில் அயலகமாகவும் விளங்கிய — இலங்கையிற் குடியேறியிருப்பரர்களெனக் கூறுதல் பொருத்தமற்ற முடிபாகும். இலங்கையெனப் பெயரிய **ஈழம்**, ஒரு காலத்தில் தென்னிந்திய தமிழ் நாட்டுடன் சேர்ந்து ஒரே நிலப்பரப்பாய் இருந்ததென்பது நிலநூல் வல்லார் கருத்து. அக் காரணம் பற்றியே, நாம் ஈழத்தைத் தமிழர்களின் தாயகம் என்று கூறத் துணிந்தோம்.

பண்டைக் காலத்து உலகமெங்கும் கப்பலோட்டிச் சென்ற தமிழர், ஈழத்தையும் நன்கு அறிந்து அதனுடனும் வாணிபம் நடாத்தியேயிருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. **சங்கமித்தா** வெள்ளரசங் கிளைகளுடன் **யாழ்ப்பாணக் குடாநாட்டின்** வட பகுதித் துறையொன்றில் இறங்கினார் என்று பௌத்த நூல்கள் கூறுகின்றன. அத் துறை, சுளிபுரத்திற்குப் பக்கத்திலுள்ள திருவடிநிலைக்கு அருகிலுள்ள **கோதை மழுவை** என்னும் துறையாகும். **போதி மழுவை** பிற்காலத்திற் 'கோதை மழுவை' எனத் திரிந்தது. இந் நிகழ்ச்சி ஒன்றே, தென்னிந்தியாவுக்கும் வட இலங்கைக்குமுள்ள தொடர்பு, கி. மு. மூன்றும் நூற்றாண்டிற்கு முந்திய தென்பதை உண்மைப்படுத்துகின்றது.

## தமிழ் நூல்களும் ஈழமும்

**ஈழத்துப் பூதந்தேவனார்** என்னும் புலவர் பெருமகன் மதுரையில் வாழ்ந்தாரெனச் சங்க நூல்கள் கூறுகின்றன.

பட்டினப்பாலையில் :

> **"கங்கை வாரியுங் காவிரிப் பயனும்**
> **ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்"**

என வரும் அடிகளாலும் ;

சிலப்பதிகாரத்தில் :

> **"கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்"**

என வரும் அடியாலும் ;

மணிமேகலையில் :

"ஈங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
அறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல்
மறவி நாவா யாங்குள தாதலிற்"

என வரும் அடிகளாலும் ஈழமாகிய இலங்கையைப்பற்றிக் கூறப்பட்டிருப்பது காண்க. 'ஈங்கிதன்' என்னும் சொற்றொடர் நாகதீபம் எனவும், மணிபல்லவம் எனவும் வழங்கப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டையே குறிக்கின்றது என்பது துணிபு. இரத்தின தீவம் என்பது தென்னிலங்கையையும்; சமந்தம் என்பது சிவனொளிபாத மலையையும் குறிக்கின்றன.

## இலங்கையிற் சைவமும் பௌத்தமும்

இலங்கையில் மிகப் பண்டைக்காலந் தொடக்கம் சைவசமயம் பரவியிருந்த தென்பதற்கு, மகாவம்சம் முதலிய நூல்களிலும், தேவாரத் திருமுறைகளிலும் சான்றுகளுள. இராமாயணத்திற் கூறப்பட்ட இராவணன் சைவசமயத்தைச் சேர்ந்தவன் என்பது சைவ அறிஞர் கருத்து. தேவாரங்களில் இராவணன் சிறந்த சிவபக்தனைச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான்.

தமிழ்நாட்டிற் சிறப்படைந்து வாழ்ந்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தை இலங்கைமீதும் செலுத்தினார்களென இரு நாட்டுச் சரித்திரங்களும் கூறுகின்றன. அவர்களது ஆளுகைக்குள் இலங்கை இருந்த காலங்களில், சைவசமயக் கொள்கைகளும், நிலையங்களும் இலங்கையிற் பரவின. அத்தகைய தொடர்பின் பயனைத்தான் இன்றும் இலங்கை சைவசமயத்திற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒரு சிறந்த நிலைக்களமாக விளங்குகின்றது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில், தேவநம்பியதீசன் காலத்திற் பௌத்த சமயம் இலங்கையிற் புகுந்தது. அன்று தொடக்கம் இன்று வரையும், சிங்களருடைய சமயம் பௌத்த மதமாகவே இருக்கின்றது. பௌத்த மதம் இலங்கையிற் பரவியபோதே பௌத்த கலாச்சாரப்

பண்புகளும் பரவின. இந்தியாவில் அக்காலத்தில், மக்களுடைய வாழ்க்கைக்குத் தேவைப்பட்ட கலாச்சாரப் பண்புகள் யாவும், சமயத்தையே ஆதாரமாகக்கொண்டு வளர்ந்தன. அரசியல், கல்விமுறை, கலை, சமூக அமைப்பு என்பனவும் சமய வளர்ச்சிக்குத் துணை புரிந்து நின்றன. இத்தகைய இயல்புகள் வாய்ந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த பௌத்த மதமும் அம்முறையைப் பின்பற்றிச் சமயத்தையும், கலைப் பண்புகளையும் வளர்த்தது. தர்ம சக்கரவர்த்தியாகிய **அசோகன்** காலத்தில் இந்தியாவில் பௌத்த மதம் எவ்வித சிறப்புக்களுடன் விளங்கியதோ, அவ்வித சிறப்புக்களுடன் இலங்கையிலும் அது விளங்கிய தெனலாம். சமயத் தொடர்பின் பயனாகவும், அரசியற் றொடர்பின் பயனாகவும் சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலிய கலைத் துறைகளில் இரு நாடுகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை ஏற்பட்டது.

இலங்கையிற் பரவிய பௌத்த மதம், சிங்கள அரசர்களின் ஆதரவைப் பெருமளவிற் பெற்றுக்கொண்டதால், மற்றெந்த நாட்டிலும் பார்க்க இலங்கையில் அது நன்கு வளர்ந்து நிலைபெற்றது. இந்தியாவில் சைவ, வைணவ சமயங்கள் மேம்பட்டு விளங்கிய காலத்திலே பௌத்த கலைப்பண்புகள் சிதைவுற்றன. ஆனால், அப் பண்புகள் இலங்கையில் இன்றும் நின்று நிலவுவது மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். பௌத்த சமயத்தையும், அதனோடு தொடர்புடைய கலைப் பண்புகளையும் இக் காலத்தில் நன்கு தெரிந்து கொள்வதற்கு இலங்கையே உலகில் முதலிடம் பெற்று விளங்குகின்றது.

# இரண்டாம் அத்தியாயம்


## இலங்கையிற் சிற்ப வளர்ச்சி (1)

இவ் வத்தியாயத்தில் இலங்கையிற் கட்டடக் கலை, சிற்பக் கலை என்பன எவ்விதம் வளர்ச்சி பெற்றனவென்பதைச் சுருக்கமாக ஆராய்வாம். கட்டடக் கலையையும் (Architecture) உருவங்கள் அமைக்கும் கலையையும் (Sculpture) இந்திய நாட்டு மொழிகளில் 'சில்பம்' என்றும், அத் தொழில்களைச் செய்வோரைச் 'சில்பி'கள் என்றும் அழைக்கின்றார்கள். அவ் வழக்கைப் பின்பற்றித் தமிழிலும் **சிற்பம், சிற்பிகள்** என்னுஞ் சொற்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கைச் சிற்ப வளர்ச்சி, இந்திய நாட்டின் சிற்ப வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்புடையதாகும். இரு நாடுகளும் ஒரே கலை இலக்கணங்களையே அடிப்படையாகக் கொண்டு கலைகளை வளர்த்துவந்தன. எங்ஙனம், இந்திய சிற்பங்கள் சமயத் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றனவோ, அங்ஙனமே, இலங்கையிலும் சிற்பங்கள் சமயத் தொடர்புடையனவாக அமைந்துள்ளன.

இலங்கையிலுள்ள பௌத்த சமய நிலையங்களும், அவற்றிற் காணப்படும் சிற்ப வடிவங்களும், இந்திய சிற்ப முறைகளைத் தழுவியனவேயாம். **இலங்கை, யாவா, சுமாத்திரா, பாலி, கம்போடியா** முதலிய நாடுகளிற் காணப்படும் சிற்பங்களை **இந்திய சிற்பம்** (Indian Art) என்னும் பெரும் பிரிவில் வைத்தே, கலைப் புலவர்கள் ஆராய்கின்றனர். இக் காரணம் பற்றியே, இலங்கை முதலிய நாடுகளின் சிற்ப வளர்ச்சி இந்திய சிற்ப வரலாற்று நூல்களில் எடுத்துக் கூறப்படுகின்றது. **இலங்கைச் சிற்பம், இந்திய சிற்பத்தின் ஒரு பிரிவெனக் கூறின் அது மறுக்கமுடியாத உண்மையாகும்.** இலங்கைச் சிற்பங்களில், இந்தியாவிற் காணப்பெறாத பல புதிய அம்சங்கள் காணப்படுகின்றனவெனினும், அவை இந்திய சிற்ப இலக்கணங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

இலங்கையில் உபயோகிக்கப்பட்ட சிற்ப நூல்கள் **மயமதமும், ரூபாவளியும்** ஆகும் என டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் கூறுகின்றார்கள். மயமதம் 1837-ம் ஆண்டில் வடமொழியிலிருந்து


இலங்கை
புராதன நகரங்கள்
திருவடிநிலை
கீரிமலை
சிங்கைநகர்
கதிரைமலை
யாழ்ப்பாணம்
இராமேசுரம்
மாதோட்டம்
திருகோணமலை
மிகுந்தலை
அநுராதபுரம்
அவுகன
மின்னேரியா
சிகிரியா
பொலநறுவை
தம்புள்ளா
திம்புலாகலா
மட்டக்களப்பு
யாப்பகூவா
குருநாக்கல்
மாத்தளை
மகியங்கனை
தம்பதேனியா
கண்டி
பொல்காவலை
கம்பளை
திருக்கோவில்
களனியா
கொழும்பு
ஸ்ரீதாவாக்கை
சமந்தகூடம்
கதிர்காமம்
மாத்தறை

இலங்கையிற் பெரும்பாலும் காணப்படும் சிற்ப வடிவம் புத்த பகவானதே. அநுராதபுரத்திலும் பொலநறுவாவிலும் அழகு வாய்ந்த பெரும் தாதுகோபங்கள் பல உண்டு. அத் தாதுகோபங்களுக் கருகில் சிறந்த சிற்ப வடிவங்கள் காணப்படுகின்றன. நகைச்சுவை பொருந்திய குட்டையான மனித வடிவங்களையும், யாளி, யானை, சிங்கம் முதலிய வடிவங்களையும் வாசற்படிக் கட்டுகளில் அமைப்பதில், இலங்கைச் சிற்பிகள் கைதேர்ந்தவர்களாக விளங்கினார்கள். ஆலயங்களின் வாயில்களில் சந்திர வட்டப் படிக் கல்லுகளை அழகிய சிற்பங்களுடன் அமைக்கும் வழக்கம், இலங்கையிற் காணப்படும் விசேட அம்சங்களி லொன்று. இலங்கையிலுள்ள நாகதுவாரபாலகர்களைப் போன்றன எந்நாட்டிலு மில்லையென்றே கூறுதல்வேண்டும்.

## I அநுராதபுரக் காலம்

### மௌரிய சிற்ப முறை

அநுராதபுரக் காலம் தேவநம்பியதீசன் காலந் தொடங்கி 9ஆம் நூற்றாண்டின் இறுதியோடு முடிவடைகின்றது. தீசன் மிகுந்தலையில் ஒரு விகாரத்தையும், அநுராதபுரத்தில் தூபாராம தாதுகோபத்தையும் (படம் 1) கட்டுவித்தான். இன்று காணப்படும் தூபாராம தாதுகோபம், தீசன் கட்டிய தாதுகோபம் அழிந்த பின்பு கட்டப்பட்டதாகும். மகியங்கணத் தாதுகோபமும் இவனாற் கட்டப்பட்டதெனக் கூறப்படுகின்றது.[1] ஈசுரமுனிய விகாரையும், வேசகிரி விகாரையும் இவன் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக் கோவில்களாகும்.

துட்டகைமுனு (கி. மு. 107 –77) ருவான்வெலிசாயா (படம் 2) என்னும் தாதுகோபத்தையும், லோகமகாபாயா என்னும் உபோசாத மாளிகை (விரத இல்லம்) யையும் கட்டுவித்தான். ருவான்வெலிசாயா தாதுகோபம் இந்தியாவிலுள்ள சாஞ்சித் தாதுகோபங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. துட்டகைமுனு ருவான்வெலிசாயாவில் அடக்கஞ் செய்வதற்கு வேண்டிய ஞாபக அஸ்திச் சின்னங்களை, ஆந்திர நாட்டிலிருந்து தருவித்தானென்று கூறப்படுகின்றது.[2] மிரிசவதி

1. *A Short History of Ceylon — p. 14..*
2. *Buddhist Remains in Andhra — p. 141.*

தாதுகோபமும் துட்டகைமுனுவாற் கட்டப்பட்டது. **வத்தகாமனி அபயன்** காலத்தில் (கி. மு. 43) **அபயகிரி** தாதுகோபமும், **இலங்காராமா** தூபமும், எல்லாளரின் சமாதியெனக் கருதப்பட்ட **தக்கின** தூபமும் கட்டப்பட்டன. முதலாம் **பாத்திகாபயன்** மகாதூபம் என்ற ரூவான்வெலிசாயாவுக்குச் சில சிற்ப அலங்காரங்களைச் செய்வித்தான். அவன் சகோதரனான **மகாதாட்டிக மகாநாகன்** மிகுந்தலை மலை உச்சியில் ஒரு தாதுகோபத்தைக் கட்டுவித்தான். **கயவாகு** (கி. பி. 173 – 195) அபயகிரி தாதுகோபத்தைப் பெருப்பித்துச் சில அலங்காரங்களைச் செய்வித்தான். **கனிஷ்டதீசன்** (கி. பி. 226 – 244) அபயகிரிக்கு வாகல்கடவைகளைக் கட்டினான். **சேதவனராமா** (படம் 3) தாதுகோபம் கி. பி. 4ஆம் நூற்றாண்டில் **மகாசேனனாற்** கட்டப்பட்டது. இதுவே புத்த உலகத்தில் மிகப் பெரிய தாதுகோபமாகும்.

1934ஆம் ஆண்டு காணப்பட்ட மிகுந்தலை **கந்தகசைத்திய** (படம் 4) தாதுகோபம் இலங்கையிலுள்ள மிகப் பழைய தாதுகோபங்களில் ஒன்றாகும். இத் தாதுகோபத்தைக் கட்டியவர்கள் யாரென்பது அறியக் கூடியதாயில்லை. கி. மு. 59 – 50 ஆண்டளவிலிருந்த **வஞ்சதீசன்** இத் தாதுகோபத்தைப் பெருப்பித்துச் சில திருத்தங்களைச் செய்தானென மகாவம்சம் கூறுவதினால், இத் தாதுகோபம் அவன் காலத்திற்கு முந்தியதாக வேண்டும். கந்தக சைத்தியத்திற் காணப்படும் வாகல்கடவைகள் மிகச் சிறந்த சிற்ப நுட்பங்கள் பொருந்தியன. அவற்றுள் கிழக்குப் பக்கத்து வாகல்கடத்தின் விமானமும், சித்திரங்களும் சிதைவுறாது நல்ல நிலையில் இருக்கின்றன.

## ஆந்திர சிற்பமுறை

இந்தியாவில் அசோக அரசருக்குப் பின், பௌத்த மதத்தைப் போற்றிவளர்த்த பெருமக்கள் ஆந்திர நாட்டு மன்னர்களேயாவர். **அமராவதி, நாகார்ச்சுன குண்டம்** முதலிய இடங்களில் இன்றுஞ் சிறந்த பௌத்த சிற்பங்கள் காணப்படுகின்றன. கி. மு. 225 — கி. பி. 225 வரை ஆண்ட **சதவாகன** அரச பரம்பரையினர் காலத்தில் ஆந்திர நாட்டுக்குப் பிற நாட்டுத் தொடர்பு ஏற்பட்டது மாத்திரமன்றி, பௌத்த சமயமும் அந்நாட்டிற் சிறப்பெய்தியிருந்தது. ஆந்திர நாட்டில் பௌத்த சமயம் சிறந்து விளங்கிய காலத்திற்றான்,

இலங்கையிலும் அது சிறப்புடன் வளர்க்கப்பட்டது. இரு நாடுகளுக்கும் பல தொடர்புகளிருந்தனவெனச் சரித்திரம் கூறுகின்றது.

"இலங்கையில் பௌத்த சமய நூல்கள் ஏராளமாகச் சேகரிக்கப்பட்ட காரணத்தால் அந்நாட்டுக்கு அநேக யாத்திரிகர்களும், பண்டிதர்களும் சென்றனர். நாகார்ச்சுனரும், ஆரிய தேவரும் அந்நாட்டுடன் தொடர்புள்ளவர்களாயிருந்தனர். பிற்காலத்தில் புத்த தேவரும், புத்த தத்தரும் அந்நாட்டு நூல் நிலையங்களைப் பயன்படுத்தினர்"[1] என ஓர் அறிஞர் கூறுகின்றார். இத்தகைய தொடர்பின் பயனாகவே ஆந்திரச் சிற்ப முறை இலங்கையிற் பரவியதெனலாம்.

சிராவத்தியின் அற்புதச் செயலையும் (படம் 5), மாயாதேவியின் கனவையும் (படம் 6) விளக்கும் சித்திரங்களே, இலங்கையிற் காணப்படும் பழமை பொருந்திய சிற்பவடிவங்களாகும். அவை ஆந்திரச் சிற்ப முறையைத் தழுவிச் செய்யப்பட்டன. கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையில் அவற்றை இப்பொழுதும் காணலாம். அவற்றின் இனத்தைச் சேர்ந்த வேறு சித்திரங்கள் சேதவனராமா தாதுகோபத்திலுள்ளன. கந்தக சைத்தியத்திலுள்ள சித்திரங்களிலும் அமராவதிச் சிற்ப அம்சங்கள் பொருந்தியிருக்கின்றனவென்பது, டக்டர் பரணவிதான அவர்களின் கருத்து. சேதவனராமா தாதுகோபத்திலுள்ள சிற்பங்கள் இலங்கையிற் செதுக்கப்பட்டன. அவற்றுள் சிறந்தன நாகராஜனையும், உபதேசிக்கும் போதிசத்துவரையும் குறிக்கும் வடிவங்களாகும். ரூவான்வெலிசாயா தாதுகோபத்தின் பக்கத்தில் மூன்று, நின்ற பாவனையுடைய உருவங்கள் எடுக்கப்பட்டன. அவையும் அமைப்பு முறையில் அமராவதிச் சிற்பங்களை ஒத்தன.[2]

## குப்த சிற்ப முறை

ஆந்திரருக்குப் பின் வட இந்தியாவிற் சிறந்து விளங்கியவர்கள் குப்தர்களேயாவர். குப்தர் காலத்தில் கலைகள் போற்றி வளர்க்கப்பட்டன. குப்த அரசர்கள் பௌத்த சமயத்தையும், இந்து சமயத்தையும் சமமாக வளர்த்தனர். குப்தர் காலத்துச் சிற்ப முறையிலமைந்த வடிவங்கள் அநுராதபுரத்திற் பல உள. கொழும்பு

1. *Buddhist Remains & Andhra History — p. 141.*
2. *Buddhist Art — 84.*

நூதன பொருட்காட்சிச்சாலையில் இன்று காணப்படும் **தொலுவிலா புத்தர் வடிவம்** (படம் 7) இலங்கையிற் காணப்பட்ட வடிவங்களுட் சிறந்ததென்பது கலைப்புலவர் கருத்து. இவ் வடிவம் நாலாம் நூற்றூண்டுக் குப்தர் சிற்ப முறையில் அமைந்திருக்கின்றதென்பது ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் கருத்து. குப்த சிற்ப முறையைச் சேர்ந்த இரண்டு உருவங்களின் தலைகள் கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையிற் காணப்படுகின்றன. அவை, போதிசத்துவரதும் மைத்திரேயரதும் தலைகளாகும். ஈசுரமுனிய விகாரையிற் காணப்படும் **தம்பதிகளின் சிற்பமும்** (படம் 8), அநுராதபுரத்து இராணிமாளிகை வாசற் சந்திரவட்டக் கற்படியும் (படம் 9) குப்த சிற்ப முறையில் அமைந்துள்ள சிற்ப வடிவங்களாகும்.

இலங்கையின் பல பாகங்களில் இன்று காணப்படும் பழைய போதிசத்துவ வடிவங்களும், பிற மகாயன வடிவங்களும் குப்தர் காலத்தனவும், அதற்குப் பிந்தியனவுமாம்.

### பல்லவ சிற்ப முறை

குப்தர் காலத்திற்குப் பின் இந்தியாவில் பௌத்தமதம் மறையத் தொடங்கியது. சைவ, வைணவ சமயங்கள் புத்துயிர்பெற்று எழுந்தன. இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள சமயத் தொடர்பு குன்றியது. அரசியல் துறையில் மாத்திரமே காலத்திற்குக் காலம் தொடர்புகள் ஏற்பட்டு வந்தன. அரசியல் தொடர்பின் பயனாகச் சைவ, வைணவ சமயங்கள் நாட்டிற் பரவின.

இரண்டாம் **காசியப்பன்** மகன் **மானவர்மன்**, (641 — 650) இரண்டாம் **தாதோபதீசனால்** (650 — 658) முறியடிக்கப்பட்டு, பல்லவ அரசனை முதலாம் **நரேந்திரவர்மனிடம்** சரணடைந்து, பல்லவ அரச சபையில் வாழ்ந்து, அவனுதவியால் மறுபடியும் இலங்கைக்கு அரசனானான். பல்லவர்களது தொடர்பினால், பல்லவர் காலத்துச் சிற்ப முறை இலங்கையிற் பரவ நேர்ந்தது.

ஈசுரமுனிய விகாரையிலுள்ள பாறையின் பிளவுக் கிருபக்கத்திலும் காணப்படும் யானை யுருவங்கள் (படம் 10) மகாபலிபுரத்திலுள்ள கங்காவதாரச் சிற்ப உருவங்களை நினைவூட்டுகின்றன. இப் பாறையின் மேற்

புறத்தே செதுக்கப்பட்ட மனிதவடிவமும் குதிரைத்தலையும்(படம் 11) பல்லவ சிற்ப முறையில் அமைந்துள்ளன. நாலந்தாவிலுள்ள 'கெடிகே' (படம் 12) என்னும் ஆலயம் பல்லவமுறையி லமைந்தது. ஈசுரமுனிய விகாரைக்குச் சிறு தூரத்திலுள்ள ஒரு சிறு குளத்தின் கற்பாறையில் யானைகளும், மீன்களும் நிறைந்த ஒரு தாமரைத் தடாகம் செதுக்கப்பட்டுள்ளது. அதுவும் பல்லவ சிற்ப முறையில் அமைந்துள்ளது.[1]

அநுராதபுரக் காலத்தில், கட்டடங்களின் அடித்தளங்களும், தூண்களும் மாத்திரமே கருங்கற்களால் அமைக்கப்பட்டன. மேற்பகுதிகள் மரங்களாலும், செங்கற்களாலும் கட்டப்பெற்றன. அறவோர் பள்ளிகளினதும், அரசர் மாளிகைகளினதும் அடித்தளங்களை இன்றும் அழிந்த நிலையில் அநுராதபுரத்திற் காணலாம்.

1. *History of Indian & Indonesian Art — p. 162.*

மூன்றும் அத்தியாயம்

# இலங்கையிற் சிற்ப வளர்ச்சி (2)

## II பொலநறுவாக் காலம்

### சோழ சிற்ப முறை

தென்னிந்தியாவிற் பல்லவர் ஆதிக்கம் அழிந்த பின் சோழர் வலுப்பெற்றனர். **முதலாம்** இராஜராஜன் (993—1014) சோழ மன்னருள் முதன்மைபெற்று விளங்கினன். அவ்வரசன் இலங்கையை வெற்றிகொண்டு பொலநறுவையைத் தலைநகராக்கி, ஆண்டுவந்தான். சோழராதிக்கம் இலங்கையிற் பரவியபோது அவர்களின் அரசியல் முறையும், சைவசமயமும், சோழ சிற்ப முறையும் பரவத்தொடங்கின. இராஜராஜன் **வானவன்மாதேவி ஈசுரமுடையார்** எனப் பெயர் கொண்ட ஒரு சிவாலயத்தை (சிவதேவாலயம் 2) (படம் 13) பொலநறுவாவிற் கருங்கற்றிருப்பணியாக அமைத்தான். இராஜராஜனுல் தொடங்கப்பட்ட அவ் வாலயம் அவன் மகன் **முதலாம் இராஜேந்திரனுல்** முற்றுவிக்கப்பட்டது. இவ் வாலயத்தில் இராஜேந்திரனதும் (1020—1042), ஆதிராஜேந்திரனதும் (1070) வரலாற்றுச் சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இராஜராஜன் காலத்தில் மாதோட்டத்தில் **இராஜராஜேஸ்வரம்** என்னும் ஒரு சிவாலயம் கட்டப்பட்டது. தேவாரப் பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரமே மாதோட்டத்திலிருந்த தலமாகும்.

இலங்கையிற் சோழர்களது ஆதிக்கம் அழிந்த பின்னர், **முதலாம் பராக்கிரமபாகு**வும், (1153 — 1186), அவனுக்குப் பின் ஆண்டோரும் பொலநறுவாவிற் சிறந்த பௌத்த ஆலயங்களையும், தாதுகோபங்களையும், மாளிகைகளையும் அமைத்து நகரைச் சிறப்பித்தார்கள். பொலநறுவாத் தாதுகோபங்கள் அமைப்பில் அநுராதபுரத்திலுள்ளனவற்றைப் போன்றன. ஆனுல் ஆலயங்களும், சிற்ப வடிவங்களும் பெரும்பாலும் சோழ சிற்ப முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. ஆலயங்களின் அடித்தளங்கள் கருங்கற்களாலும், மேற்றளங்கள் செங்கற்களாலும் அமைக்கப்பட்டன. அடித்தளங்களில் குட்டையான மனித வடிவங்களும், யாளி, சிங்கம், யானை முதலிய மிருக வடிவங்களும் அலங்காரச் சித்திரங்களாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

பராக்கிரமபாகு **மகாதூப** என்றும் **தமிழ மகாசய** வென்றும் வழங்கப்படும் மிகப் பெரிய தாதுகோபத்தைக் கட்டத் தொடங்கினன். இன்று அத் தாதுகோபம் முடிவடையாத நிலையில் திடலாகக் காட்சியளிக்கின்றது. **கிரிவிகார** (படம் 14) என்னும் தாதுகோபமும் அவனாற் கட்டப்பட்டது. உருக்குலையாத நிலையில் இன்று இலங்கையிற் காணப்படும் பழைய தாதுகோபம் இதுவேயாகும்.

பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்ட பௌத்த கோவில்கள் உருவத்திற் பெரியனவாயும், செங்கல், சுண்ணாம்பு ஆகியனவற்றாற் கட்டப்பட்டனவாயுமுள்ளன. **இலங்கைத்திலக** (படம் 15) ஆலயம், இலங்கையிலுள்ள மிகப் பெரிய பௌத்த ஆலயமாகும். செங்கற்களால் செய்யப்பட்ட 40 அடி உயரமுள்ள புத்த திருவடிவம் கர்ப்பக்கிரகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. **சேதவன ராம** விகாரம், (Northern Temple) (படம் 16) **வட்டதாகே, உத்தரா ராம** என்னும் **கல் விகாரை, பொத்கல் விகாரை** முதலியனவும் பராக்கிரமபாகுவினாற் கட்டப்பட்டன. அவ்வரசனது மாளிகையும், அத்தாணி மண்டபமும் உருக்குலைந்து கிடக்கின்றன. அவன் அநுராதபுரத்திற் பழுதடைந்திருந்த **லோகமகாபாயா** என்னும் விரத இல்லத்தையும் திருத்தி அமைத்தான் எனவும் கூறப்படுகின்றது.

**தூபாராம ஆலயம்** திராவிட சிற்ப முறையில் அமைந்துள்ளது. பொலநறுவாவில் உள்ள பௌத்த ஆலயங்களின் புறச் சுவர்களிற் காணப்படுஞ் சிற்ப வேலைப்பாடுகள், தென்னிந்திய கோயிற் சுவர்களிலுள்ள சிற்ப வேலைப்பாட்டை நினைவூட்டுகின்றன. அவ்வாலயங்கள் யாவும் சோழ சிற்ப முறையைப் பின்பற்றியே அமைக்கப்பட்டன வென்பது இரண்டாம் சிவாலயத்தையும், பௌத்த ஆலயங்களையும் ஒப்புநோக்கி ஆராய்வார்க்கு நன்கு புலனாகும். தூபாராம ஆலயத்தைப் பற்றி, பேர்சி பிரவுன் (Percy Brown) என்னும் ஆங்கிலக் கலைப்புலவர் பின்வருமாறு கூறுகின்றார் :

> தூபாராம ஆலயம் சோழர்களமைத்த சிவாலயங்களைப் பின்பற்றித் திராவிட சிற்ப முறையி லமைக்கப்பட்டிருப்பினும், அமைப்பு முறையிற் கருங்கற்களாற் கட்டப்படாத வேறுபாடுடையது. இவ் வேறுபாட்டைத் தவிர, மற்றெல்லாவிதத்திலும் தூபாராம ஆலயம் சோழர் முறையைப் பின்பற்றியதாயினும், சோழர் ஆலயங்களின் சிறப்பு இதன்கண் பொருந்தவில்லை.[1]

1. *Indian Architecture — Vol. I. p. 205.*

கல்விகாரையில் (படம் 17) அழகிய சிற்ப வடிவங்கள் காணப்படு கின்றன. அங்கு சுகாசனத்தி லமர்ந்திருக்கும் இரு புத்தவடிவங்களுண்டு. பரிநிர்வாண நிலையடைந்துள்ள 46 அடி நீளமுள்ள புத்தரின் வடிவமும், அவரது சீடர் ஆநந்தருடைய வடிவமும், விகாரையின் இடது பக்கத்திற் காணப்படுகின்றன. அவ் வடிவங்கள் கண்கவர் வனப்புடன் காட்சியளிக்கின்றன. பரிபூரண நிலை யடைந்துள்ள புத்த பகவான், தலையணையின் மேலுள்ள வலது கரத்தின் மேல், மூடிய கண்களுடனும், மலர்ந்த முகத்துடனும் படுத்திருக்கின்றார். ஆநந்தர் துக்கமும், சாந்தமும் நிறைந்த முகத்துடன், இரு கைகளையும் மார்போடு அணைத்த நிலையில், நடந்திருக்கும் நிகழ்ச்சியில் தன்னை மறந்து குருதேவரின் தலைப்பக்கத்தில் நிற்கின்றார். அமைதி நிறைந்த சூழ்நிலையில் மௌன அழகு பொலிய அமைக்கப்பட்டிருக்கும் இத் திருவடிவங்களைக் காண்பவருள்ளம் அமைதியும் இன்பமும் பெற்று ஆனந்தமுறும்.

பொத்கல் விகாரைக்குச் சமீபத்திலுள்ள பாறையிற் செதுக்கப்பட்டுள்ள வடிவமும் இலங்கையிலுள்ள சிறந்த சிற்ப வடிவங்களுள் ஒன்றாம். அது முதலாம் பராக்கிரமபாகுவின் வடிவம் எனக் கருதப்படுகின்றது. அவ் வடிவம், ஒரு முனிவரின் தோற்றத்துடன் காட்சியளிப்பதால், அது புலஸ்திய முனிவரின் வடிவமெனக் கருதுவாருமுளர். பழைய நூல்களில் பொலநறுவா, புலஸ்திய நகரமெனவும் பெயர்பெற்றுள்ளது. அவ் வடிவம் யாரைக் குறிக்கின்றதென்பதை இதுவரை எவரும் அறுதியிட்டுக் கூறவில்லை. பராக்கிரமபாகு ஒரு முனிவரின் வடிவத்துடன் ஏட்டைத் தாங்கிய கைகளுடன் நிற்பதின் காரணம் யாதென்பதற்குத் தகுந்த சமாதானம் இதுவரை எவரும் கூறவில்லை. அவ் வடிவம் ஒரு முனிவரின் வடிவம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். அது அகத்தியரின் வடிவம் எனக் கொள்ளுதற்கும் இடமில்லை. ஏனெனில் யாவாவில் அகப்பட்ட அகத்திய முனிவரின் சிலை வேறுவிதமாகக் காணப்படுகின்றது. ஆனால், அச் சிலையிற் காணப்படும் சிற்ப அம்சங்கள் பொலநறுவாச் சிலையிலும் காணப்படுவதால் இரு சிலைகளும் ஒரே சிற்ப இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டே அமைக்கப்பட்டன வென்பது மாத்திரம் துணிபாகலாம்.

பொலநறுவாவிலுள்ள **வட்டதாகே** (படம் 18) முதலாம் பராக்கிரமபாகுவால் அமைக்கப்பட்டுப் பின் **நிசங்கமல்லனால்** திருத்தப்பட்டது.[1] அது இலங்கையிலுள்ள பௌத்த சிற்பக் கட்டடங்களுள் தலைசிறந்த தென்பது **பெல் ( Bell )** என்னும் அறிஞர் கருத்து.[2]

அவ்வாலயம் நான்கு வாசல்களையுடையதாய் வட்டமாக அமைந்துள்ளது. ஆலயத்தின் மத்தியில் உருக்குலைந்த ஒரு சிறிய தாதுகோபம் காணப்படுகின்றது. அத் தாதுகோபத்தின் முன்புறத்திலுள்ள நான்கு வாசல்களுக்கும் நேரே நான்கு புத்த வடிவங்கள் காணப்படுகின்றன. வாசற்படிகளின் இரு பக்கங்களிலும் அலங்காரமான வேலைப்பாடுகள் நிறைந்த நாகதுவாரபாலக உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள சுவர்களின் புறப்பக்கத்திற் பூக்களால் அமைக்கப்பெற்ற அலங்காரச் சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. படிகள் ஒவ்வொன்றிலும் அலங்காரச் சித்திரங்களுள. கீழ்ப் படிகளுக்கு முன்பாக நான்கு வாசல்களிலும் நான்கு சந்திர வட்டக் கற்படிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாலயத்தின் சிற்ப வனப்பையும், வேலைத்திறனையும் எழுத்தினால் வர்ணிப்பது முடியாத செயலாகும். சிற்பக் கலையில் ஆர்வமுடையோர் நேரிற் கண்டு இன்புறுவதே பொருத்தமாகும். இவ்வரிய சிற்பங்களைக் கலையுலகிற்கு அளித்து, எமது நாட்டிற்கு உயர்வையும், புகழையும் தேடிக்கொடுத்த சிற்பிகளை நாம் மறவாது போற்றுதல் வேண்டும்.

முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின் பொலநறுவாவில் அழகிய சிற்ப நிலையங்களை அமைத்துக் கலையை வளர்த்த மன்னன் **நிசங்கமல்லனாவான்.** அவன் **ஹட்டதாகே** (படம் 19) என்னும் தந்த ஆலயத்தையும் **நிசங்கமல்ல லதாமண்டபத்தையும்** (படம் 20), **இரங்கொத விகாரமென்னும்** தாதுகோபத்தையும் கட்டுவித்தான் (1187). வட்டதாகே ஆலயத்திற்குப் பல சிற்பச் சிறப்புகளையும் அமைத்தான்.

வடமேற்கு மாகாணத்தில் **சேசறுவா** என்னும் இடத்திற் காணப்படும் பதினாறடி உயரமுள்ள புத்த வடிவமும், **அவுகனவிற்** காணப்படும் நாற்பத்தாறடி உயரமுள்ள புத்தர் சிலையும் (படம் 21) பொல

1. *Indian & Indonesian Art. — p. 165.*
2. *"The most beautiful specimen of Buddhist stone architecture in Ceylon."*

நறுவாக் காலத்துச் சிற்ப முறையில் அமைந்தன வென்பது டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் கருத்து. அவுகன புத்த திருவடிவம் இலங்கையில் மாத்திரமன்றி; ஆசியா முழுவதிலுமுள்ள சிறந்த புத்த வடிவங்களில் ஒன்று என்பது பலர் கருத்து. அவ்வடிவம் பராக்கிரம பாகுவால் அமைக்கப்பட்ட தென்பது கர்ணபரம்பரைக் கதை. டக்டர் பரணவிதான, அவ் வடிவம் அமராவதிச் சிற்ப முறையைத் தழுவியதாகக் காணப்படுவதால் அது 12ஆம் நூற்றாண்டிற்கு மிக முந்தியது என்கின்றார். வடிவத்தைப்பற்றிய கால நிர்ணயம் எப்படி இருப்பினும் அதன் சிற்ப அமைப்பும், கலை வனப்பும் எல்லோரும் போற்றும் தரத்தன. மைசூரைச் சேர்ந்த சிரவண பெல்கொலா விற் காணப்படும் கோமடேஸ்வரர் திருவடிவத்திலும் பார்க்க இவ் வடிவம் சிறியதாயினும், கலை வனப்பில் அதனிலும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

பொலநறுவையிற் காணப்படும் கருங்கற் தாமரைத் தடாக (Lotus tank) மும், அரண்மனைக் கோட்டத்திற்கு அருகிலுள்ள தடாகமும் சிற்ப வனப்புப் பொருந்தியன.

முதலாம் பராக்கிரமபாகு கட்டிய சேதவனராம எனப்படும் திவங்க ஆலயத்தில் புத்த சாதகக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் காணப்படுகின்றன. அவ்வாலயத்தின் மூர்த்தி மிக உயரமானதும், திரிபங்க நிலையுடையதாகவு மமைந்துள்ளது. அக் காரணம்பற்றியே இவ் வாலயம் 'திவங்க' ஆலயம் எனவும் பெயர்பெற்றுள்ளது.

### பாண்டிய சிற்ப முறை

பொலநறுவைக் காலத்தின் இறுதியிற் பாண்டியர்களின் ஆதிக்கம் இலங்கையில் ஒரு சிறிது ஏற்பட்டது. அத் தொடர்பின் பயனாகப் பாண்டியரின் சிற்ப முறை நாட்டிற் பரவியது. பொலநறுவாவிலுள்ள முதலாம் சிவாலயம் பாண்டிய சிற்ப முறையிற் கட்டப்பட்ட ஆலய மாகும். அவ் வாலயம் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ அல்லது 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ கட்டப்பட்டதாக விருக்க வேண்டும். சிலர் இவ் வாலயம் 1ஆம் பராக்கிரமபாகுவினாற் கட்டப்பட்டதென்றும் வேறு சிலர் நிசங்கமல்லனாற் கட்டப்பட்டதென்றும் கூறுவர்.[1]

1. *J. R. A. S. Ceylon—Vol. XXIV. No. 68, 1915 — p. 190.*

அவ் வாலயம் பாண்டிய சிற்ப முறையி லமைந்திருத்தலால், 2ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அல்லது அவன் காலத்திற்குப் பின் கட்டப்பட்டதென நம்புதல் பொருத்தமாகக் காணப்படுகின்றது. பாண்டியர்கள் துணையோடு பொலநறுவாவில் அரசு வீற்றிருந்த மன்னன் அவனேயாவன்.

1ஆம் சிவாலயம் (படம் 22) இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களுளெல்லாம் தலைசிறந்து விளங்குவதாகும்.[1]

கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கும் சைவத் திருவுருவங்கள் 1ஆம் சிவாலயத்திலிருந்தும் 5ஆம் சிவாலயத்திலிருந்தும் எடுக்கப்பட்டவை. பொலநறுவாவிற் பல இந்து ஆலயங்கள் இருந்தனவென்பதற்குப் பல சான்றுகளுள. 1ஆம், 2ஆம் சிவாலயங்களைத் தவிர மற்றெல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. பொலநறுவாவி லிருந்து ஆட்சி புரிந்த அரசர்களின் காலத்தில் நாட்டிற் சைவ சமயமும் வளர்ந்து சிறப்பெய்தி யிருந்ததென்பதற்கு அந் நகரிற் காணப்படும் சைவ ஆலயங்களும், அங்கு கண்டெடுக்கப்பட்ட சைவத் திருவுருவங்களும் போதிய சான்றுகளாகும். நிசங்கமல்லன் இராமேஸ்வரத்தில் ஓர் ஆலயத்தைக் கட்டி அதற்கு நிசங்கேஸ்வரமெனப் பெயரிட்டான் என்றும் கூறப்படுகின்றது.[2] பௌத்த ஆலயங்களைக் கட்டிக் களித்த அவ் வரசன் சைவாலயம் ஒன்றையும் கட்டியமை, அவனது விரிந்த மனப்பான்மையையும் சமய சமரசத்தையும் விளக்குகின்றதன்றோ!

## III. கண்டி நகர்க் காலம்

### விஜய நகர நாயக்க சிற்ப முறைகள்

கண்டி நகர்க் காலமென நாம் குறிப்பிடும் காலம் 14ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகி 18ஆம் நூற்றாண்டுடன் முடிவடையும்.

---

1. *"The Siva Devalaya No. I. is the choicest example of a Hindu Temple found at Polonnaruwa, if not throughout the Island."* — Sir P. Arunachalam.
*"The Siva Devalaya No. I. is the finest Hindu Shrine in Ceylon."* — Dr. Ananda Coomaraswamy.

2. *A Short History of Ceylon — p. 63*

பொலநறுவாக் காலத்தின் பின் இலங்கை அரசர்கள் **தம்பதேனியா, குருநாக்கல், யாப்பகூவா, கம்பளை, கோட்டை, சீதாவாக்கை, இராயகம** முதலிய இடங்களிலிருந்து அரசு செய்துவந்தனர். கடைசியாக, சுதந்திர இலங்கையரசு கண்டி நகரிலிருந்து மறைந்தது. கண்டியிற் **புத்த தந்த ஆலயத்தைக்** கட்டுவித்தவன் **விமலதர்ம சூரியா** வென்னும் அரசனாவன். அவ் வாலயம் அவனால் இரண்டடுக்கு மாடங்களுள்ள ஆலயமாகக் கட்டப்பட்டது.

பதினாலாம் நூற்றாண்டின் பின் இலங்கையிற் சிறந்த சிற்ப ஆலயங்கள் அமைக்கப்படவில்லை. அரசியல் நிலை சீர்குலைந்து இருந்ததினால் அரசர்கள் அடிக்கடி தலைநகரங்களை மாற்றி வாழ்ந்தனர். ஒவ்வொரு நகரமும் சிறிய காலத்திற்கே இராசதானியாக விளங்கியமையால் அந் நகரங்களிற் பெரும் தாதுகோபங்களாவது, விகாரைகளாவது, மாளிகைகளாவது அமைக்கப்படவில்லை.

**நான்காம் விஜயபாகு**வால் (1271 — 73) யாப்பகூவாவிற் கட்டப்பட்ட அரண்மனையின் சில பகுதிகள் (படம் 23) இன்றும் காணப்படுகின்றன. அங்குக் காணப்படும் சிற்பப் பகுதிகள் மிகச் சிறந்தவையென்று கருதப்படுகின்றன. **யாப்பகூவாச் சிற்பங்கள்** பாண்டிய சிற்ப முறையில் அமைந்துள்ளன. அங்கு காணப்படும் கஜ சிம்மத் தலைகள், தூண்கள், கூடுகள், நடனச் சிற்பங்கள் முதலியன பாண்டியர் காலச் சிற்பங்கள் போன்றன.

பதினான்காம் நூற்றாண்டில் **நான்காம் புவனேகபாகு** காலத்தில் அவனது சேனாதிபதியாகிய **சேனா இலங்காதிகார** என்பான், கம்பளைக்குச் சமீபத்தில் ஒரு சிறு குன்றில் **இலங்காதிலக விகாரத்தைக்** (படம் 24) கட்டுவித்தான். அது செங்கற்களால் அமைந்துள்ளது. பொலநறுவாக் காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயங்களைப் போலவே இதனமைப்பு இருப்பினும், மூலஸ்தானத்திற்கு முன் இரண்டு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ் வாலயத்தின் நிலப் படத்தை நோக்கும்போது அது கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம் ஆகியவற்றுடன் அமைந்துள்ள ஒரு சைவாலயத்தை நினைவூட்டுகின்றது. கர்ப்பக்கிரகத்தில் புத்த திருவடிவமும், உட்சுற்றுப் பிரகாரத்தில் வேறு தெய்வங்களின் வடிவங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

**கடலதேனியாவிலுள்ள விகாரமும்** (படம் 25) நான்காம் புவனேக பாகுவின் காலத்திற் கட்டப்பட்டது. அவ்வாலயம் கணேஸ்வராசாரி என்னும் தென்னிந்திய சிற்பியினாற் கட்டப்பட்டதென்று கூறப்படுகின்றது. அது முழுவதும் கருங்கற்களால் அமைந்துள்ளது. இலங்கையிற் கருங்கற்களால் அமைக்கப்பட்ட பௌத்த விகாரம் இதுவேயாகும்.

கண்டி அரசர்களின் காலத்தில் அமைக்கப்பட்ட தந்த ஆலயத்திலும் (படம் 26), **எம்பக்க தேவாலயத்திலும்** (படம் 27) மரச் சித்திரங்கள் பலவுள. கண்டியிலுள்ள அத்தாணி மண்டபத் தூண்களும், தந்த ஆலயத் தூண்களும் ஒரே விதமான அமைப்புப் பொருந்தியன; அவை தென்னிந்திய நாயக்க மன்னர்கள் கட்டிய தூண்களையொத்தவை. தென்னிந்திய தூண்கள் கல்லாலமைக்கப்பட்டுள்ளன; கண்டித் தூண்கள் மரத்தினால் அமைக்கப்பட்டுள்ளன.

கம்பளையிலுள்ள எம்பக்க தேவாலயத் தூண்கள், கண்டி அத்தாணி மண்டபத் தூண்களுக்கு முந்தியன. கம்பளை அரசர் காலத்தில் எம்பக்க தேவாலயம் கட்டப்பட்டது. மத்திய கால மரச் சித்திர வேலைப்பாட்டின் சிறப்பிற்கு, இவ் வாலயம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

## IV. கொழும்பு நகர்க் காலம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின்பின் பௌத்த ஆலயங்கள் பழைய முறையிற் கட்டப்படவில்லை. ஆனால், பழைய ஆலயங்களும், தாதுகோபங்களும் திருத்தப்பட்டு வருகின்றன. **களனியா விகாரம்** (படம் 28) முற்றாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. **அநுராதபுர ருவான்வெலிசாயா** புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. ருவான்வெலிசாயாவிலுள்ள கருங்கற் பகுதிகள் சில தென்னிந்திய சிற்பிகளால் இக்காலத்திற் செய்யப்பட்டவை. களனியா விகாரை, தென்னிந்திய சிற்ப முறையில் அமைக்கப்பட்டுள்ளது. சிற்பிகள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இதன் மர வேலைப் பகுதிகள் கண்டி நகர்க் கால முறையில் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

கொழும்பு நகரிலுள்ள **பொன்னம்பலவாணேஸ்வரர் சிவாலயம்** (படம் 29) முழுவதும் கருங்கற் திருப்பணியாகச் **சேர் பொன். இராமநாதனால்** அமைக்கப்பட்டது. அவ்வாலயத் திருப்பணி முற்றாய்

முடியவில்லை. திருகோணமலையைச் சேர்ந்த தம்பலகாமத்திலும், யாழ்ப்பாணத்திலும், பிறவிடங்களிலுமுள்ள சைவாலயங்களில், இக் கால தென்னிந்திய சிற்ப முறையைப் பின்பற்றிக் கோபுரங்களும், கர்ப்பக்கிரகங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சுதந்திர இலங்கையில், பௌத்த மக்களும், சைவ மக்களும் தங்கள் புராதன ஆலயங்களைத் திருத்தி யமைத்துவரவேண்டுமென் னும் நினைவுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். அவ்விதம் அவர்கள் செய்யும்பொழுது இந்திய இலங்கைச் சிற்ப இலக்கணங்களுக்கமையச் செய்வார்களாயின் இலங்கையில் மறுபடியும் எமது சொந்தக் கட்டடக் கலையும், சிற்பக் கலையும் மறுமலர்ச்சி யடையும் என்பது திண்ணம். அவ்வழியில் எல்லோருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்த சேர் பொன். இராமநாதன் அவர்களின் கலை ஆர்வமும், சமயப் பற்றும் எல்லோ ராலும் பாராட்டத்தக்கனவாகும்.

## நான்காம் அத்தியாயம்

# தாதுகோபங்கள்

**தா**துகோபமே பௌத்த சமயத்தின் சிறந்த சின்னமாக விளங்குகின்றது. **தாதுகர்ப்ப** என்னும் சொற்றொடர் பிற்காலத்தில் 'தாதுகோப' என வழங்கப்பட்டது. தாதுகர்ப்ப என்பதின் பொருள் சமய சம்பந்தமான சின்னங்கள் வைக்கப்பட்ட அறை (Relic Chamber) என்பதாகும்.


இறந்தவர்களின் ஞாபகத்திற்காக அவர்கள் உடலைப் புதைத்த விடங்களிற் கற்கள் நாட்டி, அக் கற்களுக்கு வழிபாடு, விழா முதலியன ஆற்றி வருதல் மிகப் பண்டைக்காலந் தொடக்கம் காணப்படும் வழக்கங்களி லொன்று. பூர்வீக இந்தியாவில் ஆரியரல்லாத மக்களிடையே இவ்வழக்கம் இடம்பெற்றிருந்தது. வீரர்களையும், சான்றோர்களையும் வழிபடும் வழக்கம் பழந் தமிழ்நாட்டிலிருந்த தென்பதற்குத் தொல்காப்பியம் முதலிய சங்க இலக்கியங்களிற் போதிய சான்றுகளுள. தமிழ்நாட்டு வீர வழிபாட்டுக்கு இலக்கணமாக

> **" காட்சி, கால்கோ ணீர்ப்படை நடுதல்**
> **சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் "**

என்னும் தொல்காப்பியச் சூத்திரப்பகுதி அமைந்துள்ளது. புறநானூறு, அகநானூறு, மணிமேகலை முதலிய நூல்களில், வீரர்களுக்கும், அரசர்களுக்கும், அருந்தவர்க்கும், அவரவர் புதைக்கப்பட்ட இடங்களில் வீரக் கற்களும் (நடு கற்களும்), மண்டபங்களும் அமைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.[1]

புத்தரது காலத்திற்கு முன்பு வடநாட்டில் தாதுகோபங்கள் அமைக்கும் வழக்கம் இருந்துவந்தது. "புத்த நிலையடைந்தோர், அர்கதர், சக்கரவர்த்திகள் முதலியோர் தூபிகள் அமைத்துக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்" எனப் புத்தர் கூறியதாக மகாபரிநிர்வாண சூத்திரம் கூறுகின்றது.[2] இதனால் புத்தர் காலத்தில்

1. **தென்னிந்திய சிற்ப வடிவங்கள் — பக்கம் 15—17**
2. *Stupa in Ceylon — p. 2.*




இல. 30. தாதுகோபத்தின் பகுதிகள்

பெரியோர்களுக்குத் தூபிகள் அமைக்கும் வழக்கம் நாட்டில் இருந்து வந்ததென்பது அறியக்கிடக்கின்றது.

வைதிக நெறிக்கு மாறுபட்ட நெறியாகவே பௌத்த சமயம் வளர்ச்சி பெற்றது. ஆரம்பத்தில் அது வைதிக நெறிக்குப் புறம்பாகவுள்ள மக்களிடையேதான் பரவியது. அம் மக்கள் உருவங்களையும், விருட்சங்களையும் சமய வழிபாட்டுக்குச் சாதனங்களாகக் கொண்டிருந்தமையால், அவர்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றத் தொடங்கிய பொழுது, தாங்கள் முன் கைக்கொண்டுவந்த சமய சாதனங்களையும், புதிய சமயத்துட் புகுத்தி வணங்கிவந்தனர். புத்தர் உருவ வழிபாட்டை வற்புறுத்தாவிடினும், அவரைப் பின்பற்றியவர்கள் அவரின் பெயரால் தாதுகோபங்களையும், விருட்சங்களையும், ஆலயங்களையும் பௌத்த சமயச் சின்னங்களாக அமைத்துக் கிரியா வழிபாட்டைச் செய்துவந்தனர்.

புத்தரது உடல் தகனஞ்செய்யப்பட்டபின் அவரது எலும்பு முதலியனவற்றைத் தாதுகோபங்களில் வைத்து வணங்கிவந்தனர். அவருக்குப் பின் அவர் சீடர்களது எலும்பு முதலிய சின்னங்களையும், தாதுகோபங்களில் வைத்து வழிபட்டுவந்தார்களென அறியக்கிடக்கின்றது. இந்திய நாட்டில் தொடங்கிய அவ்வழக்கம், பௌத்த சமயம் பரவிய ஏனைய நாடுகளிலும் பரவியது. அசோக மன்னன் 84000 தாதுகோபங்களை அமைத்தமை சொல்லப்படுகின்றது. அவ்வரசன் கட்டிய தாதுகோபங்கள் இன்று நாட்டிற் காணப்படவில்லை. அவன் காலத்துத் தாதுகோபங்கள் எப்படி அமைந்தன என்பதைப் பிற்காலத்தில் தோன்றிய கற்சித்திரங்களிலிருந்தே அநுமானிக்கவேண்டும். நேர்பாள தேசத்து எல்லைப்புறத்திலுள்ள பிப்பிராவ என்னும் கிராமத்திலுள்ள தாதுகோபமே இந்தியாவிலுள்ள மிகப் பழைய தாதுகோபமாகும்.[1]

இந்தியாவிலுள்ள மிகப் பெரிய தாதுகோபங்கள் சாஞ்சியிலும், பர்கத்திலும் காணப்படுகின்றன. அத் தாதுகோபங்களைப் பின்பற்றியே அமராவதியிலும், அநுராதபுரத்திலும் தாதுகோபங்கள் அமைக்கப்பட்டன.

1. *The Story of the Stupa* — p. 13.

### தாதுகோப அமைப்பு முறை

தாதுகோபம் மூன்று அங்கங்களையுடையது. அவை :–

(1) அடித்தளம்
(2) அண்டம்
(3) தூபி என்பனவாம். (படம் 30).

அடித்தளத்தில் முதலாம் சுற்றுப்பிரகாரம் அமைந்திருக்கும் ; அப்பிரகாரத்தைச் சுற்றிக் கட்டப்பட்ட சுவர் வேதிகை (Railings) எனப்படும். வேதிகைக்கு வெளியேயுள்ள வெளியை இரண்டாம் சுற்றுப்பிரகாரம் எனலாம். அப்பிரகாரத்தைச் சுற்றியும் வேதிகை அமைக்கப்படுதல் வழக்கம். அடித்தளத்தில் வேலைப்பாடமைந்த மூன்று அலங்கார வரிசைகள் (Terraces) ஒன்றின்மேலொன்றாக அமைக்கப் பட்டிருக்கும். கீழ்வரிசை பிரதக்ஷிண பாதையாகவும், மேலிரண்டும் புஷ்ப பீடமாகவும் உபயோகிக்கப்படுவன. அடித்தளத்தைச் சுற்றி வேதிகை யிருந்தமையால், கீழ் அடித்தளம் சுற்று வீதியாக உப யோகிக்கப்பட்டதென்றே கொள்ளுதல் வேண்டும். மேல் வரிசைகளிற் புஷ்பங்கள் வைக்கப்பட்டமையால் அவை **புஷ்பதானங்கள்** என அழைக்கப்பட்டுவந்தன.

அடித்தளத்தின்மேல் **அண்டம்** அமைக்கப்படும். அண்டம் ஒரு முட்டையின் மேற்பகுதியின் வடிவில் அமைக்கப்படுகின்றது. அண் டத்தின் புறப்பகுதி முழுவதும் செங்கற்களாற் கட்டப்பெற்றுச் சுண் ணம்பாற் பூசப்பெற்றுள்ளது.

அண்டத்தின்மேல் **தூபி** அமைக்கப்படும். தூபி ஐந்து அங்கங் களை யுடையதாகக் கட்டப்படுகின்றது. அண்டத்தின் மேலுள்ள பகுதி **ஹதரஸ் கொட்டுவ** அல்லது **சதுர கோட்டம்** எனப்படும். அப் பீடத்தின்மேலுள்ள பகுதி **தேவதா கொட்டுவ** எனப்படும். அதன்மேலுள்ள பகுதி **கோட்ட** எனப்படும். கோட்டத்தின்மேல் **சத்த** அல்லது குடை அமைக்கப்படும். அதன்மேல் சிகரம் அமைக் கப்படும். சிகரம் '**கறல்ல**' என்றழைக்கப்படும்.

அநுராதபுரம், பொலநறுவா, மிகுந்தலை முதலிய இடங்களி லுள்ள தாதுகோபங்களில் வேதிகைகள் காணப்படவில்லை. மண்டல்கிரி (மதிரகிரியா) என்னும் இடத்திலுள்ள தாதுகோபம் ஒன்றில்

மாத்திரமே வேதிகை காணப்படுகின்றது. அவ் வேதிகை சாஞ்சித் தாதுகோபத்திலுள்ள வேதிகையைப் போன்ற சிறப்பு அமைப்புப் பொருந்தியதாகக் காணப்படுகின்றது.

சாஞ்சித் தாதுகோபத்தில் மூன்று வேதிகைகள் காணப்படுகின்றன. தூபியைச் சுற்றியும் ஒரு வேதிகையிருக்கின்றது. ருவான்வெலிசாயா தாதுகோபத்தில் ஆதிகாலத்திலே இரண்டு வேதிகைகள் இருந்தனவாக **மகாவம்சம்** கூறுகின்றது. 'ஹதரஸ் கொட்டுவ'வைச் சுற்றி அமைக்கப்படும் வேதிகை **முத்தவேதி** யென்றும், அடித்தளத்தைச் சுற்றியுள்ள வேதிகை **குச்சவேதி** யென்றும் அழைக்கப்பட்டன.

**வாகல்கடங்கள்**

சாஞ்சித் தாதுகோபத்தின் அடிப்பாகத்திலுள்ள சுற்று வீதியின் நான்கு வாசல்களிலும் அலங்கார வேலைப்பாடமைந்த **தோரணங்கள்** காணப்படுகின்றன. அத் தோரணங்களிற் காணப்படும் சித்திரங்கள் மிகக் கலைவனப்பு வாய்ந்தன வென்பது கலைப் புலவர்களது முடிபு. இலங்கையிலுள்ள தாதுகோபங்களின் வாசல்களிலும் மரத்தினாற் செய்யப்பட்ட சித்திரவேலைப்பாடமைந்த தோரணங்கள் இருந்தனவாகக் கருதப்படுகின்றது.[1]

சாஞ்சித் தாதுகோபத்திற் காணப்படும் சித்திரவேலைப்பாடமைந்த தோரணங்களுக்குப் பதிலாக, இலங்கையிலுள்ள தாதுகோபங்களின் நான்கு திக்குகளிலும், நான்கு விமானங்கள் அமைக்கப்பட்டன. அவை **வாகல்கடங்கள்** (படம் 31) என அழைக்கப்பட்டன. வாகல்கடங்கள் இலங்கையில் மாத்திரமே காணப்படுகின்றன. அவற்றை அமைக்கும் வழக்கம் இலங்கையில் எப்பொழுது தோற்றிய தென்பது அறியக்கூடியதாகவில்லை. அநுராதபுரத்திலுள்ள **மிரிசவெதி** தாதுகோபத்திலும், மிகுந்தலையிலுள்ள **கந்தக சைத்திய** எனப்படும் தாதுகோபத்திலும் மிகப் பழைய வாகல்கடங்கள் காணப்படுகின்றன (படம் 32).

வாகல்கடங்களின் கீழ்ப்பகுதிகள் முழுவதும் கற்களாலும் மேற்பகுதிகளாகிய விமானங்கள் செங்கற்களாலும் அமைக்கப்பட்

1. *The Stupa in Ceylon — 64.*

டிருக்கும். இன்று காணப்படும் வாகல்கடங்களின் மேலுள்ள விமானங்கள் அழிந்துவிட்டன. சித்திரவேலைப்பாடமைந்த நீள் சதுரமான உயர்ந்த கற்கள் (தூண் போன்றவை - Stele) (படம் 33) வாகல்கடங்களின் இருபக்கங்களிலும் வைக்கப்பட்டிருக்கும். நாக ராச வடிவங்கள், பூக்களமைந்த கொடிகள், தாமரை மலர்கள், பூரணகும்பங்கள் முதலியன இக் கற்களிற் செதுக்கப்படுவன. இக் கற்களின் சித்திரவேலை சாஞ்சித் தோரணங்களிற் காணப்படும் தூண்களை நினைவூட்டுகின்றது. விமானத்திற்குக் கீழுள்ள பகுதியின் முற்பக்கத்திலிருக்கும் சிற்ப வரிசைகளிற் சித்திரங்கள் காணப்படு கின்றன. முதலாம் சுற்று வீதிக்குப் போவதற்குப் படிகள் வாகல் கடங்களுக்குப் பின்னால் அமைக்கப்பட்டிருக்கும்.

### வாயில்கள்

வாகல்கடங்களின் முன்னுள்ள இரண்டாம் சுற்று வீதி மேடைக்கு ஏறிவருவதற்குப் படிக்கட்டுகளையுடைய வாயில்களுள. அவ்வாயில்கள் நான்கு அங்கங்களை யுடையன (படம் 34):

1. சந்திரவட்டப் படிக்கல்லு (Moonstone)
2. சித்திரங்களமைந்த படிகள் (Steps)
3. துவாரபாலகர்கள் (இரண்டு) (Guard Stones)
4. கைப்பிடி வரிசைகள் (இரண்டு) (Balustrades)

கீழ்ப்படிக்கு முன்னால் தாமரைப்பூவை நடுவிலும், அதனைச் சுற்றி யானை, யாளி, எருது, சிங்கம், அன்னம், பூக்கொடி முதலிய சித்திரங்களைக் கொண்ட **சந்திரவட்டக்கல்** வைக்கப்படுதல் வழக்கம். பௌத்த சமய நிலையங்களிலெல்லாம் அதன் முன்னுள்ள வாயில்களில் சந்திரவட்டப் படிக்கல்லை வைப்பது இலங்கையிற் காணப்படும் விசேஷ அம்சங்களிலொன்றாகும்.

உயரத்திற்குத் தக்கவிதமாகப் படிகளின் தொகைகளிருக்கும். ஒவ்வொரு படியிலும், குட்டையான நகைச்சுவை பொருந்திய மனித வடிவங்கள் அல்லது மிருகங்கள் செதுக்கப்பட்டிருக்கும்.

சந்திரவட்டப் படிக்கல்லின் இருபக்கங்களிலும் கைப்பிடி வரிசைக்கு முன்பாக இரு துவாரபாலகர்கள் (படம் 35) அல்லது பூரண

கும்பங்கள் செதுக்கப்பட்ட இரு கற்கள் (Guard Stones) அமைக்கப் பெற்றிருக்கும். சில கற்களில் குட்டையான மனித வடிவங்கள் (படம் 36) காணப்படும். பெரும்பாலான கற்களில் நாகராச துவார பாலக வடிவங்களே அமைக்கப்பட்டிருக்கும்.

படிகளின் இருமருங்கிலும், கைபிடித்தேறுவதற்காக யாளி, யானை முதலிய மிருகங்களின் தலைகளையுடைய சித்திரக் கைப்பிடி வரிசைகள் (படம் 37) அமைக்கப்படும். சாதாரண மட்டமான கைப்பிடி வரிசைகள் அநுராதபுரம் மிகுந்தலை முதலிய இடங்களிற் காணப்படுகின்றன.

தாதுகோப வீதியில் அல்லது அதற்குச் சமீபத்தில் புத்தரதும், அவரின் சீடர்களதும் திருவடிவங்கள் வைக்கப்பட்ட விகாரைகளுண்டு. அவை **பிலிமகே** என அழைக்கப்படும். தாதுகோபத்தைச் சுற்றியுள்ள கோட்டங்களிற் **சங்கிராமம்** (Monastery) அமைந்திருக்கும். பௌத்த சந்நியாசிகள் வசிக்கும் இடம் சங்கிராமம் எனப்படும். ஒரு சங்கிராமத்தில் **தாதுகோபம், பிலிமகே, தர்மசால** (பிரசங்க மண்டபம்), **உபோசத மண்டபம்** (விரத இல்லம்), **முறகே** (காவல் இல்லம்), **போதி கோட்டம்** (வெள்ளரசு நிலையம்), **பொக்குண** (குளம்) முதலிய நிலையங்கள் அமைந்திருக்கும்.

அநுராதபுரத்திற் காணப்படும் தாதுகோபங்களுக்கு அருகில் மேற்கூறப்பட்ட கட்டடங்களின் அத்திவாரங்களும், அடித்தள வரிசைகளும் காணப்படுகின்றன. சில அடித்தளங்களின் மேல் கருங்கற் **றூண்கள்** காணப்படுகின்றன. தூண்களின்மேலமைக்கப் பட்ட பகுதிகள் அழிந்துபோயின. தூண்களின் மேலுள்ள அமைப்புகள் ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்கு மாடங்களாக விருந்தனவென்பது மகாவம்சம் முதலிய நூல்களால் அறியக்கிடக்கின்றது. அநுராதபுரத்திலுள்ள **பித்தளை மாளிகை** (Brazen Palace) எனப்படும் விரத இல்லம் ஒன்பது மாடங்களை யுடையதாகவும், 1000 அறைகளை யுடையதாகவும், பித்தளைத் தகட்டினால் வேயப்பெற்றதாயும் இருந்தது.

பண்டைக்காலத்தில் ஆலயங்களை உலோகத் தகட்டினால் வேயும் வழக்கம் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் இருந்தது. **பொன்**

ணம்பலம் எனப் பெயர்கொண்ட சிதம்பரம் நடராசர் மண்டபம் பொன் தகட்டினால் வேயப்பட்ட தென்று சரித்திரங்களிற் கூறப்பட்டுளது. நடராசர் மண்டபத்தின் அடித்தளமும் தூண்களும் கருங்கற்களா லமைக்கப்பெற்றும் மேல் விமானம் மரத்தினால் அமைக்கப்பெற்று மிருத்தலை நாம் இன்றும் காணலாம்.

பொலநறுவாவிலுள்ள இரங்கொத தாதுகோபத்தின் அடித்தளத்திற் கருகிலும் கிரிவிகாரைத் தாதுகோபத்தின் அடித்தளத்திற் கருகிலுமுள்ள எட்டு மூலைகளிலும் எட்டு விக்கிரக மண்டபங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் புத்தரது திருவடிவம் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது.

தாதுகோபங்கள் பலவிதமான உருவங்களில் அமைக்கப்பட்டன. சில மணி வடிவுடையனவாகவும், சில முட்டை வடிவுடையனவாகவும், சில நெற்குவியல் வடிவுடையனவாகவும் இருக்கின்றன. தூபாராம தாதுகோபமும் மிருந்தலை அம்பஸ்தல தாதுகோபமும் பிறவும் மணி வடிவுடையன. ருவான்வெலிசாயா, அபயகிரி, இரங்கொத முதலிய தாதுகோபங்கள் முட்டையின் பாதி வடிவுடையனவாகவுள்ளன. நெற்குவியல் போன்றனவும் இலங்கையில் உண்டு.

தூபியின் சிகரம் (Pinnacle) தங்கத்தால் அல்லது வெள்ளியினால் அல்லது பளிங்கினாற் செய்யப்பட்டிருக்கும்.

ஐந்தாம் அத்தியாயம்

# பௌத்த சிற்பவடிவங்கள்

**பௌத்த** மதம் ஆரம்பத்தில், ஆலயங்கள், உருவங்கள், கிரியைகள் முதலியன இல்லாத சன்மார்க்க நெறியாகவே தொடங்கியது. மறு சமயங்களிற் கூறப்படுவது போன்ற கடவுள் வழிபாடு பௌத்த மதத்திற் கூறப்படவில்லை. இக்காரணம் பற்றியே சைவ சமயத்தவர்கள் பௌத்த மதத்தைப் புறப்புறச் சமயங்களுள் வைத்துக் கண்டிக்கிறார்கள். உருவ வழிபாடு, விருட்ச வழிபாடு, ஞாபகச் சின்ன வழிபாடு முதலியன இன்று பௌத்த மதத்திற் காணப்படுகின்றன. இக் கொள்கைகள் யாவும் புத்தருக்குப் பின்பே ஏற்பட்டன. இது புறச்சமயக் கிரியா வழிபாட்டின் கலப்பினால் ஏற்பட்டதென்றே கூறுதல் வேண்டும்.

## புத்தரின் திருவடிவம்

**புத்**தருக்கு உருவமமைத்து வழிபடும் முறை கி. பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளின் பின்பே நாட்டில் ஏற்பட்டதென்பது ஆராய்ச்சியாளர் கருத்து. ஆரம்பத்தில் புத்தரை ஞாபகப்படுத்தும் சின்னங்களாகிய அரசமரம், திருப்பாதங்கள், தாதுகோபம், தர்ம சக்கரம் முதலியனவே வழிபாட்டிற்குச் சாதனங்களாக இருந்தன. ஆனால், புத்தருக்கு வடிவங்கள் அமைக்கப்படவே அவற்றிற்குக் கோவில்களும், விழாக்களும், ஆராதனைக்கு வேண்டிய கிரியைகளும் தோன்றின.

இலங்கையிற் காணப்படும் மிகச் சிறந்த சிற்பவடிவங்கள் புத்த பகவானது திருவடிவங்களேயாகும். மிகப் பழைய வடிவம் அமராவதிச் சிற்ப முறையில் அமைந்துள்ளது. புத்தரது வடிவங்கள் சிற்ப நூல்களிற் கூறப்பட்ட அளவுப் பிரமாணங்களுக்கமையச் செய்யப்படுகின்றன. இலங்கையிற் காணப்படும் வடிவங்களை, **இருந்த திருவடிவம், நின்ற திருவடிவம், கிடந்த திருவடிவம்** என மூன்று பிரிவாக வகுக்கலாம்.

இருந்த வடிவங்கள் சாந்தமும், கருணையும் நிறைந்த வதனத்துடன் கண்கள் மூக்குநுனியைப் பார்த்தவண்ணமாக, இடது

காலின் மேல் வலது காலை வைத்து, மடியின்மேல் இடது கையை வைத்து, அதன்மேல் வலது கையை வைத்து, சாந்த சொரூபியாகத் தியானத்தில் அமர்ந்து இருக்கும் பாவனை யுடையன.

நின்ற பாவனை யுடைய வடிவங்கள் பலவுள. வலது கரத்தை யுயர்த்தி, இடது கரத்தைத் தொங்கவிட்ட நிலையில் இவ்வடிவங்கள் காணப்படுகின்றன. நின்ற திருவடிவங்கள் அநுக்கிரகஞ் செய்யும் பாவனையில் அமைந்துள்ளன.

கிடந்த திருவடிவங்கள் தலையணையின் மேல் வைத்த வலது கரத்தின்மீது தலையை வைத்து இடதுகரத்தைத் தேகத்தின்மேல் நீட்டி வைத்த பாவனையை யுடையன. இந்நிலை பரிநிர்வாணநிலை எனப்படும்.

இருந்த திருவடிவங்கள் பல அநுராதபுரத்திலும், பொலநறுவா விலும் காணப்படுகின்றன. தியான நிலை பொருந்திய இவ் வடிவங்களில், பிறநாட்டுப் புத்த வடிவங்களிற் காணப்பெறாத பல சிறந்த கலை அம்சங்கள் காணப்படுகின்றன. அநுராதபுரத்து தொலுவிலா புத்த வடிவம் (படம் 7) இலங்கையிலுள்ள வடிவங்களுட் சிறந்ததாகும்.

இந்தியா, யாவா முதலிய விடங்களிற் காணப்படும் புத்த வடிவங்கள் பத்மாசன மிட்டு அமர்ந்திருக்குந் தன்மையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையிலுள்ள வடிவங்கள் அவ்விதமில்லாது, இடதுபாதத்தின் மேல் வலது பாதத்தை வைத்து, சுகமாக அமர்ந்திருக்கின்றன. இவ் வாசனத்திலிருக்கும் வடிவங்கள் இலங்கையில் மாத்திரமே காணப்படுகின்றன. பொலநறுவாவில் காணப்படும் புத்த தியான வடிவங்கள் அநுராதபுரத்து வடிவங்களைப் போற் சிறந்தனவல்ல.

நின்ற திருவடிவங்கள் அநுராதபுரத்திலும், பொலநறுவாவிலும், அவுகன என்னும் இடத்திலும் காணப்படுகின்றன. அவுகன வடிவம் 46 அடி உயரமுடையது.

அநுராதபுரத்திற் காணப்பட்ட தொழுவிலா வடிவமும், அபயகிரியா வடிவமும் (படம் 38), பங்குளியா வடிவமும் (படம் 39) இலங்கையிலுள்ள தியான வடிவங்களுட் சிறந்தன. இவற்றிற்கு அடுத்த

படியாக வைத்து மதித்தற்குரியன பொலன்னறுவாக் கல்விகாரை வடிவங்களும் (படம் 40, 41), வட்டதாகே வடிவமுமாம். (படம் 42).

## புத்தர் வடிவங்களின் அளவுப் பிரமாணம்

நின்ற பாவனையுடைய புத்த வடிவங்கள் உத்தம தசதாலத்தில் அமைக்கப்படுகின்றன. 13½ அங்குலம் ஒருமுகம் அல்லது தாலமெனப்படும். ஒரு வடிவத்தின் உயரம் 123¾ அங்குலம் அல்லது, 9 முகமும் அரைப்பாகமுமாகும்.

இருந்த பாவனையுடைய வடிவம் ஐந்து தாலம் அல்லது முகங் கொண்டதாக விருக்கும். 123¾" அல்லது 124" உயரமே உத்தம தசதாலம் எனப்படும். தியான யோகத்தில் அமர்ந்துள்ள வடிவங்களின் கண்கள், மூக்கு நுனியையும், கைப் பெருவிரல்களையும், குதிகளின் நுனிகளையும் நோக்கியவண்ணமாக நிமிர்ந்திருத்தல் வேண்டும். இவ் வடிவத்தின் உயரம் உச்சி தொடங்கிப் பீடம் வரை 62 அங்குலமாகும். இதைப் பஞ்சதாலமெனச் சிற்ப நூல்கள் கூறும்.

உருவம் இருக்கும் பீடத்தின் உயரம், உருவத்தின் உயரத்தின் மூன்றிலொன்ருய் அல்லது நான்கிலொன்ருய் அல்லது ஐந்திலொன்ருய் இருத்தல்வேண்டு மென்பது விதி.

பரிநிர்வாண நிலையில் (Recumbent) அமைக்கப்படும் வடிவம் நீட்டிய அங்கங்களை யுடையதாக இருத்தல் வேண்டும். இவ் வடிவம் அமைக்கப்படும் கர்ப்பக்கிரகத்தின் நீளப்பகுதி 16 பாகங்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டும். தலைப்பக்கத்திற்கும் காலப்பக்கத்திற்குமாக இரண்டு பாகங்களை நீக்கி, உருவத்தை மிகுதியான 14 பாகங்களிலும் அடக்கி அமைத்தல்வேண்டும். அகலப் பகுதி 7 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, 3½ப் பாகங்களில், உருவம் படுத்திருக்கும் பீடம் அமைக்கப்படுதல் வேண்டும்.[1]

## வேறு சிற்ப வடிவங்கள்

புத்தரது வடிவங்களைவிடப் பௌத்த விகாரங்களிற் போதிசத்துவ வடிவங்கள், புத்தரது சீடர்களின் வடிவங்கள், அரசர்களின் வடிவங்கள்

1. *Medieval Singhalese Art—p. 122.*

முதலியனவும், நாகராஜ துவாரபாலகர் வடிவங்களும், நகைச்சுவை யோடுங் கூடிய குட்டையான மனித வடிவங்களும், யானை, யாளி, சிங்கம், குதிரை, அன்னம், பூரண கும்பம் முதலியனவற்றின் வடிவங் களும் காணப்படுகின்றன. பின் கூறப்பட்டன யாவும் அலங்காரச் சித்திரங்களாக அமைந்துள்ளன.

குட்டையான மனித வடிவங்கள், யானை, யாளி, சிங்க வடிவங்கள் முதலியன வாசற் படிக்கட்டுகளிலும், கட்டடங்களின் அடித்தளங்களி லும் அமைக்கப்படுகின்றன. இலங்கையிற் காணப்படும் துவாரபாலகர்க ளது அலங்காரச் சித்திர அமைப்பு ஒய்சால (Hoysala) சிற்ப வடிவங்களை ஒரு சிறிது நினைவூட்டுகின்றன.

மகாயான பௌத்த பிரிவைச் சேர்ந்த பல போதிசத்துவ வடிவங்கள் கொழும்பு நூதனப் பொருட்காட்சிச்சாலையில் வைக்கப் பட்டுள்ளன. அவற்றுட் சிறந்தது மைத்திரேய போதிசத்துவ வடிவமே யாகும் (படம் 43). அவ்வடிவம் திரிபங்க நிலையில் விதர்க்க வரத முத்திரைகளுடன் அமைந்திருக்கின்றது. அது ஆறும், ஏழாம் நூற்றுண்டைச் சேர்ந்ததாயிருக்கவேண்டு மென்று கருதப்படுகின்றது.

இலங்கையிற் காணப்பட்ட ஒரு பெண் தெய்வத்தின் வெண்கல உருவம் இப்பொழுது லண்டனிலிருக்கின்றது. அதன் பிரதி (படம் 44) யொன்று கொழும்பிலு முண்டு. அதைப் பத்தினியின் வடிவம் எனப் பலரும் கூறுவர். ஆனால் அவ் வடிவத்தின் அமைப்பு, அது ஒரு மகாயான பௌத்த தேவியின் உருவமெனக் கருதுவதற்கு இடமளிக்கின்றது. அதன் காலம் 8ஆம் நூற்றுண்டா யிருத்தல் வேண்டும்.

### சிற்பத் தூண்கள்

தூபகோபங்களின் சுற்று வீதிகளிலும், அறவோர் பள்ளிகளிலும் காணப்படும் நாற்சதுரத் தூண்கள் போன்றவை, இந்திய சிற்பம் பரவியுள்ள ஏனைய நாடுகளிற் காணப்படவில்லை. இலங்கைத் தூண்கள் அசோகன் காலத்துத் தூண்களைப் பின்பற்றியனவாதல் வேண்டும். தூண்களின் போதிகைகளில், மிருக வரிசை அல்லது பூ வரிசை காணப்படுகின்றது. இத்தகைய தூண்கள் (படம் 45) அநுராத புரத்திலும், பொலநறுவாவிலும் காணப்படுகின்றன.

பொலநறுவாவிலுள்ள தூபாராம, இலங்காதிலக, திவங்க முதலிய ஆலயங்களின் புறச்சுவர்களில் அமைக்கப்பட்டுள்ள தூண்கள் சோழர் ஆலயத் தூண்களை யொத்தன.[1] பொலநறுவா நிசங்க மல்ல லதா மண்டபத் தூண்கள் தாமரைத் தண்டைப் போன்ற அமைப்புப் பொருந்தியனவாக விளங்குகின்றன.

பொலநறுவாக் கோவில் கோட்டத்தில் ஏழு அடுக்குகளுள்ள ஒரு கட்டடம் காணப்படுகின்றது. அதை இப்பொழுது **சத மகால் பிரசாத** என அழைக்கின்றனர். ஒவ்வொரு அடுக்குச் சுவரின் முன்பக்கத்திலும் செங்கற்களால் அமைக்கப்பட்ட வடிவம் ஒன்று காணப்படுகின்றது. அக் கட்டடம் மகாயான பௌத்த சமயத்தைச் சேர்ந்ததாக விருக்கலாம். ஒவ்வொரு அடுக்கும் ஒவ்வொரு உலகத்தையும், அவ்வடுக்குகளிற் காணப்படும் வடிவங்கள் அந்தந்த உலகத் தலைவர்களையும் குறிப்பிடுவனவாக இருத்தல் கூடும். அக் கட்டடம் இலங்கையிற் காணப்படாத ஒரு சிற்ப முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெல் என்னும் ஆராய்ச்சியாளர் அது கம்போடியா நாட்டுச் சிற்ப முறையில் அமைந்திருப்பதாகக் கூறுகின்றார்.

நாகதுவாரபாலகர்களின் கைகளில், பூரணகும்பங்கள் மிக நுட்பமான வேலைப்பாடமைந்த புட்ப அடுக்குகளுடன் அமைக்கப் பட்டிருக்கின்றன. இலங்கைச் சிற்பிகள் புட்ப அடுக்குகளுடைய கும்பங்களைச் செய்வதில் ஆற்றலுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

சந்திரவட்டப் படிக்கல்லிற் காணப்படும் தாமரை இதழ்களும், மிருக வரிசைகளும் பிறவும் பார்ப்பவர் மனத்தைக் கவரும் தரத்தன. இலங்கையிலுள்ள சந்திரவட்டப் படிக்கல்லு(படம் 9)கள் சிற்ப உலகத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பெறும் பெருமை யுடையன வென்பதில் ஐயமின்று.

அநுராதபுரத்தில் அழகிய படித்துறைக ளமைந்த நீராடு துறைகள் ( Baths ) பல காணப்படுகின்றன. அரச நந்தவனத்திற் காணப்படும் நீராடுதுறை (படம் 46) கண்கவர் வனப்புடன், கருங் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. அபயகிரி சங்கிராமத்துக்குச் சேர்ந்த

1. *Buddhist Art — p. 87.*

இரு நீராடும் கேணிகள் இலங்கையிற் காணப்படும் கேணிகளுள் சிறந்தனவென மதிக்கற்பாலன.

பூர்வீக அநுராதபுரம், பௌத்த சங்கிராமங்களும், அரண்மனைகளும், நந்தவனங்களும், நீராடு துறைகளும் நிறைந்த நகரமாக அக்காலத்தில் விளங்கிய தென்பதற்கு, இன்று அங்கு அழிந்து கிடக்கும் கட்டடங்களின் அடித்தளங்களே அழியாச் சான்றுகளாகும். அலங்காரச் சித்திரங்கள் அமைந்த மலகூடப் படிக்கல்லுகளும் அங்கு காணப்படுகின்றனவெனின், அக்காலத்து மக்களின் கலை ஆர்வம் எத்துணைச் சிறப்புடன் விளங்கிய தென்பதைக் கூறவும் வேண்டுமா ?

## ஆரும் அத்தியாயம்

# சைவ சிற்ப ஆலயங்களும் வடிவங்களும்

### பௌத்த ஆலயங்களும் சைவத் திருவுருவங்களும்

இலங்கை மக்களுள் பெரும்பகுதியினர் பௌத்த சமயத்தவர்கள். இலங்கை நாடே பௌத்த சமயப் பிரிவுகளுள் ஒன்ருகிய ஈன யானத்திற்கு நிலைக்களமாக இன்று விளங்குகின்றது. இந்நாட்டிலுள்ள தாதுகோபங்களையும், புத்தரது வடிவங்களையும் போன்ற வடிவங்கள் எந் நாட்டிலுமில்லை யெனக் கூறுதல் மிகையாகாது. பௌத்த சமயத்திற்குரிய உயர்ந்த பண்புகளை இலங்கையில் இன்றுங் காணலாம்.

இலங்கையில் பௌத்த சமயத்திற்கு அடுத்த படியில் சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ள சமயம் **சைவ சமயமேயாம்.** சைவத் திருவுரு வங்கள் பௌத்த விகாரங்களிலும் காணப்படுகின்றன. **கணேசர், விஷ்ணு, கதிர்காம வேலவர்** முதலியோரைப் பௌத்த மக்கள் வணங்கிவருகின்றனர். கதிர்காம வேலவர் வழிபாடு பௌத்த மக்க ளிடையே மிகப் பண்டைக்காலந் தொடக்கம் இருந்துவருகிறது. கதிர்காம ஆலயம் இன்றும் பௌத்தர்களின் பரிபாலனத்தின்கீழ் இருப்பதே நாம் கூறுவதற்குப் போதிய சான்ருகும்.

### இலங்கையிற் சைவத்தின் தொன்மை

சைவ சமயத்திற்கும் இலங்கைக்குந் தொடர்பு எந்தக் காலத்தில் ஏற்பட்ட தென்பதை நாம் இன்று அறுதியிட்டுக் கூற முடியாது. பழந்தமிழ் நாட்டில் **மாயோனையும், முருகனையும்** மக்கள் வணங்கி வந்தார்கள். மலைநாடுகளில் முருக வழிபாடு வழக்கிலிருந்தது. தென் னிலங்கையிலுள்ள கதிரைமலையில் முருகவழிபாடு காணப்படுவது தமிழ் நாட்டு வழக்கத்துக்குப் பொருந்தியதொன்ருகும். துட்டகெமுனு காலத் திற்கு முன்னிருந்தே கதிரைமலை ஆலயம் மக்கள் வழிபடும் நிலையமாக விளங்கிய தென்பது சரித்திர வாயிலாக அறியப்படும் உண்மை. எனவே, தென்னிலங்கையில் தமிழ்ப் பண்பும், முருக வழிபாடும் மிகப் பண்டைக்காலத்திற் சிறப்புற்று விளங்கியனவென நாம் அஞ் சாது கூறலாம்.

யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலின் ஆசிரியராகிய மயில்வாகனப் புலவர் விஜயன் இலங்கைக்கு வந்தவுடன், வடக்கில் (கீரிமலைக்கருகில்) திருத்தம்பலேஸ்வரன் கோவிலையும், கிழக்கில் திருக் கோணேசர் கோவிலையும், தெற்கில் — மாத்தறையில் — சந்திரசேகரன் கோவிலையும், மேற்கில் திருக்கேதீச்சரர்கோவிலையும் கட்டுவித்தான் என் னும் ஒரு கன்னபரம்பரைக் கதையைத் தமது நூலிற் கூறியிருக்கின்றார்.

தேவநம்பியதீசன் காலத்தில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் வசித்தார்களென்பது துணிபு. அவன் காலத்தில் இலங் கைக்குக் கொண்டுவரப்பட்ட வெள்ளரசம் முளைகள், வடதுறைகளி லொன்றாகிய சம்புகோளம் அல்லது சம்பல்துறையில் இறங்கின எனக் கூறப்பட்டுள்ளது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து சமந்தகூடமெனக் கூறப்பட்ட சிவனொளிபாதமலைக்கு வந்து சென்ற பௌத்தர்கள், நாகதீபமாகிய யாழ்ப்பாணப் பகுதிக் கூடாகச் சென்றனர் என்பதை 'மணிமேகலை' யென்னும் நூலின் மூலம் அறிகின்றோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், புத்தர் காலத்தில், நாகர்கள் வசித் தார்களென மகாவம்சம் கூறுகின்றது. களனியாவில் புத்தர் காலத்திற் மாணியக்கிக என்னும் அரசன், இந்து சமயத்தி லிருந்து பௌத்த சமயத்திற்கு மாற்றப்பட்டான் என்பது களனியா வோடு தொடர்புடைய பழங் கதைகளில் ஒன்று. நாகர்கள் சிவ வழிபாடுடையோர் என்பது இதிகாச புராணங்களால் அறியப்படும் உண்மை. எனவே, வட இலங்கையிலும், தென்மேற்கு இலங்கையிலு மிருந்த மக்கள் புத்தர் காலத்திற் சைவ சமயத் தொடர்புடையோ ராகவே யிருந்தார்களென நாம் கொள்ளுதல் பொருத்தமுடைய முடிபாகும்.[1]

1. *Other Primitive Tribes like the Nagas were, for certain, living along a belt of country extending from Kelaniya as far as Nagadipa near Mannar. These people must have migrated from South India long before Vijayan invasion—.*
(Historical Back Ground of Singhalese Foreign Relations - pages 172 — 173 of Ceylon Historical Journal — Vol. 1. No. 1.)
(நாகர்களைப் போலவே, வேறு இனத்தைச் சேர்ந்த பூர்வீக மக்களும் களனியா தொடங்கி நாகதீபம் வரையுள்ள கடலோரத்தில் வசித்துவந்தனர். இப் பூர்வீக மக்கள் விஜயன் இலங்கைக்கு வருமுன் தென்னிந்தியாவிலிருந்து குடி யேறியவர்களாதல் வேண்டும்.)

இலங்கையின் பல பகுதிகளிலும் சைவ சமய ஆலயங்கள் மிகப் பண்டைக் காலத்தில் இருந்தமையால்தான், மயில்வாகனப் புலவர், அவ்வாலயங்களோடு விஜயனைத் தொடர்புபடுத்தியுள்ள கன்னபரம்பரைக் கதைகளைத் தமது நூலிற் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

திருக்கோணேசர் ஆலயத்திற்கும், திருக்கேதீச்சரர் ஆலயத்திற்கும் தேவாரப் பாடல்கள் இருப்பதனால், அவ்வாலயங்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முந்தியனவாகவேண்டும். அவ்வாலயங்கள் அக் காலத்திற் பலவிதமான சிற்பச் சிறப்புகள் பொருந்தியனவாக விளங்கியமை சரித்திரத்திற் கூறப்பட்டுள்ளது.

## சைவ ஆலயங்கள்

இலங்கையிற் சிற்ப வேலைப்பாடுகளுடன் இன்று காணப்படும் சைவ ஆலயங்கள், பொலநறுவா **வானவன்மாதேவி ஈசுவரமுடையார் ஆலயம்** (சிவ தேவாலயம் 2), **சிவ தேவாலயம்** இல. 1, மட்டக்களப்புப் பகுதியிலுள்ள **திருக்கோவில் முருகன் ஆலயம்** என்பனவாம். திருக்கோவில் ஆலயம் (படம் 47), பிற்காலச் சோழர் அல்லது பாண்டியர் சிற்ப முறையைப் பின்பற்றியதாகக் காணப்படுகின்றது. எங்ஙனம், கோணேசர் ஆலயத்திற்கு இராவணனுடன் தொடர்புள்ள கதைகள் கூறப்படுகின்றனவோ அங்ஙனமே, திருக்கோவில் சிவாலயத்திற்கும் இராவணனுடன் தொடர்புடையனவாய கதைகள் கூறப்படுகின்றன.[1]

## சைவ ஆலயங்களின் காலமும் வரலாறும்

திருக்கேதீச்சரர் ஆலயம் முதலாம் இராஜராஜன் காலத்தில் அழகுபெறக் கட்டப்பட்டது. திருக்கோணேசர் ஆலயம் கருங்கற்களாற் **குளக்கோட்டன்** என்னும் அரசனாற் கட்டப்பட்டதென்பர். அவன் காலம் எதுவென்பது அறியக்கூடியதாயில்லை. அக் கோவிலுக்குரியனவும், திருகோணமலையில் நிலத்துட்கிடந் தெடுக்கப்பட்டனவுமான திருவடிவங்களின் சிற்ப அமைப்பிலிருந்து அவ்வாலயம் பாண்டியர் காலத்ததா யிருத்தல் கூடுமென நாம் ஊகிக்க இடமுண்டு.

1. இலங்கைத் தமிழ் விழா மலர் — பக். 14 — 16.

பதின்மூன்றும் நூற்றுண்டின் முற்பகுதியிலிருந்த ஜடவர்மன் வீரபாண்டியன் என்பான், இலங்கை அரசன் ஒருவனை வெற்றி கொண்டு திருகோணமலையில் தனது மீன் கொடியின் அடையாளத்தைப் பொறித்தான் என்று கூறப்பட்டுள்ளது. திருகோணமலைக் கோட்டை வாசலின் இருமருங்கிலுமுள்ள கற்களில் அச்சித்திரங்கள் இன்றும் காணப்படுகின்றன. கோணேசர் ஆலயத்தை இடித்து எடுத்த கற்களாலேயே திருகோணமலைக் கோட்டை கட்டப்பட்டது. ஜடவர்மன் வீரபாண்டியன் காலத்திற் கோணேசர் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருத்தல் வேண்டும்.

பொலநறுவா முதலாம் சிவாலயம், இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அல்லது அதற்குச் சொற்ப காலத்திற்கு முன் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அவ் வரசன் பாண்டியருடன் நல்லுறவு பூண்டு, பாண்டிநாடு சென்று, அவர்களிடமிருந்த புத்த தந்தத்தைப் பெற்று வந்து, பொலநறுவாவிலிருந்து ஆண்டானெனச் சரித்திரங் கூறுகின்றது. முதலாம் சிவாலயத்திற்கு 'புத்த தந்த ஆலயம்' எனவும் ஒரு பெயருண்டு. இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் புத்த தந்தத்திற்கும், சிவாலயத்திற்கும் தொடர்பு ஏற்பட்டிருத்தல் கூடும்.

பொலநறுவாவிலுள்ள இரண்டாம் சிவாலயமே இலங்கையிலுள்ள மிகப் பழைய சோழர் காலத்துக் கட்டடமாகும். அவ்வாலயம், இராஜராஜன் மனைவியாரின் பெயரையுடையதாக விளங்கியது. அவ்வம்மையாராகிய வானவன் மாதேவியாரது மகனே இராஜேந்திர சோழனுவான். சோழர் தலைநகராகிய தஞ்சைமாநகரிற் கட்டப்பட்ட சிவாலயம், இராஜராஜேஸ்வரம் எனவும் அழைக்கப்பட்டது. இலங்கையின் தலைநகராகிய ஜனநாதபுரத்தில் இராஜேந்திரனுல் முற்றுவிக்கப்பட்ட சிவாலயம், அவன் தாயின் பெயரால் அழைக்கப்பட்டது. எவ்விதம் தமிழ் நாட்டில் இராஜராஜேஸ்வரம், பிற்காலத்தெழுந்த கோவில்களுக்கெல்லாம் முன்மாதிரியான சிற்பநிலையமாக விளங்கிற்றே, அவ்விதமே, பொலநறுவாவிலுள்ள வானவன்மாதேவி ஈசுவரமுடையார் ஆலயம், பிற்காலத்திற் பொலநறுவாவிலெழுந்த பௌத்த சைவ சிற்ப ஆலயங்களுக் கெல்லாம் வழிகாட்டியாக அமைந்து விளங்கியது.

ஜனநாத மங்கல வானவன் மாதேவி ஈசுவரமுடையார் என்பது அங்கு கோவில்கொண்டெழுந்தருளிய மூர்த்தியின் பெயர். பொலநறுவா, சோழர் காலத்தில் புலேநரியான ஜனநாதபுரம் என்றும் வழங்கப்பட்டது. புலஸ்தியநகர் என்ற பூர்வீகப் பெயரே, புலேநகரி என்று பிற்காலத்தில் வழங்கப்பட்டது. 'நிகரிலி சோழ வள நாட்டுப் புலேநரியான ஜனநாதபுரம்' எனப்பட்டதும் பொலநறுவாவேயாம்'.[1]

இரண்டாம் சிவாலயம் கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்த மண்டபம், விமானம் முதலிய அங்கங்களுடன் விளங்குகின்றது. மகாமண்டபம் அழிந்துவிட்டது. அதன் அத்திவாரமும், சுற்றுப் பிரகாரச் சுவரின் அத்திவாரமும் காணப்படுகின்றன. பிரகாரச் சுவர்களின் மேலிருந்த கல் நந்திகள் உடைந்துகிடக்கின்றன. ஆலயத்திலுள்ள சிவலிங்கத் திருவுருவம் பழுதடையாதிருக்கின்றது. அர்த்தமண்டபத்திலுள்ள மேற் பாவுகல்லுகள் சில உடைந்துவிட்டன. அதிஷ்டானத்திற்குக் ( Base ) கீழுள்ள உபபீடம் மண்ணுள் மறைந்துவிட்டது.

கர்ப்பக்கிரகத்தின் வெளிப்புறம் 20 அடிச் சதுரம், உட்புறம் 9¾ அடிச் சதுரம். அர்த்தமண்டபத்தின் வெளிப்புறம் 15 அடி 5 அங்குல நீளமும், 9 அடி 4 அங்குல அகலமும் உடையது.

விமானம் இரண்டு தளங்களேயுடையது. முதற் தளத்தின் நான்கு மூலேகளிலும் கர்ண கூடுகளும், நடுவில் சாலேகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கர்ண கூடுகளினதும், சாலேகளினதும் கூரைகள் பல்லவர் காலத்துக் கூரைகளே யொத்தன. சோழர் காலத்துச் சிற்ப முறை பல்லவர் காலத்துச் சிற்ப முறையைப் பின்பற்றியெழுந்த தென்பது, பொலநறுவா வானவன் மாதேவி ஈசுவரமுடையார் ஆலயத்தையும், மாமல்லபுரத்துக் கல் இரதங்களேயும் ஒப்புநோக்குவார்க்கு நன்கு புலனுகும்.

முதலாம் சிவாலயத்திற் சுவர்கள் மாத்திரமே அழிந்த நிலேயில் காணப்படுகின்றன. கர்ப்பக்கிரகத்தின் விமானம் செங்கற்களால் கட்டப்பட்டதாதலால் அது முற்றுய் அழிந்துவிட்டது. கர்ப்பக்கிரகத்தி

1. *Polonnaruwa Bronzes.*

னதும், அர்த்தமண்டபத்தினதும் மேற் பகுதிகள் காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் மேற்பகுதிகள் முற்றாய் அழிந்துவிட்டன. மகா மண்டபத்தின் வடக்குப் பகுதியில் தேவியின் சிலை யொன்று உடைந்து கிடக்கின்றது. கர்ப்பக்கிரகத்தின் தெற்குப் பகுதியில் தக்ஷிணாமூர்த்தியின் சிலையின் அடிப்பகுதி காணப்படுகின்றது. அர்த்தமண்டபத்தின் வாசலின் இருபக்கங்களிலும் துவாரபாலகர்க ளது வடிவங்கள், மேற்பகுதி உடைந்த நிலையிற் காணப்படுகின்றன. சிவலிங்கம் உடைந்து கிடக்கின்றது.

பொலநறுவாச் சிவாலயங்களிற் காணப்படும் சிவலிங்கங்களின் பீடங்கள் சதுர வடிவாகக் காணப்படுகின்றன. முதலாம் சிவாலயத் திற்கு அரைக்கல் தூரத்தில் ஒரு சிவாலயமும், விஷ்ணு ஆலயமும் காணப்படுகின்றன. விஷ்ணு ஆலயத்தில் மூர்த்தியின் வடிவம் காணப்படுகின்றது. சிவாலயத்தின் இலிங்கத்தின் பீடம் சதுரமாகவே இருக்கின்றது.

முதலாம் சிவாலயத்தின் சிற்ப வேலைப்பாடுகள், இரண்டாம் சிவாலயத்தின் வேலைப்பாடுகளிலும் சிறந்தனவாயிருக்கின்றன. சிற்ப அடுக்குகள் விரிவாயும், நுண்ணிய வேலைப்பாடுகள் உடையனவாயு முள்ளன. வெளிப்புறச் சுவர்களிலுள்ள ஸ்தம்பங்கள் ( Pilasters ) சோழருக்குப் பின் தோன்றியனவற்றை யொத்தன. மகாமண்டபத்தின் தெற்கு வாயிலுக்கு முன்பாகவும், தக்ஷிணாமூர்த்திக்கு முன்பாகவும் கருங்கற்களால் அமைந்த மேடைகள் காணப்படுகின்றன. ஆலயத்தின் உப பீடம் (அடித்தளம்) முற்றாய் மண்ணுள் மறைந்துவிட்டது.

## சைவத் திருவடிவங்கள்

**கொழும்பு** நூதன பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக் கும் சைவத் திருவடிவங்களிற் சில, முதலாம் சிவாலயத்தில் வைக்கப் பட்டிருந்தவையாகும். எனவே, அவ் வடிவங்கள் சோழ சிற்ப முறை யைப் பின்பற்றி 13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளின் முற்பகுதியிலும் பின்பும் செய்யப்பட்டனவாதல் வேண்டும். பொலநறுவாவிலுள்ள 5ஆம் சிவாலயத்திலும் பல சைவத் திருவடிவங்கள் எடுக்கப்பட்டன. அச் சிவாலயத்தில் எடுக்கப்பட்ட வடிவங்கள் கலை வனப்பிலும், சிற்ப அமைப்பிலும், முதலாம் தேவாலயத்தில் எடுக்கப்பட்டன

வற்றிலும் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. இரண்டாம் சிவாலயத்தி லிருந்த வடிவங்கள் எவையும் அகப்படவில்லை.

ஐந்தாம் சிவாலயத்தில் எடுக்கப்பட்ட **சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், சண்டேஸ்வர நாயனர்** முதலி யோரின் வடிவங்களைப் போன்ற சிறந்த சிற்ப வடிவங்கள் தென் னிந்தியாவிலும் கிடைப்பது அரிதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவடிவம், உலகத்திலே சிறந்த சிற்ப வடிவங்களுள் ஒன்றென்பது கலைப்புலவர்கள் கருத்து. அவ் வாலயத்தி லெடுக்கப்பட்ட சிவ மூர்த்தமும் சிறந்த சிற்பங்களுள் ஒன்று.

## சுந்தரமூர்த்தி நாயனர்

**த**ம்பிரான் தோழர் என்று அழைக்கப்படும் சுந்தரர் திருவடிவம் (படம் 48) இறைவன் அவரைத் தடுத்தாட்கொண்டவமையத்து அவர் இறைவனது திருவருளின் பெருமையை நினைந்து, அருள்வயப்பட்டு மெய்ம்மறந்துநின்ற நிலையைக் குறிக்கின்றது. வாக்கினுலும் எழுதுகோலி னுலும் உணர்த்துதற்கரிய பேரின்ப நிலையைக் கலை அறிவுடையா ரெவரும் எளிதில் உணர்ந்து இன்புறக் கூடிய விதத்தில் இத் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இறைவன் திருவடிக்கண் தம்மை ஒன்றுபடுத்தி, நுகர நுகரத் தெவிட்டாத இன்பத்தை நுகர்ந்து வாழும் பக்தர்களது உள்ளப் பாங்கினை வெளிக்காட்டும் விதத்தில் வடிவங்களைச் செய்த சிற்பிகளின் திறன் பெரிதும் போற்றத்தக்கதே!

**ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ளன்குஞ்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக**
**விந்துவாழ் சடையா னடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்**

ஏனச் சேக்கிழார் சுவாமிகள் விளக்கிய பேரின்ப நிலையை ஒருவர் கண்களாற் கண்டு, உள்ளத்தில் அநுபவிக்க விரும்பினுல், அந்நிலையை இவ் வடிவத்தின் முன்னின்று பெறலாம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

**பா**ல் மணம் கமழுந் திருவாயினுல் இறைவனைப் பாடிய ஞான சம்பந்தரைக் குறிக்கும் இவ் வடிவத்தை (படம் 49) விடச் சிறந்த வேறு சம்பந்தர் வடிவம் எங்குமில்லை. அம்பிகை செம்பொற்

கின்னத் தமுத ஞானங் கொடுப்ப அழுகைதீர்ந்த வாயும், கங்கண மணிந்த கையிற் பொற்றாளமும், இடையிற் கிண்கிணி மணிகள் சேர்ந்த அரைஞாணும், உச்சிமீது சுற்றிய சிகையும், மார்பில் முத்தாரமும், கழுத்தில் உருத்திராக்கமணியுமாகிய யாவும், பார்ப்பவர் மனத்திற் பால உருவினைச் சிறப்புறக் காட்டுகின்றன வன்றோ! சேக்கிழார் பாட்டினால் விளக்கிக் காட்டிய திருவடிவை, சிற்பி வெங்கலத்தில் அமைத்துக் காட்டியுள்ளான். இதுவன்றோ உண்மைக் கலையின் நோக்கம்!

### திருநாவுக்கரசு நாயனார்

அப்பர் சுவாமிகளது வடிவங்களுள் இதுவே (படம் 50) முதன்மை பெறுவது. திருக்கோவணந்தரித்த இடையையும், உழவாரத்தின் படை ஏந்தி விளங்கும் திருக்கரங்களையும், உருத்திராக்கத் தாழ்வடங்கள் அணிந்த மார்பினையும், கடவுள் திருவடியில் வைத்த சிந்தையினையும், மெலிந்த திருமேனியையும் உடைய அப்பராய பெருந்தகையார் திருக்கோலம் இச்சிலையிற் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

### சண்டேசுவர நாயனார்

பக்தி நெறிக்கு வேண்டிய உடல்நிலையையும், புலன் அடக்கத்தையும், வணக்க நிலையையும், இறைவன் திருவடியிலே சரணடைந்த உள்ளத்தையும் நன்கு விளக்கிக் காட்டும் சிற்ப வடிவங்களுள் இவ்வடிவமும் (படம் 51) ஒன்றாகும்.

### சிவ மூர்த்தம்

இவ்வடிவமும் (படம் 52) சிறந்த தென்னிந்திய சிற்ப வடிவங்களுள் ஒன்று.

### நடராஜ வடிவம்

நடராஜ வடிவத்திற்குக் கூறப்பட்ட அம்சங்கள் யாவும் இதன்கண் (படம் 53) பொறிக்கப்பட்டிருக்கின்றன வெனினும், சிற்ப வனப்பு வாய்ந்த வடிவமாகத் தோன்றவில்லை; சென்னை, தஞ்சாவூர், கோணேரிராஜபுரம், பேரூர், திருநெல்வேலி முதலிய இடங்களிற் காணப்படும் நடராஜ வடிவங்களின் அங்க அமைப்பும், கலை வனப்பும் இவ்வடிவத்திற் காணப்படவில்லை.

## திருகோணமலைத் திருவடிவங்கள்

இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் திருகோணமலையிற் சில சைவத் திருவடிவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை சிறந்த சிற்ப அழகும், கலை வனப்பும் பொருந்தியனவாகக் காணப்படுகின்றன. அவ் வடிவங்கள் திருக்கோணேசர் ஆலயத்தைச் சேர்ந்தவை. அவை 1950ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டன. சோமாஸ்கந்த வடிவமும், பார்வதியின் வடிவமும், சந்திரசேகரர் வடிவமும் மிகவும் அழகு வாய்ந்தன (படம் 54). சந்திரசேகர வடிவம் மிகவும் பழமையானது போற் காணப்படுகின்றது. மற்றைய இரண்டும் பாண்டியர் காலத்து வடிவங்களைப் போன்றனவாகக் காணப்படுகின்றன. திருக்கோணேசர் ஆலயம் 1624ஆம் ஆண்டு போத்துக்கேயரால் அழிக்கப்பட்டது.

## அநுமார்

இலங்கையில் எடுக்கப்பட்டு இப்பொழுது பாரிஸ் நகரில் வைக்கப்பட்டிருக்கும் அநுமாரது வடிவம் (படம் 55) தமிழ் நாட்டுச் சிறந்த சிற்பவடிவங்களில் ஒன்றாகும். மிருக வடிவத்தில், மனித குணங்களாகிய தாழ்மை, பக்தி, அடக்கம் என்பனவற்றைப் பொருத்திக் காட்டும் இயல்பில் இவ் வடிவம் சிறந்து விளங்குகின்றது. உள்ளப் பாங்கினுக் கேற்ப உடல் அமைவுறுதல்வேண்டு மென்னும் பெரும் சிற்ப உண்மையை இவ் வடிவம் நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையிலும், இலங்கையின் பல பகுதிகளிலுள்ள பௌத்த சைவ ஆலயங்களிலும், சிற்பத் திறமும், கலை வனப்பும் பொருந்திய சைவத் திருவடிவங்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம், சிற்பக் கலையில் ஆர்வமுள்ளோரும், அத்துறையில் ஆராய்ச்சி செய்வோரும் சென்று நேரிற் கண்டு இன்புறுவதே பொருத்தமுடைத்தாகும். ஒரு சிறிய நூலில் ஒவ்வொன்றையும் விரித்து எழுதுவது இயலாத காரியமாகும்.

இலங்கையிற் காணப்படும் சைவத் திருவடிவங்களை, அவ்வக் காலங்களில் இந்நாட்டில் வாழ்ந்த சைவச் சிற்பிகளே செய்திருத்தல் வேண்டும். சில வடிவங்கள் தமிழ் நாட்டிலிருந்தும் தருவிக்கப்பட்டிருக்கலாம். யாழ்ப்பாணத்தில் இன்றும் சைவச் சிற்பிகளின் குடும்பங்கள் இத் தொழிலைச் செய்துவருகின்றன. ஆனால் அவர்கள் செய்யும் வடிவங்கள் பண்டைய வடிவங்களைப் போன்ற கலை வனப்பு உடையனவல்ல.

## ஏழாம் அத்தியாயம்

# யாழ்ப்பாணத்திற் சைவ ஆலயங்கள்

**யா**ழ்ப்பாணக் குடாநாடு பண்டைக் காலத்தில் **நாகதீபம்** என இலங்கைச் சரித்திரத்தில் வழங்கப்பட்டுவந்த தென்பதும், புத்தர் காலத்திலும் அதற்கு முன்பும், மக்கள் அங்கு வசித்தார்க ளென்பதும் இலங்கை வரலாற்று நூல்களால் அறியக்கிடக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குக் **கதிரைமலை, சிங்கைநகர், நல்லூர்** என்னும் நகரங்கள் முறையே இராசதானிகளாகக் காலத்திற்குக் காலம் விளங்கினவென யாழ்ப்பாணச் சரித்திரம் கூறும். நாகர்களது ஆதிக்கம் சிறந்து விளங்கிய காலத்தில் கதிரைமலை (கந்தரோடை) தலைநகராக விளங்கியது.[1]

கதிரைமலையில் தேவநம்பியதீசன் காலத்திற்குப் பின் பௌத்த சமயமும் பரவியிருந்த தென்பதற்கு அங்கு காணப்பட்ட பௌத்த சிற்ப வடிவங்களும், வேறு பொருள்களும் தக்க சான்றுகளாகும். தேவநம்பியதீசன், நாகதீபத்தில் **சம்புகோள விகாரை**யையும், **திசமகா விகாரை**யையும், **பாசின விகாரை**யையும் கட்டினமை கூறப்பட்டுள்ளது.[2]

எட்டாம் நூற்றாண்டில் கலிங்கதேசத்து அரசனாகிய **உக்கிர சிங்கன்** கதிரைமலையைக் கவர்ந்து, நாகதீபத்திற்கு அரசனானான். இவனே **மாருதப்புரவீகவல்லி** யென்னும் சோழ இராசகுமாரியை மணந்து அவளின் விருப்பத்திற்கிணங்கி **மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை**க் கட்டுவித்தவன். இவ்வரசன் சிறிது காலத்திற்குப் பின், பருத்தித்துறைக்கு அணித்தாயுள்ள **வல்லிபுரம்** என்னும் இடத்தில் ஒரு நகரை அமைத்து அதற்குச் சிங்கைநகர் என்னும் பெயரிட்டு அங்கிருந்து நாட்டை ஆண்டுவந்தான். பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோழநாட்டை ஆண்ட **முதலாம் குலோத்துங்கன்**

---

1. *யாழ்ப்பாணச் சரித்திரம் — பக். 29.*
2. *Nagadipa and Buddhist Ruins in Jaffna. J. R. A. S. (Ceylon) — Vol. XXVI. No. 70. p. 11.*

தன் சேனாதிபதியாகிய **கருணாகரத் தொண்டைமானை** அனுப்பி இலங்கையை வென்ற நிகழ்ச்சி அவன் சாசனங்களிலும், **கலிங்கத்துப் பரணியி**லும் கூறப்பட்டுள்ளது. கருணாகரன் தொண்டைமானாற்றை யும் வெட்டுவித்து, இப்பொழுது உரும்பராயிலிருக்கும் கருணாகரப் பிள்ளையார் கோவிலையும் கட்டுவித்தான்.[1] கி. பி. 1410ஆம் ஆண்டில் அரசனாகிய **குணவீரசிங்க ஆரியன்** எனப்படும் **பரராசசேகரனே** சிங்கை நகரிற் கடைசியாகச் சிறப்புடன் அரசு செலுத்திய மன்னனாவான். **இராமேச்சரக்** கர்ப்பக்கிரகத்தைத் திருகோணமலைக் கற்களைக் கொண்டு கி. பி. 1414ஆம் ஆண்டிற் கட்டுவித்த அரசனும் இவனே.

பரராசசேகரன் மகன் **கனகசூரியசிங்க ஆரியன்** ஆட்சிக் காலத்தில் (1450) கோட்டை அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு தன் சேனைத் தலைவனை **செண்பகப்பெருமாளை** அனுப்பினான். செண்பகப்பெருமாள் நகரை அழித்து அரசனையும் வெற்றிகொண்டான். பராக்கிரமபாகுவின் அநுமதியோடு செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்திற்கு அரசனானான். சிங்கைநகர் பாழாகிவிட்டதினால், **நல்லூரை** இராசதானியாக்கி **ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு** என்னும் பெயருடன் செண்பகப் பெருமாள் 17 வருடங்களாக ஆண்டுவந்தான். இவனே **நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைக்** கட்டுவித்தவன். கோட்டை அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகு இறந்தபின், இவன் அங்கு சென்று **ஆறாம் புவனேகபாகு** வென்னும் பெயருடன் அரசனாக இருந்து, யாழ்ப் பாணத்திற்கு அரசனாக **விஜயபாகு** என்னும் ஒருவனை நியமித்தான்.

விஜயபாகுவின் காலத்தில் கனகசூரியன் தென்னிந்தியாவி லிருந்து சேனையுடன் வந்து, விஜயபாகுவை வென்று நல்லூருக்கு அரசனானான். கனகசூரியனுக்குப் பின் அவன் குமாரன் **சிங்கைப் பரராசசேகரன்** கி. பி. 1478ல் அரசனானான். இவனே நல்லூரைச் சைவ ஆலயங்களும், மாட மாளிகைகளும் நிறைந்த நகரமாக்கியவன். இவ்வரசன் ' நகருக்கு வடபாலில் **சட்டநாதர் திருத்தளி**யையும், கிழக்கில் **வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்**தையும், தென்பாலில் **கைலாசநாதர் கோவிலை**யும், மேற்கில் **வீரமாகாளி அம்மன் திருப் பதி**யையும் அழகுபெறக் கட்டுவித்தான். கந்தசுவாமி கோவிலுக்கு

1. *Ancient Jaffna. — pp. 266—267.*

அருகில் ஒரு திருக்குளம் அமைத்து அதற்கு யமுனுரி என்னும் பெயரிட்டான். இக்குளம் இன்றும் நல்லூரிற் காணப்படுகின்றது.

சிங்கைப் பரராசசேகரனுற் கட்டப்பட்ட இப் பெரிய சைவ ஆலயங்கள் யாவும் போத்துக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டதனுல், அவ் வாலயங்கள் எத்தகைய சிற்பச் சிறப்புகள் பொருந்தியனவாக அமைக்கப்பட்டன வென்பதை நாம் இன்று அறிய முடியாதிருக்கின்ருேம்.

உக்கிரசிங்கனுல் 8ஆம் நூற்ருண்டில் கட்டப்பட்ட மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும், செண்பகப்பெருமாள் என்னும் ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுவாற் கட்டப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோவிலும் போத்துக்கேயரால் அழிக்கப்பட்டன. இன்று மேலே கூறப்பட்ட இடங்களிற் காணப்படும் ஆலயங்கள் 1793ஆம் ஆண்டிற்குப் பின்னும், ஆங்கிலேயர் அரசாட்சிக் காலத்திலும் கட்டப்பட்டனவேயாகும். யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களே இடித்து எடுத்த கற்களேக்கொண்டே யாழ்ப்பாணத்துக் கோட்டையைப் போத்துக்கேயர் கட்டினர் என்பதற்கு, இக் கோட்டையின் அத்திவாரத்திற் காணப்படும் தாமரைப்பூச் சித்திரம் செதுக்கப்பட்டவாயிற் படிக்கல்லே அழியாச் சான்ருகும் (படம் 56).

இப்பொழுது நல்லூரிலிருக்கும் சட்டநாதர் ஆலயத்தின் திருக்குளத்தை வெட்டியபொழுது, சில திருவடிவங்கள் மண்ணுள் கிடந்தெடுக்கப்பட்டன. அவை: உமாதேவி, தக்ஷிணுமூர்த்தி, கஜலக்ஷ்மி, (படம் 57) வள்ளி தெய்வயானே சமேத மயில்வாகனர், சனீஸ்வரன் என்பனவாம். உமாதேவியின் திருவடிவம் கோவிலில் இன்றும் இருக்கின்றது. மற்றைய வடிவங்கள் யாழ்ப்பாணத்து நூதன பொருட்காட்சிச்சாலேயில் வைக்கப்பட்டிருக்கின்றன. இத் திருவடிவங்கள் சிங்கைப் பரராசசேகரன் காலத்தனவாதல் வேண்டும். அல்லது அதற்குப் பிந்தியனவும், போத்துக்கேயர் காலத்திற்கு முந்தியனவுமாதல் வேண்டும். நல்லூர் யாழ்ப்பாணத்து இராசதானியாக விளங்கிய காலத்தில், தமிழ்நாட்டிற் சிறப்பெய்தியிருந்த சிற்ப முறை விஜயநகர சிற்ப முறையேயாகும். எனவே, சட்டநாதர் ஆலயத்திற் காணப்பட்ட திருவடிவங்களும் இம்முறையைச் சேர்ந்தனவாகவே இருத்தல்வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாடு மிகப் பண்டைக்காலந் தொடக்கம் சைவ சமயத்திற்கு நிலைக்களமாக விளங்கியபோதிலும், அக்காலத்துக் கலைச் சிறப்புகளை நாம் அறியக்கூடிய வகையில் எமக்குப் போதிய சான்றுகள் இன்று அகப்படவில்லை. நல்லைநகர்க் காலத்துச் சிறப்புப் பொருள்களுக்குச் சான்றுகளாக அகப்பட்டுள்ளன சட்டநாதர் ஆலய வடிவங்களே யாகும். வல்லிபுரத்திலும், கந்தரோடையிலும், நாகர்கோவிலிலும், நல்லூரிலும், ஏனைய பகுதிகளிலும் புதைபொருள் ஆராய்ச்சிப்பகுதியினர் சிரத்தையோடு ஆராய்ச்சி நடத்துவார்களாயின், பண்டைய யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த ஆலயங்களின் சிறப்புப் பொருள்களும் வேறு பல பொருள்களும் அகப்படக் கூடும். இவ் வழியில் அரசினரும், கலா விருத்தி நிலையங்களும் கருத்துச் செலுத்துதல் மிகவும் விரும்பத்தக்க செயலாகும்.

## எட்டாம் அத்தியாயம்

# இலங்கை ஓவியங்கள்

கட்டடக் கலை, சிற்பம் முதலியனவற்றிற்கு எவ்விதம் இலங்கை புகழ்பெற்றிருந்ததோ, அவ்விதமே ஓவியக் கலையிலும் சிறந்து விளங்கியது. இந்தியாவில் வளர்ச்சிபெற்ற ஓவியக் கலை, இலங்கையிலும் பரவியது. குப்தர் காலத்து அஜந்தா ஓவியங்களும், பாக் ஓவியங்களும் உலகப் பிரசித்திபெற்றவை. அஜந்தா ஓவியங்களுக்கு அடுத்தபடியில் வைத்து மதிக்கப்படுதற்குரியன சிகிரியா (படம் 58) ஓவியங்களேயாகும்.

தென்னிந்தியாவில் பௌத்த சமயம் பரவிய காலத்தில், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பௌத்த விகாரங்களும், அறவோர் பள்ளிகளும் அமைக்கப்பட்டன. 'மணிமேகலை'யிற் கூறப்பட்ட தமிழ்நாடு பௌத்த மயமாய் விளங்கிய தென்பது, அந் நூலைப் படிப்போர் எளிதில் உணரக்கூடிய உண்மை ஆகும். காஞ்சிபுரத்திலும், வஞ்சி மாநகரிலும் பௌத்த சமயத் தவச்சாலைகளிலுள்ள மண்டபங்களில் ஓவியங்கள் வரையப்பெற்றிருந்தன வென்பதை பின்வரும் 'மணி மேகலை' அடிகளால் அறியலாம்:

> "சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங்
> கோலங் குயின்ற கொள்கை யிடங்களும்."

'கோலங் குயின்ற கொள்கை யிடங்கள்' என்பது ஓவியங்கள் வரையப்பெற்ற மண்டபங்களைக் குறிப்பதாகும். வஞ்சிமாநகரில் கோவலன் தந்தையாகிய மாசாத்துவான், தவஞ்செய்துகொண்டிருந்த தவச்சாலையில் சித்திரங்கள் எழுதப்பெற்றிருந்தன வென்று ஆசிரியர் கூறுகின்றார். தென்னிந்தியாவில், காஞ்சி கைலாசநாதர் ஆலயத்திலும், சித்தன்ன வாசல் குகையிலும், தஞ்சை இராஜ ராஜேஸ்வரர் ஆலயத்திலும் பல்லவரதும் சோழர்களதும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

துட்டகெமுனு கட்டிய ருவான்வெலிசாயா தாதுகோபத்திலும், லோகமகாபாயா என்னும் விரத இல்லத்திலும் ஓவியங்கள் அமைக்கப்பட்டிருந்தன. லோகமகாபாயா விரத இல்லத்தின் மேல் மாடங்களில் ஓவியங்கள் அழகுபெற அமைக்கப்பட்டிருந்தனவாக மகாவம்சம் கூறுகின்றது.

தம்புள்ளாவிலுள்ள குகைக்கோவில்களில் பௌத்த ஓவியங்கள் காணப்படுகின்றன. அக் குகைக் கோவில்களை முதல் அமைத்தவன் கி. மு. முதலாம் நூற்றாண்டிலிருந்த வத்தகாமனி அபயன் என்னும் அரசனாவான். அங்கு காணப்படும் ஓவியங்கள் பின் நிசங்கமல்லனால் புதுப்பிக்கப்பட்டன. அதன் பின்னர், கண்டி யரசர் காலத்தில், அவை புதுப்பிக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. அக் குகையில் இன்னுஞ் சில இடங்களிற் பழைய ஓவியங்கள் காணப்படுகின்றன.

பொலநறுவாவிலுள்ள இலங்கைத்திலக விகாரையிலும், திவங்க ஆலயத்திலும், கல் விகாரையிலும் அக் காலத்து ஓவியங்கள் காணப்படுகின்றன. சோழர்கள் ஓவியக் கலையையும் பெரிதும் போற்றி வளர்த்தார்கள். பொலநறுவை, மும்முடிச் சோழமண்டலம் எனப்படும் இலங்கைக்கு, இராசதானியாக விளங்கியமையால், அக் காலத்தில், அந் நகரிலுள்ள நிலையங்களிலும் சோழர்களது ஓவியங்கள் இருந்தனவாதல் வேண்டும். சோழர் காலத்து ஓவிய முறை பல்லவர்களது ஓவிய முறையைப் பின்பற்றி வரையப்பெற்றன.

முதலாம் பராக்கிரமபாகு பொலநறுவாவைச் சிறப்பாக அமைத்தபோது, தான் அமைத்த கோவில்களிலெல்லாம் பௌத்த சமய சம்பந்தமான ஓவியங்களை அமைத்தான். அந் நகரிலுள்ள பௌத்த ஆலயங்களில் இன்று காணப்படும் ஓவியங்கள் பெரும் பாலும் அவன் காலத்தில் அமைக்கப்பட்டனவே. திவங்க ஆலயத்திற் காணப்படும் சில ஓவியங்கள் (படம் 59), அஜந்தா ஓவியங்களை நினைவூட்டுகின்றன.

ஹிந்தலாகலா, மகியங்கண, திம்புலாகலா, பொலிகொட கல்கே முதலிய இடங்களிலும் பழைய ஓவியங்கள் காணப்படு கின்றன. மகியங்கண போதிசத்துவ ஓவியம், அஜந்தா போதி சத்துவ வடிவத்தைப் போலிருக்கின்றது. ஹிந்தலாகலா குகை ஓவி யங்கள் ஆறும், ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தனவெனக் கருதப் படுகின்றன. வடமத்திய மாகாணத்திலுள்ள திம்புலாகலா குகை ஓவியங்களும் அக்காலத்தனவே.[1]

1. *Singhalese Art and Culture — by Dr. S. Paranavitane.*

ஹிந்தலாகலா, மகியங்கண, திம்புலாகலா, பொலிகொடகல்கே, தம்புள்ளா, பொலநறுவா முதலிய இடங்களிற் காணப்படும் ஓவியங்கள் சமய சம்பந்தமுடையன. ஆனால், சிகிரியா ஓவியங்கள், அரண்மனை வாழ்க்கையி லீடுபட்ட மாதர்களைக் குறிக்கும் ஓவியங்களாகக் காணப்படுகின்றன. சிகிரியா ஓவியங்கள் என்ன நிகழ்ச்சியைக் குறிக்கின்றன வென்பதை எவரும் அறுதியிட்டுக் கூறவில்லை. அங்கு காணப்படும் வடிவங்கள் அப்சர ஸ்திரிகளாக விருத்தல் வேண்டுமெனச் சிலர் கூறுகின்றார்கள். வேறு சிலர் அவைகள் காசியப்பன் அரண்மனைப் பெண்களும் தாதிகளும் எனக் கூறு கின்றனர்.

இலங்கையிற் காணப்படும் ஓவியங்கள் யாவும் குகை ஓவியங்களும், சுவர் ஓவியங்களுமாம். சிகிரியா, தம்புள்ளா, கல்விகாரை, ஹிந்தலாகலா, திம்புலாகலா முதலிய இடங்களிற் காணப்படுவன குகை ஓவியங்களாகும். பொலநறுவா, கண்டி, மகியங்கண, களனியா முதலிய இடங்களிற் காணப்படுவன சுவர் ஓவியங்களாகும் ( Murals ).

இலங்கையிலுள்ள ஓவியங்கள் யாவும், இந்திய ஓவியங்களைப் போல அபிநயச் சிறப்பு வாய்ந்தன. உணர்ச்சிபொருந்திய நிலைகளை, உடல் நெளிவினும், விரல் முத்திரைகளினும் வெளிக்காட்டும் இயல்பில், இலங்கை ஓவியங்கள், இந்திய ஓவியங்களை ஒத்தன. மனத்தின் நிலையை வரிகளாற் காட்டுவது இலங்கை ஓவியங்களின் சிறந்த இயல்பு. இத்தன்மைகள், பொலநறுவாவிலும், மகியங்கணவிலுமுள்ள ஓவியங்களில் நன்கு காணப்படுகின்றன. திவங்க ஆலயத்திலும், மகியங்கணவிலுள்ள வடிவங்களிலும் ஆத்மீக இயல்பு பெரிதும் பிரகாசிக்கின்றது. இத்தன்மை சிகிரியா ஓவியங்களிற் காணப்படவில்லை. களனியா ஓவியங்களும், தம்புள்ளா ஓவியங்களும் கலை வனப்புப் பொருந்தியனவாகக் காணப்படவில்லை.

பொலநறுவாக் காலத்துக்குப் பின், இலங்கையில் ஓவியக்கலை அபிவிருத்தி அடையவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

சிற்ப வடிவங்களுக்கு வர்ணந்தீட்டும் வழக்கமும் இலங்கையில் இருந்தது. கட்டடங்களின் மரவேலைப்பாடுடைய பகுதிகளுக்கு

வர்ணங்கள் அமைத்தலும் பழைய வழக்கங்களில் ஒன்று. கண்டி தந்தஆலயத்து மரவேலைப்பகுதிகள் வர்ணந்தீட்டப்பட்டிருப்பதை நாம் இன்றுங் காணலாம்.

சிகிரியா ஓவியங்களையும், தம்புள்ளா ஓவியங்களையும்விட எல்லாப் பழைய ஓவியங்களும் அழிந்த நிலையில்தான் இன்று காணப்படுகின்றன. பழைய ஓவியங்களின் சிறப்பினை நாம் பூரணமாக அறிய முடியாத நிலையில் இன்று இருக்கின்றோம். ஆனால், அவ்வோவியங்களின் வரிகளைக்கொண்டும், உடல்கள் அமைந்திருக்கும் தன்மையைக்கொண்டும், அவற்றின் சிறப்பியல்புகளை ஓரளவுக்கு நாம் அநுமானித்துக்கொள்ளுதல் சாலும்.

கட்டுரைகளினாலும், படங்களின் உதவியாலும், நாம் பழைய ஓவியங்களின் தனிப்பெருஞ் சிறப்பினை அறிந்துகொள்ளுதல் இயலாது. அவ் வோவியங்களை நேரிற் கண்டு, அவற்றின் கலை வனப்பை நுகர்தலே பொருத்தமுடைய செயலாகும். இலங்கையிலுள்ள ஓவியங்களின் சிறப்பினை நேரிற் கண்டு இன்புறும்வண்ணம் பல நாட்டு மக்கள், எங்கள் நாடு நோக்கி வருகின்றனர். ஆனால், நாம் எமது நாட்டிலுள்ள கலைப்பொருள்களை நேரிற் கண்டு இன்புறும் மனப்பான்மை யற்றவர்களாக வாழ்கின்றோம். கலைப் பண்புகளை உள்ளத்தில் வளர்க்கும் நோக்கம் அற்ற கல்வி முறை நாட்டில் வளர்ச்சிபெற்றமையே இந்நிலைக்குக் காரணமாகும்.

## ஒன்பதாம் அத்தியாயம்

# கலையும் கைத்தொழிலும்

**நா**ம் இதுகாறும் இலங்கையிற் கலைகள் எவ்விதம் காலத்துக்குக் காலம் வளர்க்கப்பட்டனவென்றும், இலங்கையின் கலைப் பொருள்களின் சிறந்த அம்சங்கள் எவை என்றும், இன்று நாட்டிற் காணப்படும் பண்டைய கலைப் பொருள்கள் எவை என்றும் சுருக்கமாக ஆராய்ந்தோம். கலைகள் சிறந்த முறையில் வளர்ச்சி பெறுவதற்குச் சாதகமாக அக்காலத்திலிருந்த சமூக அமைப்பையும், தொழில் முறைகளையும் ஆராய்வதே இவ் வத்தியாயத்தின் நோக்கமாகும்.

### கைத்தொழில் முறை

**பூ**ர்வீக இலங்கையில் தொழில்கள் யாவும் குடிசைகளிலேதான் செய்யப்பட்டுவந்தன. கிராமங்களில் இன்றும் அந் நிலைமை மாறாது இருப்பதை நாம் காண்கின்றோம். தொழில்கள் குலவித்தையாகக் கையாளப்பட்டுவந்தன. கைத்தொழிற் கல்வி பரம்பரைக் கல்வியாகவே இருந்தது. மகன் தந்தையிடமிருந்தே தொழிற் கல்வியைக் கற்று வந்தான்.

சிற்ப சாத்திரங்களிற் கூறப்பட்ட முறைப்படி கைவினைஞர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திவந்ததோடு, அந் நூல்களிற் கூறப்பட்ட பிரமாணங்களுக் கமையவே கலைப்பொருள்களையும் அமைத்து வந்தனர். "இடைக்காலத்தில் வாழ்ந்த கைவினைஞர்கள், அறிவில் மிக்கோராயும், புதிய முறைகளைக் கையாள வல்லோராயு மிருந்ததுடன், சமயக் கணக்கரோடு சமநிலை யுடையோராயும் விளங்கினார்கள்" என ஓர் அறிஞர் கூறுகின்றார்.[1]

டக்டர் ஆநந்தக்குமாரசுவாமி அவர்கள் பண்டைய கைத்தொழிற் கல்வி முறையைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

"உண்மையான வேலைத்தலத்தில் கைவினை மாணவன் பயிற்றப் படுவதோடு வளர்க்கவும் படுகின்றான். அவன் தன் தந்தையின் சீடனுமாகின்றான். அவன் இந்த நிலைமைகளை இழக்க நேரிடின், உலகிலுள்ள எந்தத் தொழிற் கல்வியும் அதற்கு ஈடு செய்ய

1. *Indian Sculpture and Painting — p. 183*

முடியாது. வேலைத்தலத்தில், ஆரம்பமுதல் தொழில் முறை, உண்மைப் பொருள்களோடும் உண்மை நிகழ்ச்சிச் சூழல்களோடும் தொடர்புள்ளதாக, பணிசெய்வதன் மூலமும், ஆசானுக்கு நேரில் தொண்டாற்றுவதன் மூலமும் கற்கப்படுகிறது. அங்கு கற்பிக்கப் படுவது தொழில்முறைமட்டுமன்று. வேலைத்தலத்தில் வாழ்க்கையே உளது. அது மாணவனுக்கு உளப் பண்பாட்டோடு வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களின் அறிவையும் அளிக்கின்றது. கலைக்குத் தொழின் முறையைக் காட்டிலும் இவையே இன்றியமையாதன."[1]

இக் காலத்திற் காணப்படும் முதலாளி, தொழிலாளி என்னும் பாகுபாடு அக் காலத்தில் இருக்கவில்லை. எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஒரு பொதுத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் வழக்கமும் அக் காலத்தில் இல்லை. ஒவ்வொரு குடிசையும் ஒவ்வொரு தொழிற் சாலையாகவும், குடும்பத் தலைவன் முதலாளியாகவும், அவன் மனைவி, மக்கள், உறவினர் தொழிலாளிகளாகவும் விளங்கினார்கள்.

நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் ஒரே விதமான தொழிலையே விரும்பிச் செய்யும் வழக்கம் அக் காலத்தில் இல்லை. குறிக்கப் பட்ட மக்கள், குறிக்கப்பட்ட தொழில்களைப் பரம்பரை பரம்பரை யாகச் செய்துவந்தனர். அவ் வொழுங்கின் பயனாய் மக்களிடையே வேலையில்லாத நிலை ஏற்படாதிருந்தது. ஒவ்வொருவருக்கும் உயிர் வாழ்வதற்கு வேண்டிய சொந்தத் தொழில் ஒன்று இருந்தேவந்தது. அக் காலத்தில் ஒரு கூட்டத்தினரின் தொழிலை வேறொரு கூட் டத்தினர் செய்ய முயற்சிக்கவில்லை. அவ்விதஞ் செய்ய முற்படுவோர் குலத்துரோகிகள் எனக் கருதப்பட்டனர். 'தன்தொழில் விட்டவன் சாதியிற் கெட்டவன்' என்னும் பழமொழி இக் காரணம்பற்றியே எழுந்தது போலும். ஒவ்வொரு குலத்தினரும், தங்கள் குல வித்தையை, நன்கு போற்றி வளர்த்துக் கௌரவத்துடன் வாழ்ந்தனர்.

கம்மாளர் வகுப்பைச் சேர்ந்த கைவினைஞர்களுக்குச் சிறந்த இடம் சமூகத்தில் அளிக்கப்பட்டிருந்தது. கோவில்களையும், அரண் மனைகளையும், பொது மக்கள் இல்லங்களையும் அமைக்குங் காலங்களில், அவ் வேலைகளில் ஈடுபடும் கைவினைஞர்கள், தக்க கௌரவத்துடன் நடத்தப்பட்டு வந்தனர். அந் நிலையங்களோடு தொடர்புடைய எல்லாக்

1. Indian Craftsman — p. 84.

கிரியைகளிலும், அவர்கள் முதல் இடம் பெற்றனர். இவ் விபரங்களை யெல்லாம் பௌத்த நூல்களிலும், தமிழ் நூல்களிலும் காணலாம்.

இக் காலத்தில் வழக்கிலிருக்குஞ் சம்பள முறை அக் காலத்தில் இருந்ததில்லை. பண்டமாற்று முறையே அக் காலத்துச் சம்பள முறையாகும். கிராம மக்கள் தாங்கள் பெறும் பொருள்களுக்குத் தானியங்களையும், புடைவைகளையும், பிற பொருள்களையும் சம்பளமாகக் கொடுத்து வந்தனர். இதைவிட, இல்லங்களிற் சமய சம்பந்தமானவையும், சமூக சம்பந்தமானவையுமான கிரியைகள் நடக்கும் வேளைகளில், அந்நிகழ்ச்சிகளுக்கு வேண்டப்படும் கைவினைஞர்களுக்குப் போதிய சன்மானங்கள் வழங்கப்பெற்றன.[1] இத்தகைய ஒழுங்கு முறை, கிராம மக்களை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல நடந்துகொள்ளத் துணைபுரிந்ததுமன்றி, அவர்களிடையே ஒற்றுமையையும், அன்பையும் வளர்த்து வந்தது.

இந்தியாவிலும், இலங்கையிலும் இன்று காணப்படும் பழைய பெரும் ஆலயங்களையும், தாதுகோபங்களையும் கட்டுவித்தவர்கள் அரசர்களேயாவர். பெருந் திருப்பணிகளை அரசர்கள் செய்யத் தொடங்கும் காலங்களில், அவ்வேலைகளுக்கு வேண்டிய திறமைபடைத்த கைவினைஞர்களை, நாடெங்கும் ஆராய்ந்து தேடி எடுத்து, அவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் வேண்டிய பல வசதிகளை அமைத்துக் கொடுத்துத் திருப்பணியைத் தொடங்குவார்கள். அக் கைவினைஞர்களுக்கு ஒரு குறித்த கிராமத்தின் வருவாயை மானியமாக அளிப்பதும் வழக்கமாக இருந்தது. கைவினைஞர்களின் தலைவனாக விளங்கும் ஆசாரிக்கு முழுக் கிராமத்தையும் சொந்தமாகச் சன்மானம் பண்ணிய நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன.[2]

## தொழிலும் கலைகளும்

**பொ**ருள்கள் கலை நூல்களிற் கூறப்பட்ட அளவுப் பிரமாணத்திற்கிணங்கவே அமைக்கப்பட்டன. பிரமாணந் தவறியன அமங்கலப் பொருள்களாக விலக்கப்பட்டன. விகாரவடிவுடைய பொருள்களையும், உடைந்தனவற்றையும் உபயோகிக்க மக்கள் விரும்பியதில்லை. அத்

1. *The Indian Craftsman* – pp. 5 — 6.
2. ஷை -- pp. 33 — 34.

காரணத்தினால், உபயோகத்திலிருந்த பொருள்கள் யாவும் அளவுப் பிரமாணமுடையனவாயும், கலை வனப்புப் பொருந்தியனவாயும் இருந்தன. அக்காலத்து மக்கள் தினசரி வாழ்க்கையில் உபயோகித்த உபகரணங்கள் இக் காலத்து நகரங்களிலுள்ள சித்திரசாலைகளில் ( Art Galleries ) அலங்காரப் பொருள்களாகக் காட்சிக்கு வைக்கப் பட்டிருப்பதை நாம் அறிவோம். இதிலிருந்து அக் காலத்துக் கைவினைஞர்களது வேலைத்திறனையும், கலைப் பண்பையும் நாம் நன்கு அநுமானித்துக்கொள்ளலாம்.

அக் காலத்தில் எப்பொருளும் காட்சிப் பொருளாகச் செய்யப் பட்டதன்று. எல்லாப் பொருள்களும் அரசர்கள், செல்வர்கள் பொதுமக்கள் ஆகியோர் பெரும்பாலும் தினசரி வாழ்க்கையில் உப யோகிப்பதற்காகவே செய்யப்பட்டன. திருவடிவங்கள் பூசைக்கும், தியானத்திற்கும் மாத்திரமே செய்யப்பட்டன. தாதுகோபங்களும், சிவாலயங்களும் கடவுள் வழிபாட்டிற்குச் சாதனமாகவும், தெய்வ அர்ப்பணமாகவும் அமைக்கப்பட்டன.

ஒவ்வொரு பொருளிலும் உபயோகத்தன்மையும் ( Utility ) அழகும் ஒன்றுபட்டு விளங்கின. கைவினைஞர்கள் ஒழுக்கமான வாழ்க்கையாலும், சிற்பநூற் புலமையாலும், சமயப் பற்றினாலும் பண்படுத்தப்பட்ட தமது உள்ளங்களில், தாம் எழுதிக் கண்ட அழகு பொருந்திய உருவங்களையே வெளிப்பொருள்களில் அமைத்து மகிழ்ந்தனர். அக்காலக் கைவினைஞர் தாம் அமைக்கும் வடிவங்க ளுடன் தம்மை ஒன்றுபடுத்தி நின்றே அவற்றைத் திறம்பட அமைத்தனர் என்பது கலைக்கண்கொண்டு அப் பொருள்களைக் கண்ணுறுவார்க்கு நன்கு புலனாகும்.

ஒரு பொருளானது கலை அம்சங்கள் பொருந்த அமைக்கப்பட வேண்டுமாயின், அப் பொருளை அமைக்க முன்வரும் கைவினைஞன், கலை உள்ளம் படைத்தவனாக விருத்தல்வேண்டும். கலைப் பண்பு, வெறுங் கைச்சாதுரியத்தாலும், தொழிற் பயிற்சியாலும் மாத்திரம் ஏற்படுவதன்று. உள்ள மலர்ச்சியின் பயனாய் ஏற்படும் நிலையே கலைப் பண்பாகும். அந்நிலை ஆத்மீகத் தன்மை பொருந்தியது; ஐம்புல இன்ப நிலைக்கு அப்பாற்பட்டது; சடத்துவம் எதுவும் இல் லாதது. சடப்பொருள்கள் மூலம் பிரகாசிக்கும் ஆத்மீக இன்ப

நிலையே கலைப் பண்பாகும். இக் காரணம்பற்றியே சிற்பியானவன் தியான யோகத்திலும், ஒழுக்க நெறியிலும் தேர்ச்சி அடைந்தவனாய் இருத்தல்வேண்டு மெனக் கூறப்படுகின்றது. சிறந்த கல்வியும், நற்குணமும், ஒழுக்கமான வாழ்வும், சாந்தமுடைய மனநிலையும் பொருந்திய ஒருவனே கலைப் பண்பு நிறைந்த ஆற்றலுடையவனாய் விளங்குதல் கூடும். கலையின்பத்தைக் கைவினைஞன் தான் அனுபவித்தாலன்றி, அதனைப் புறப்பொருள்களில் விளங்கும் விதத்தில் அமைத்தல் இயலாது. இயந்திரங்கள் மூலம் கலைப் பொருள்களை அமைத்தல் இயலாத காரியமென அறிஞர் கூறுவதும் இக் காரணம்பற்றியே யாகும். "இயந்திரம் மனிதனுக்கு அடிமையாக இருக்கவேண்டுமன்றி, மனிதன் அதற்கு அடிமையாகக் கூடாது. இயந்திரம் அழகையும் வாழ்க்கையில் இன்பத்தையும் வளர்க்கக்கூடியதன்று. அதை அதற்குரிய இடத்தில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்" என சேர் ஜோர்ஜ் பேட்வுட் ( Sir George Birdwood ) கூறுகின்றார்.

கடவுள் பக்தியும், உயரிய நோக்கும், எளிமையான வாழ்க்கையில் விருப்பமும் நாட்டிற் பரவினாலன்றி, கலை சிறந்த இடம் பெறுதென்பது திண்ணம். எல்லாத் தொழிலும், சீவனோபாயத்தை மாத்திரமே நோக்கமாகக்கொண்டிருத்தல்வேண்டு மென்னுங் கருத்து, கலை வளர்ச்சிக்கு இடையூறான மனநிலையாகும். ஆத்மீக இயல்புகளின் பூரணத்துவமே வாழ்க்கையின் முக்கிய நோக்கமென்றும், தொழில்கள் யாவும் அந்நோக்கத்திற்கு முரண்படாத முறையில் அமைதல்வேண்டு மென்றுங் கொள்ளும் கருத்து நிலைத்தல் வேண்டும். இத்தகைய கருத்துச் சிறந்து விளங்கிய காலத்தில்தான், நாம் இன்று கண்டு இன்புறும் கலைப் பொருள்கள் யாவும் (இலங்கையிலும், இந்தியாவிலும்) அமைக்கப்பெற்றன.

கலையாற் பண்படுத்தப்பட்ட உள்ளத்தில்தான் உண்மையான சமய அறிவும், கடவுள் பக்தியும் மலரும். "**சமய அனுபவம், கலை அனுபவம்** என்னும் இரண்டும் ஒரே அனுபவத்திற்கு இடப்பெற்ற இரு பெயர்களாகும்"[1] என்கின்றார் டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள். "ரஸாநுபவம் அபேதப் பிரமானுபவத்தோடு சகோதரத்துவம் பூண்டது" என்கின்றார் **சாகித்திய தர்ப்பண**

1. *Dance of Shiva — pp. 35 — 36.*

நூலாசிரியர். இக் கருத்துக்களுக்கொத்த கருத்தைத் தேவாரத்திலும் காணலாம். 'ஏழிசையாய், இசைப் பயனாய்' என்று சுந்தரரும், 'பாட்டில் பண்ணாய்' என்றும், 'ஓசை ஒலியெலாம்' என்றும் அப்பரும் கூறுவது காண்க. இறைவனின் திருவடி நிழலை 'மாசில் வீணைக்கு' ஒப்பிடுவதோடு 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்றுங் கூறுகின்றார் அப்பர் சுவாமிகள். பேரின்ப நிலையை அடைவதற்குக் கலை மிகவும் துணையான கருவி என்பதை உணர்ந்தே நம் முன்னோர்கள் எமது ஆலயங்களை அழகொழுகும் கலை நிலையங்களாக அமைத்து இறைவனை வழிபட்டனர். சமயம் மறுமலர்ச்சி அடைய வேண்டுமாயின், கலைகள் மறுமலர்ச்சி அடைதல்வேண்டு மென்பது, நாம் இதுகாறும் கூறியனவற்றாற் பெறப்படும் உண்மையாகும்.

## கைத்தொழில் வகைகள்

**தெ**ன்னிலங்கையிலும், வட இலங்கையிலும் பல வகையான குடிசைக் கைத்தொழில்கள் இன்றுங் காணப்படுகின்றன. இவை யாவும், மிகப் பண்டைக்காலந் தொடக்கம் இந் நாட்டில் வழக்கி லிருந்து வரும் கைத்தொழில்களாகும். பூர்வீக இலங்கை கலை மலிந்த நாடாக விளங்கியது. கலையுணர்ச்சியை ஆதாரமாகக்கொண்டே தொழில்கள் வளர்க்கப்பட்டன. பண்டைய இலங்கை மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் பெரும் பகுதியைத் தாமே தமது நாட்டில் உற்பத்தி செய்து வந்தனர். ஓவியத் தொழில், சிற்பத் தொழில், கட்டடத் தொழில், நெசவுத் தொழில், ஆபர ணங்கள் அமைக்குந் தொழில், இசைத் தொழில் முதலிய சிறந்த நுண்ணிய தொழில்கள் யாவும் நாட்டிற் சிறந்து வளர்ந்தன.

பொற்கொல்லர், அழகு வாய்ந்த பொன் வெள்ளி ஆபரணங்களையும், மணிகள் இழைத்த ஆபரணங்களையும் திறமையுடன் செய்யவல்லோ ராய்த் திகழ்ந்தனர். அத்தகையோர் இன்றும் நாட்டில் ஆங்காங்குளர்.

வெள்ளி, பித்தளை, செம்பு முதலிய உலோகங்களிற் சித்திரங்கள் நிறைந்த பொருள்களைச் செய்வதிலே திறமை படைத்த பலர் நாடெங்கு மிருந்தனர். கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும், பிற இடங்களிலும் அலங்காரமான தட்டங்கள், பன்னீர்ச் செம்புகள், ஆபரணப் பெட்டிகள் முதலியனவற்றை வெள்ளியிற் செய்யவல்ல வினைஞர்கள் இன்றுங் காணப்படுகின்றனர்.

சிங்களப் பொற்கொல்லரின் சிறந்த வேலைத்திறனுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது கண்டி அரசர்களது சிம்மாசனம் (படம் 60). அது கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையில் இன்று வைக்கப் பட்டிருக்கின்றது.

களனியா, கண்டி முதலிய இடங்களிலுள்ள பௌத்தகோவில்களில் பொன்னினாலும், வெள்ளியினாலும் மிக நுண்ணிய சித்திரவேலைகள் செய்யப்பட்ட அட்டைகளையுடைய சமய நூல் ஏடுகள் பலவுள. அவ்வழகிய வேலைகளைச் செய்த கைவினைஞர்களின் பரம்பரையில் வந்தோர் பலர் இன்றுந் தென்இலங்கையிற் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களில் வெள்ளியாற் செய்யப்பட்ட வாகனங்களும் (படம் 61), பீடங்களும், மகர தோரணங்களும் கல் லிழைத்த தங்க ஆபரணங்களும் இன்றும் உபயோகத்திலிருக்கின்றன. கல்லிலும் செம்பிலும் சிற்பசாத்திர முறைப்படி திருவுருவங்களைச் செய்ய வல்ல சிற்பிகள் பலர் இன்றும் யாழ்ப்பாணத்தில் அத்தொழிலைச் செய்து வருகின்றனர். சீலைகளிற் சித்திரங்களை வரையக்கூடிய கைவினைஞர் இன்றும் யாழ்ப்பாணத்தில் அத் தொழிலைச் செய்துவருகின்றார்கள்.

மரக்கொத்து வேலையிலும், ஆனைத்தந்தத்தில் உருவங்கள் அமைப்பதிலும் தென்னிலங்கை மக்கள் சிறந்து விளங்கினார்கள். கண்டி அரசர் காலத்திற் செய்யப்பட்ட பல அரிய ஆனைத்தந்தச் சித்திரப் பொருள்கள் நாட்டிற் பல பாகங்களிலுமுள. கண்டி புத்த தந்த ஆலயத்து மரச் சித்திர வேலைகளும் மிக அழகுவாய்ந்தனவாகும்.

யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட சித்திரங்கள் நிறைந்த மரத் தேர்கள் பல காணப்படு கின்றன. மாவிட்டபுரம், பருளாய், சுதுமலை முதலிய இடங்களி லுள்ள தேர்களின் சித்திரங்கள் கற்சித்திரங்களை ஒத்த அழகும் அமைப்பும் பொருந்தியனவாக விளங்குகின்றன.

## இக்கால நிலை

குடிசைக் கைத்தொழில் மூலம் நாட்டிற் செழிப்புற்றிருந்த சிறந்த நுண்ணிய கலைகளும், கலைப் பொருள்களும், மேலைத்தேசத்து ஆலைத்தொழிற் பொருள்களோடு போட்டியிட முடியாது மறைந்து

விட்டன. மேல்நாட்டுக் கல்வி முறைகளும், வாழ்க்கை நோக்கங்களும் எம்மிடையே புதிய விருப்பங்களையும், வாழ்க்கை ஒழுங்குகளையும் ஏற்படுத்திவிட்டன. இப் புதிய நிலைக்கு வேண்டப்படும் பொருள்கள் மீதே எமது விருப்பம் இன்று சென்றுகொண்டிருக்கின்றது. புதிய பொருள்களை ஆக்குந் திறன் எமது பரம்பரைக் கைவினைஞர் மாட்டு இல்லை. ஒரு சிலர் அவற்றைச் செய்யினும் அப் பொருள்கள் அழகும் உபயோகத்தன்மையும் பொருந்தியனவாக அமைவதில்லை. இந்நிலை எமது நாட்டுக் கைத்தொழிலை அழித்துவிட்டது. இந் நிலையையும், இதனால் ஏற்படும் பயனையும் டக்டர் ஆநந்தக்குமார சுவாமி அவர்கள் மிக நயம்பெற எமக்கு எடுத்து அறிவுறுத்துகின்றார்.

"உடை, உணவு, கட்டட அமைப்பு முதலிய பல துறைகளிலும் ஐரோப்பியரின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுதலின் விளைவாக, அவசியமற்றவையும், உண்மையில் தீங்கு தருவனவுமான ஐரோப்பிய போகப் பொருள்களை உபயோகிக்கத் தொடங்கிவிட்டோம். தீமை பயக்கும் இந்த உதவாத பொருள்களை, நாம் நமது நாட்டிற் செய்யப்புகுந்தால், ஐரோப்பாவிற் செய்யப்படுவதிலும் பார்க்க, மிகவும் மட்டரகமாகவே அவை அமையும். பெரும் ஆலைகளை அமைத்தல், உற்பத்திப் பொருள்களைத் தமது உடைமையாக்கிக்கொண்ட முதலாளிகளைத் தோன்றச் செய்தல் ஆகியவற்றின் மூலம் நாம் மேலை நாட்டினரோடு போட்டியிடுதல் வேண்டா. தொழிற் புரட்சியால் ஏற்படும் தொல்லைதரும் பலா பலன்களாற் குலங்கள் சிதையும்; சிறு தொழிற்றளங்கள் அழியும்; பெரும் தொழிற்சாலைகள் தோன்றும்; தேகநலம் அழியும்; அழகு மடியும்; பெரும் வியாபார நிலையங்களின் கூட்டணிகள் தோன்றும். வேலை இல்லாதோர் தொகை பெருகும். வேலை கொடுக்க முடியாதோர் தொகை விரியும். இன்ன பிற தீமைகள் தோன்றும். இந்த இன்னல்களை எல்லாம் யாம் அடைதல் வேண்டா."[1]

கலை சம்பந்தமான கைத்தொழிலில் நாம் முன்னேறிச் செல்லவில்லை என்பதை எவரும் மறுக்க முன்வரார். கலாசார வாழ்க்கை மக்களிடையே பரவவேண்டுமாயின், கலை சம்பந்தமான கைத்தொழில் நாட்டில் வளர்ச்சி பெறவேண்டும்.

---

1. *Essays in National Idealism — p. 167.*

**எதிர்காலம்**

**எ**மது நாட்டுக் கலைகளும், கைப்பணிகளும் பண்டைய பெருமையுடன் விளங்க வேண்டுமாயின், அவற்றிற்கு ஏற்ற சூழ்நிலையை நாம் அமைத்தல் வேண்டும். எமது அருங் கலைகளுக்கு எவ்விதம் காலத்திற்கேற்ற விதத்திற் புத்துயிர் அளித்தல்வேண்டு மென்பதை ஆராய்ந்து அறிதல் வேண்டும். கல்லூரிகளும், கலைக் கழகங்களும் இத்துறையிற் பெருந் தொண்டாற்றலாம்.

கலை அழகு இல்லாப் பொருள்களை ஆலைகள் மூலம் உற்பத்திபண்ணிக்கொள்ளலாம். ஆனால், கலை வனப்பு மிக்கனவாய் விளங்கவேண்டுவனவற்றைக் குடிசைக் கைத்தொழில் மூலமே ஆக்குதல் வேண்டும். ஒரு சமூகத்தின் வளர்ச்சியும், பெருமையும், சிறப்பும் வெறும் பொருளாதார அமைப்பில் மாத்திரம் தங்கிநிற்கவில்லை. சமயம், கலை, பண்பாடு என்பனவும் சமூக நலத்திற்கு வேண்டப்படும் சாதனங்களாகும். எனவே, இச் சாதனங்களை வளர்த்தற்கும் சமூகத்தில் வசதிகள் ஏற்படுத்தல் அவசியமாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் வாழ்ந்து வந்த வாழ்க்கை நோக்கங்களையும், முறைகளையும் முற்றாக மாற்றிவிடுவது சுலபமன்று. எமது எதிர்காலம், எமது பண்டைய சிறந்த இயல்புகளை ஆதாரமாகக் கொண்டே அமைவுறுதல் வேண்டும். "இந்திய மக்கள் சொந்த நாட்டில் அமைக்கப்பட்ட தமது சொந்தக் கலைப் பண்பு நிறைந்த உடைகளையும், அணிகளையுமே அணிதல் வேண்டும். இதனை ஒரு கலைக் கொள்கை போல அனுசரித்தல் வேண்டும்" என ஓர் அறிஞர் கூறுகின்றார்.

அழிந்து வரும் குடிசைக் கைத்தொழில்களுக்குப் புத்துயிர் தந்து ஆதரித்தலும், சீர்கெட்ட நிலையிலுள்ள குடிசைக் கைத்தொழில்களைச் சீர்திருத்தி அமைத்தலும், வெளிநாடுகளிலிருந்து வரும் ஒன்றுக்கும் உதவாப் போகப் பொருள்களை இங்கு இறக்குமதி செய்தலைத் தடுத்தலும் நமது கடமைகளாகும். சுருங்கக் கூறுமிடத்து எமது நாட்டிற் கலைகள் சிறந்து விளங்க வேண்டுமாயின், எமது வாழ்வின் எல்லாத் துறைகளிலும், கலை உணர்ச்சி ஊடுருவி நிற்றல் வேண்டும்.

இலங்கையின் பண்டைய கலைப் பொருள்களின் பெருமையை எடுத்துக் கூறுவதில் மாத்திரம் நாம் திருப்தியடையாது, எமது நாட்டுக் கலை இலக்கணங்களுக்கமைய, இக் காலத்திற்கேற்ற கலைப் பொருள்களை ஆக்குவதிலும் நாம் ஆர்வங்கொள்ளுதல் வேண்டும். இதுவே, அழியாக் கலைச்செல்வங்களை எமக்கு அளித்துச் சென்ற எம் முன்னோர்களுக்கு, நாம் செய்யக்கூடிய கைம்மாறும் காணிக்கையுமாகும்.

பத்தாம் அத்தியாயம்

# இந்திய கலா தத்துவம்

இலங்கையின் கலைகளைப் பற்றிக் கற்க விரும்புவோர், இந்திய கலா தத்துவத்தைப்பற்றியும் அறிதல் அவசியமாகும். இலங்கையின் கலைகள் இந்திய கலா தத்துவத்தையே அடிப்படையாகக்கொண்டு வளர்ச்சிபெற்றமையால், இந்திய கலா தத்துவத்தைப் பற்றி நாம் கூறுவன யாவும், இலங்கைக் கலைகளுக்கும் அமையும் என்பது துணிபாம்.

இந்திய இலங்கைக் கலைகள், அமைப்பு முறையிலும், நோக்கத்திலும் மேல்நாட்டுக் கலைகளைப் போன்றனவல்ல. பேரின்பநெறிக்குச் சாதனமாகவே பெரும்பாலும் கலைகள் இருநாட்டிலும் கையாளப் பட்டுவந்தன. கலையைக் கலைக்காக, (Art for Art Sake) வளர்க்கும் நோக்கம் எமது நாட்டில் எக்காலத்திலாவது இருந்ததில்லை. சிற்பம், ஓவியம், இசை என்பன யாவும், ஆத்மீக வாழ்வைப் பெருக்குவதற் காகவே உபயோகிக்கப்பட்டன. எனவே, இந் நோக்கங்களை ஆதார மாகக்கொண்டு விளங்கும் கலைகளுக்கும், உலக வாழ்க்கையி லேற்படக் கூடிய சிற்றின்ப நுகர்ச்சிகளைப் பெறுவதற்குச் சாதனமாக உப யோகிக்கப்படும் கலைகளுக்குமிடையில் வேறுபாடு காணப்படுதல் இயல்பேயாகும்.

## ஐரோப்பிய கலையும், இந்திய கலையும்

ஐரோப்பிய சிற்பம், ஓவியம் முதலியன இயற்கையின் வெளிப் புறத் தோற்ற அமைப்பையும், அழகையும் உருவகப்படுத்திக் காட்டு வதையே தமது இலக்காகக் கொண்டுள்ளன. இயற்கைப் பொருள்கள் கண்ணிற்கு எவ்விதம் தோன்றுகின்றனவோ, அவ்விதமே, அவற்றி றினைப் புனைவதுதான் மேல்நாட்டுக் கலையின் இலக்கணமாகும். இது ஆங்கிலத்தில் 'றியலிஸிம்' (Realism) — பிரகிருதிவாதம் — எனக் கூறப் படும். ஆனால், இந்தியக் கலைகள், இதற்கு மாறுபட்ட இலக்கணத்தைப் பின்பற்றுகின்றன. இயற்கைப் பொருள்களை, பார்ப்பவர் மனத்தில், கலையின்பத்தை எழுப்பக்கூடியவிதத்தில், திரிபுபண்ணி அமைத்தலே இந்திய கலைகளின் நோக்கமாகும். அவ்விதம் பொருள்களை அமைத்தல்,

'ஐடியலிஸிம்' (Idealism) — மனோகற்பிதம் — எனக் கூறப்படும். இக் கருத்துக்களை டக்டர் முல்க்ராஜ் ஆநந்தர் மிகவும் நயமாக விளக்குகின்றார் :

"இந்திய கலைகளின்கண்ணே மாறுதலடையாத ஒரு சமய நோக்கம் உண்டு. மனித வாழ்க்கையின் எல்லாத் தன்மைகளுக்கும், தெய்வீகக் கருத்தே கொள்ளப்படுகின்றது. கலைப்பொருள்களாகக் காட்டப்படும் உருவங்கள், மரங்கள், மலர்கள், பறவைகள் என்பன யாவும், இயற்கையிலிருந்தே எடுக்கப்படுவனவாயினும், அவை விண்ணுலக வாழ்வின் இயல்பினைக் காட்டுந் தன்மையுள்ளனவாக அமைக்கப்படுகின்றன. ஓவியத்திலாயினும், சிலையுருவிலாயினும், மட்குடத்திலாயினும் பொறிக்கப்படும் சிறிய ஒரு சித்திரந்தானும் மனிதன் கடவுளை எப்பொருளினுங் காண்கின்றான் என்னும் உண்மையை விளக்குவதுமன்றி, கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் ஒரு தெய்வீக இயல்பினை அளித்திருக்கின்றார் என்னுஞ் செய்தியையும், மனிதனுக்கு அறிவிப்பதாகின்றது. இந்திய கலையானது, எல்லாப் பொருள்களையும் பேரின்ப உணர்ச்சியோடு நோக்குகின்றமையால் அதன்கண்ணே, ஐரோப்பியரால் கொள்ளப்படும், பிரகிருதிவாதத்திற்கு இடமேயில்லையெனக் கொள்க."[1]

இலங்கையிற் காணப்படும், சிற்பப் பொருள்களாகிய, தாமரைப் பூ, இதழ், பூரணகும்பம், துவாரபாலகர்கள், சந்திரவட்டப்படிக்கல்லு, தியானபுத்தவடிவம் முதலியனவற்றை, டக்டர் முல்க்ராஜ் ஆநந்தர் விளக்கியுள்ள கருத்துக்களின் துணையோடு கூர்ந்து நோக்கின், இலங்கைக் கலைகளின் சிறந்த தத்துவத்தை நாம் நன்கு அறியலாகும். இலங்கைச் சிற்பங்களிற் காணப்படும், மரங்கள், கொடிகள், மலர்கள், மிருகங்கள் யாவும் இயற்கை அமைப்புக்கு அப்பாற்பட்டு நின்று, பார்ப்பவர் மனதில் கலையின்ப உணர்ச்சியை ஏற்படுத்துகின்றனவென்பதை எக் கலைஞனும் ஏற்றுக்கொள்வான்.

"ஐரோப்பிய கலையானது, இறகுகள் கத்தரிக்கப்பெற்ற பட்சியைப்போல் மேலெழாது, நிலப்பரப்பிலுள்ள அழகினை மாத்திரமே அறிகின்றது. இந்தியக் கலையோவெனில் பிரபஞ்சாதீத உச்சியுட் புகுந்து, மனம் வாக்கிற் கெட்டாத உண்மைப் பொருளின் அழகை நிலவுலகிற்கு இழுக்கப் பிரயத்தனப்படுகின்றது."[2]

---

1. *Hindu View of Art — p. 40.*
2. *Indian Sculpture & Painting — pp. 8 — 9.*

என ஹவல் என்னும் கலைப்புலவர் கூறுகின்றார். மேல்நாட்டுக் கலைகளையும், கீழ்நாட்டுக் கலைகளையும் பலவருடங்களாக நுணுகி ஆராய்ந்ததின் பயனாய்த் தமக்கு ஏற்பட்டுள்ள மனமாறுதலை, ஓர் ஆங்கில கலைப்புலவர் மிகச் சிறப்பாக எடுத்து விளக்குகின்றார் :

> "நான் கீழைத் தேசத்தில் இருபத்தைந்து வருடகாலம் தங்கி இருந்து, இந்திய, சிங்கள, சீன, கம்போடிய, சீய, ஜப்பானிய, ஜாவானிய கலைகளைத் தொடர்ந்து ஆராய்ந்ததின் பயனாக, மெல்ல மெல்ல, என்னை அறியாமலே, என்னுள்ளம் மாறுதலடைந்ததைக் கண்டேன். மனிதனின் உள்ளத்தில் ஒளிர்வதாகிய தெய்வத்தன்மையைக் கீழ்நாட்டுக் கலைகளின் ஆத்மீகத் தன்மை வசீகரப்படுத்துகின்றது. இத்தன்மையை, கிரேக்க நாட்டுக் கலைகளிற் காண்பதரிது — சில புராதன கிரேக்க கலைப்பொருள்களிற் காணலாம். இப்பொழுது நான் 'எல்ஜின் மார்பிள்ஸ்' (Elgin Marbles) முன்னின்ருவது அல்லது 'பேர்கமம்' (Pergamum) ஆலயச் சிற்பங்களின் முன்னின்ருவது அவற்றை நோக்கும்போது, அவற்றில் உருவகப்படுத்தியுள்ள சாதாரண மானிட உறுப்புக்களின் அழகினை மாத்திரமே கண்டு வியக்கின்றேனன்றி, உள்ளத் திருப்தியுடன் நான் திரும்புவதில்லை. அவ் வடிவங்கள் அழகுவாய்ந்த ஒரு ஐரோப்பியனை உருவகப்படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடுகின்றன. அவையினிடத்தே எக்காலத்திற்கும், எத்தேசத்திற்கும் பொருந்தும் தெய்வத் தன்மைகள் விளங்குவதில்லை ; பார்ப்பவர் உள்ளத்தை ஊடுருவிச் செல்லும் தன்மையும் இல்லை. ஆனால், கீழைத்தேசத்து அழகிய கலைவடிவங்களை நான் பார்க்கும்போது, என் ஐம்புலனோடு, ஆன்மாவும் திருப்தியடைகின்றது. என் அகக்கண், தன் இயல்புக்கேற்ப, தூலரூபத்திற்கு அப்பாற்பட்ட வொன்றைக் கண்டு இன்புறுகின்றது. நானும், இந்திரியக் காட்சியால் ஏற்படும் தூல அழகினுக்கப்பாற்பட்ட ஒரு அநுபவத்தையும் பெறுகின்றேன்.[1]

மேலே கூறப்பட்ட தத்துவக் கருத்துக்களை எமது நினைவில் வைத்துக்கொண்டே பூர்வீக இலங்கையில் அமைக்கப்பட்ட சிற்பங்களையும், ஓவியங்களையும் நாம் நோக்குதல் வேண்டும். கலைப்பொருள்களின் சிறந்த இயல்புகளை நாம் ஒருமுறை பார்த்தவுடன் அறிதல் இயலாது. பலமுறையும் கூர்ந்து நோக்கிப் பார்த்துப், பார்த்துப் பழகுதல் வேண்டும். அவ்வித பழக்கத்தின் பயனாகவே கலைப் பொருள்களின் தத்துவங்கள் விளக்கமுறுமென்பது அநுபவத்திற் கண்ட உண்மையாகும்.

1. *The Culture of South East Asia — Introductory : p. 21.*

இலங்கைச் சிற்ப வடிவங்களின் உடலமைப்பு, மேல்நாட்டுச் சிற்ப வடிவங்களைப் போலில்லாதிருப்பது, இருநாட்டு வடிவங்களையும் ஒப்பு நோக்குவோர்க்கு நன்கு புலனாகும். மேல்நாட்டு வடிவங்கள் தசைப் பிடிப்புள்ளனவாயும், பொருத்துக்கள் பருமனுள்ளனவாயும், தோல் தடிப்புள்ளனவாயும், வெளிக்காட்டும் நரம்புகளை யுடையனவாயும் காணப்படும். இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள வடிவங்கள் மென்மையான தோலையுடையனவாயும், தூலத் தன்மையற்ற அங்கங் களை யுடையனவாயும், உள்ள மலர்ச்சியை வெளிக்காட்டுந் தன்மை நன்கு பொருந்தியனவாயும் அமைக்கப்பட்டுள்ளன. இவ் இயல்பு களை, கலைகளின் தன்மைகளை ஆராய்ந்து அறிய விரும்புவோர் அவ தானித்தல் வேண்டும். ஹாஸ்யம் (நகை), சோகம், வீரம் (பெருமி தம்), சாந்தம் (சமநிலை) ஆகிய ரஸங்களை உருவகப்படுத்திக் காட்டுந் தன்மையில் இலங்கைச் சிற்பங்கள் சிறப்படைந்துள்ளன.

இலங்கையிற் காணப்படும் சாந்தமும், கருணையும் பொருந்திய புத்த தியான வடிவங்களும், ஹாஸ்ய ரஸம் பொருந்திய குட்டை மனித வடிவங்களும் கலையுலகிற் சிறந்த இடம் பெற்றுள்ளன. நாகராஜ வடிவத்தின் மென்மையும், கெம்பீரமும் பொருந்திய அபிநய அலங்காரமும், இன்பம் அரும்பும் உள நிலையும் பார்ப்பவர் மனத் தைக் கவருந்தரத்தன. அவ் வடிவத்தின் கையிலிருக்கும் பூங்கொடி யின் மென்மையான வளைவும், குடத்தின் மேலுள்ள பூக்களின் அலங்காரச் சித்திரமும் வசீகரம் பொருந்தியன. கால்களுக் கிருமருங்கிலும் காணப்படும் ஹாஸ்ய வடிவங்கள் பார்க்குந்தோறும், பார்க்குந்தோறும் நகைச்சுவையை எழுப்பவல்லனவன்றோ!

இத்தகைய சிற்பச் செல்வங்களையெல்லாம், கலைவிருப்புடையோர், நேரிற் கண்டு இன்புறுதலே சாலச்சிறப்புடைத்தாகும். சர்க்கரையின் சுவையை ஒருவர், பிறர்சொல்லக் கேட்டு அநுபவித்தல் எவ்விதம் இயலாத செயலோ, அவ்விதமே எங்கள் நாட்டின் கலைப்பொருள்க ளின் சிறந்த தன்மைகளையும், நூலின் மூலம் அறிந்து அநுபவித்தல் இயலாதென்பதை நாம் வற்புறுத்த வேண்டுவதில்லை.

இக்காலத்தில் நாட்டிற் சிற்பமும், ஓவியமும், தொழில்முறையில் கையாளப்பட்டுவருகின்றன. ஒருசிலர், கலையின் விருப்பினால் ஓவியங் களை வரைந்துவருகின்றனர். ஆனால், இன்று நாட்டில் அமைக்கப்

படும் ஓவியங்கள் பெரும்பாலும் மேல்நாட்டுக்கலை இலக்கணங்களுக்கமையவே அமைக்கப்படுகின்றன. கல்லூரிகளில் மேல்நாட்டுக்கலை இலக்கணமுடிபுகளே கற்பிக்கப்படுகின்றன. இந்நிலை மாறுதல் அடைதல் வேண்டும். இந்தியக் கலை இலக்கணங்களையும், மாணவரும் பொதுமக்களும் அறியக்கூடிய விதத்தில் நாட்டிற் கலைக் கல்வி உருப்பெறுதல் வேண்டும். மேல்நாட்டுக் கலைகளிற் காணப்படும் சிறந்த அம்சங்களை எமது கலைக் கல்வியுடன் சேர்த்துக்கொள்வது விரும்பத்தக்கதே யெனினும், எமது சொந்தக்கலை இலக்கணங்களை முற்றாய்க் கைவிடுதல் விரும்பத்தக்கதன்று.

## பதினோராம் அத்தியாயம்

# படங்களின் விளக்கம்

**தூபாராம தாதுகோபம்** (படம் 1)

தேவநம்பியதீசன் கட்டிய தாதுகோபம் அழிந்த பின்பு, அவ்விடத்தில் இத் தாதுகோபம் கட்டப்பட்டது. மணிவடிவுடையது. குறுக்களவு 59 அடி. இடம்: அநுராதபுரம்.

**ருவான்வெலிசாயா தாதுகோபம்** (படம் 2)

இத் தாதுகோபம், அநுராதபுரத்தில் துட்டகைமுனுவாற் கட்டப்பட்டது. குறுக்களவு 298 அடி.

**சேதவனராம தாதுகோபம்** (படம் 3)

இது மகாசேனனுற் கட்டப்பட்டது. இதுவே பௌத்த உலகத்திலுள்ள மிகப் பெரிய தாதுகோபமாகும். குறுக்களவு 370 அடி. இடம்: அநுராதபுரம்.

**கந்தக சைத்திய தாதுகோபம்** (படம் 4)

இதைக் கட்டிய அரசன் பெயர் அறியக்கூடியதாயில்லை. கி. மு. 59 — 50-ல் இருந்த வஞ்சதீசன் சில திருத்தங்களைச் செய்துள்ளான் எனக் கூறப்பட்டுள்ளது. இடம்: மிகுந்தலை.

**சிராவத்தியின் அற்புதச் செயல்** (படம் 5)

இச் சிற்பம் கொழும்பு நூதன பொருட் காட்சிச் சாலையிலிருக்கின்றது. இதுவே இலங்கையிற் காணப்பட்ட மிகப் பழைய சிற்பமாகும், ஆந்திர சிற்ப முறையி லமைந்துள்ளது.

**மாயாதேவியின் கனவு** (படம் 6)

இதுவும் கொழும்பு நூதன பொருட் காட்சிச் சாலையிற் காணப்படுகின்றது. ஆந்திர சிற்ப முறையைத் தழுவிய பழைய சிற்பங்களிலொன்று.

**தொலுவிலா புத்தர் வடிவம்** (படம் 7)

நாலாம் நூற்றுண்டுக் குப்தர் சிற்ப முறையில் அமைந்துள்ள இச் சிற்ப வடிவம், அநுராதபுரத்துத் தொலுவிலா சங்கிராமத்தில் எடுக்கப்பட்டது. இப்பொழுது கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

**தம்பதிகள்** (படம் 8)

குப்தர் காலத்துச் சிற்ப முறையில் அமைந்துள்ள இச் சிற்பம் அநுராதபுரத்து ஈசுரமுனிய விகாரையின் சுவரின் வெளிப்புறத்தில் இன்று காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள அழகுவாய்ந்த சிற்பங்களுள் இதுவுமொன்ருகும்.

**சந்திரவட்டக் கற்படி** (படம் 9)

குப்தர் சிற்ப முறையி லமைந்துள்ள இக் கற்படி, அநுராதபுரத்து இராணி மாளிகை வாசலிற் காணப்படுகின்றது.

**யானைச் சித்திரங்கள்** (படம் 10)

இவை பல்லவர் சிற்ப முறையைச் சேர்ந்தன. அநுராதபுரத்து ஈசுரமுனிய விகாரையிலுள்ள பாறையின் பிளவுக் கிருபக்கங்களிலுஞ் செதுக்கப்பட்டுள்ளன.

**மனித வடிவமும் குதிரைத் தலையும்** (படம் 11)

இவையும் பல்லவர் சிற்ப முறையைத் தழுவியன. அநுராதபுரத்து ஈசுரமுனிய விகாரையின் பாறையின் மேற்பக்கத்திற் செதுக்கப்பட்டுள்ளன.

**கெடிகே** (படம் 12)

இது நாலந்தாவிலுள்ள ஓர் ஆலயம். பல்லவர் சிற்ப முறையில் அமைந்துள்ளது.

**இரண்டாம் சிவாலயம்** (படம் 13)

இவ்வாலயம் முதலாம் இராஜராஜ சோழனுற் கட்டுவிக்கப்பட்டது. இதன் பெயர், வானவன்மாதேவி ஈசுரமுடையார்.

இலங்கையிலுள்ள மிகப் பழைய சோழர் கட்டடம் இதுவேயாகும். முழுவதும் கருங்கற்களாற் கட்டப்பெற்றுள்ளது. காலம் : 11ஆம் நூற்றுண்டின் முற்பகுதி. இடம் : பொலநறுவை.

**கிரிவிகார தாதுகோபம்** (படம் 14)

இத் தாதுகோபம் முதலாம் பராக்கிரமபாகுவினுற் கட்டப்பட்டது. உருக்குலேயாத நிலேயில் இன்று இலங்கையிற் காணப்படும் பழைய தாதுகோபம் இதுவேயாகும். இடம் : பொலநறுவை.

**இலங்கைத்திலக ஆலயம்** (படம் 15)

இதுவே இலங்கையிலுள்ள மிகப் பெரிய பௌத்த ஆலயம். 40 அடி உயரமுள்ள புத்தர் திருவடிவம் கர்ப்பக்கிரகத்தி லிருக்கின்றது. சுவர்களும், திருவடிவமும் செங்கற்களா லமைக்கப்பட்டுள்ளன. சுவர்களின் வெளிப்புறத்தில் தென்னிந்திய ஆலயச் சுவர்களிற் காணப்படும் கோட்டங்களேயுடைய அலங்காரச் சித்திரங்கள் காணப்படுகின்றன. முதலாம் பராக்கிரமபாகுவினுற் கட்டப்பட்டது. இடம் : பொலநறுவை.

**சேதவனராம விகாரம்** (படம் 16)

முதலாம் பராக்கிரமபாகுவினுற் கட்டப்பட்டது. திரிபங்க நிலேயுடைய புத்தர் வடிவம் கர்ப்பக்கிரகத்திலிருப்பதினுல் 'திவங்க' ஆலயம் என்றும் அழைக்கப்படுகின்றது. புத்தசாதகக் கதைகளே விளக்கும் 12ஆம் நூற்றுண்டைச் சார்ந்த ஓவியங்கள் இவ்வாலயத்திலுள. இடம் : பொலநறுவை.

**தூபாராம ஆலயம்** (படம் 16A)

இவ்வாலயம் திராவிட சிற்ப முறையி லமைந்துள்ளது. செங்கற்களா லமையப்பெற்றுள்ளது. புறச்சுவர்களிற் காணப்படும் வேலேப்பாடுகள் தென்னிந்திய ஆலயங்களிற் காணப்படுவனவற்றை யொத்தன. இடம் : பொலநறுவை.

**கல்விகாரை வடிவங்கள்** (படம் 17)

முதலாம் பராக்கிரமபாகுவினு லமைக்கப்பட்டன. பரிநிர்வாண புத்தர் திருவடிவம் 46 அடி நீளமுள்ளது. நின்ற பாவனேயுடைய

வடிவம் ஆநந்தரைக் குறிக்கும். இலங்கையிற் காணப்படுஞ் சிறந்த சிற்ப வடிவங்களுள் இதுவும் ஒன்றாகும். இடம்: பொலநறுவை.

**பராக்கிரமபாகு** (படம் 17A)

இவ்வடிவம் முதலாம் பராக்கிரமபாகுவைக் குறிக்கின்றதென்பது கர்ணபரம்பரைக் கொள்கை. ஒரு முனிவரைப்போ லிருப்பதினால், இது புலஸ்திய முனிவர் வடிவமாகலாமெனக் கருதுவாருமுளர். இலங்கையின் சிறந்த சிற்ப வடிவங்களுள் இதுவு மொன்றாகும். இடம்: பொலநறுவைப் பொத்கல் விகாரை.

**வட்டதாகே** (படம் 18)

முதலாம் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பெற்று, பின் நிசங்க மல்லனாற் பல சிற்பச் சிறப்புகளுடன் புதுப்பிக்கப்பட்டது. இலங்கையில், சிற்ப அலங்காரங்கள் பொருந்திய பௌத்த ஆலயங்களுள் முதன்மைபெறுவது. இடம்: பொலநறுவைக் கோவில் கோட்டம்.

**ஹட்டதாகே** (படம் 19)

நிசங்கமல்லனாற் கட்டப்பட்ட தந்த ஆலயம். இடம்: பொலநறுவைக் கோவில் கோட்டம்.

**லதா மண்டபம்** (படம் 20)

நிசங்கமல்லனாற் கட்டப்பட்டது. தாமரைக்கொடி போன்ற தூண்களையுடையது. இடம்: பொலநறுவைக் கோவில் கோட்டம்.

**புத்தர் திருவடிவம்** (படம் 21)

பொலநறுவாக் காலத்துச் சிற்ப முறையில் அமைந்த இத் திருவடிவம் 45 அடி உயரமுள்ளது. ஆசியாவிலுள்ள சிறந்த புத்த வடிவங்களுளொன்று. இவ்வடிவம் முதலாம் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்டதென்பது கர்ணபரம்பரைக் கதை. இடம்: வட மத்திய மாகாணத்திலுள்ள அவுகன.

**முதலாம் சிவ தேவாலயம்** (படம் 22)

இலங்கையிலுள்ள பழைய சைவ ஆலயங்களுள் சிற்ப வேலைப் பாட்டிற் சிறந்தது. பாண்டியர் காலத்துச் சிற்ப முறையில் அமைக்கப்பட்டது. இடம்: பொலநறுவை.

**யாப்பகூவா அரண்மனே** (படம் 23)

பாண்டியர் சிற்ப முறையில் அமைந்துள்ளது. இங்கு சிறந்த சிற்பங்கள் காணப்படுகின்றன.

**இலங்காதிலக விகாரை** (படம் 24)

சேனு இலங்காதிகார என்பவராற் கட்டப்பட்டது. செங்கற் கட்டடம். இடம்: கம்பளை.

**கடலதேனிய விகாரை** (படம் 25)

நான்காம் புவனேகபாகுவின் காலத்திற் கட்டப்பட்டது. கணேஸ்வராசாரி என்னுந் தென்னிந்திய சிற்பியினுற் கட்டப்பட்டதெனக் கூறப்படுகின்றது. இலங்கையில் முழுவதும் கருங்கற்களால் அமைந்த பௌத்த ஆலயம் இதுவேயாகும்.

**கண்டி புத்த தந்த ஆலயம்** (படம் 26)

விமலதர்மசூரியா என்னும் அரசனுல் 16ஆம் நூற்றுண்டிற் கட்டப்பட்டது. மரச் சித்திரங்கள் பல இவ்வாலயத் தூண்களி லுண்டு.

**எம்பக்க தேவாலயம்** (படம் 27)

மரச் சித்திரங்கள் பல இவ்வாலயத்தி லுண்டு.

**களனியா விகாரம்** (படம் 28)

இருபதாம் நூற்றுண்டில், தென்னிந்திய சிற்ப முறையையும், கண்டிநகர்க் காலச் சிற்ப முறையையும் தழுவிக் கட்டப்பட்ட ஆலயம். இவ்வாலயத்திற் கண்டிநகர்க் கால ஓவியங்கள் இருக்கின்றன. 20ஆம் நூற்றுண்டில் எழுதப்பெற்ற ஓவியங்கள் புதிய கட்டடத்தி லிருக்கின்றன.

**பொன்னம்பலவாணேஸ்வரம்** (படம் 29)

இருபதாம் நூற்றுண்டில் தென்னிந்தியாவில் வழங்கப்பட்டுவரும் சிற்பமுறையிற் கட்டப்பட்டது. சுற்றுப்பிரகாரம் முழுவதும் கருங்கல் மண்டபமாக அமைந்துள்ள சைவ ஆலயம் இலங்கையில் இதுவே

யாகும். தரிசன மண்டபம் பல சிற்பச் சிறப்புகளுடன் அமைந்துள்ளது. இடம்: கொழும்பு.

**தாதுகோபத்தின் பகுதிகள்** (படம் 30)

*தாதுகோபத்தின் பகுதிகளை விளக்கிக்காட்டும் படம்.*

**வாகல்கடம்** (படம் 31)

*அநுராதபுரத்திலுள்ள மிரிசவெதி தாதுகோபத்திலுள்ள வாகல் கடம்.*

**வாகல்கடம்** (படம் 32)

*மிகுந்தலையிலுள்ள கந்தகசைத்திய தாதுகோபத்திலுள்ள வாகல் கடம். சிற்பச் சிறப்புகள் பொருந்தியது.*

**நீள் சதுரக் கல்** (படம் 33)

*வாகல்கடங்களின் இருபக்கங்களிலும் அமைக்கப்படும் சித்திரக்கல்.*

**வாயில்** (படம் 34)

*பொலநறுவையிலுள்ள வட்டதாகே ஆலயத்திலுள்ள வாயிற்படிக் கட்டுகளி லொன்று. சந்திரவட்டப் படிக்கல், துவாரபாலகர்கள், சித்திரப் படிகள், கைப்பிடிவரிசைகள் ஆகிய யாவும் முறையாக அமைந்துள்ளன.*

**நாகராஜ துவாரபாலகர்** (படம் 35)

*பொலநறுவை வட்டதாகே ஆலயத்திற் காணப்படுவது. இலங்கையிலுள்ள சிறந்த சிற்ப வடிவங்களில் ஒன்று.*

**துவாரபாலகர்** (படம் 36)

*இது அநுராதபுரத்திலுள்ள அரச மாளிகை வாயிலிற் காணப்படுவது. முதலாம் விஜயபாகுவின் காலத்தது எனக் கருதப்படுகின்றது.*

**கைப்பிடி வரிசை** (படம் 37)

*வாயில்களின் இருமருங்கிலும் கைபிடித்தேறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள சித்திரச் சுவர் அணை.*

**புத்தர் திருவடிவம்** (படம் 38)

அநுராதபுரத்திலுள்ள அபயகிரி தாதுகோபத்தைச் சேர்ந்த வடிவம்.

**புத்தர் திருவடிவம்** (படம் 39)

அநுராதபுரத்துப் பங்குளியா சங்கிராமத்தைச் சேர்ந்த வடிவம். அபயகரத்தோடு காணப்படும் இருந்தபாவனையுடைய புத்தர் வடிவம் இலங்கையில் இதுவேயாகும்.

**புத்தர் திருவடிவம்** (படம் 40)

இவ்வடிவம் பொலநறுவையிலுள்ள கல்விகாரையின் வலது பக்கத்திற் காணப்படுகின்றது.

**புத்தர் திருவடிவம்** (படம் 41)

பொலநறுவைக் கல்விகாரையின் கர்ப்பக்கிரகத்தில் வைக்கப்பட்டுள்ள வடிவம். வலது பக்கத்திலுள்ள வடிவத்திலும் சிறியது. அழகு வனப்புப் பொருந்தியது.

**புத்தர் திருவடிவம்** (படம் 42)

இது பொலநறுவை வட்டதாகேயி லுள்ளது.

**மைத்திரேய போதிசத்துவர்** (படம் 43)

இது மகாயான பௌத்த பிரிவைச் சேர்ந்த வடிவம். வடிவம் திரிபங்க நிலையில், விதர்க்க, வரத முத்திரைகளுடன் அமைந்திருக்கின்றது. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இச் செம்பு வடிவம், அநுராதபுரத்துத் தூபராம தாதுகோபத்தின் பாங்கரில் எடுக்கப்பட்டது. உயரம் 18·6 அங்குலம். இலங்கையிற் கண்டெடுக்கப்பட்ட கலை அழகு பொருந்திய பௌத்த திருவடிவங்களில் ஒன்று.

**பத்தினி** (படம் 44)

வெங்கலத்திலுற் செய்யப்பட்ட இவ் வடிவம் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. விதர்க்க, வரத முத்திரைகளையுடையது. மைத்திரேய போதிசத்துவ வடிவத்திற் காணப்படும், விதர்க்க, வரத

முத்திரைகள் இதன்கண்ணும் காணப்படுவது அவதானிக்கத்தக்கது. உயரம் 57·5 அங்குலம்.

**சிற்பத் தூண்கள்** (படம் 45)

அநுராதபுரம்.

**நீராடு துறை** (படம் 46)

இது அநுராதபுரத்திலுள்ள அரச நந்தவனத்திற் காணப்படும் நீராடு துறை. கண்கவர் வனப்புடன் கருங்கற்களால் அமைக்கப் பட்டுள்ளது. திசவாவிக்கு அருகிலுள்ளது.

**முருகன் ஆலயம்** (படம் 47)

இவ்வாலயம் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள திருக்கோவில் என்னும் கிராமத்திலுள்ளது. கீழ்மாகாணத்துப் புராதன ஆலயங்களி லொன்று. பிற்காலச் சோழ, அல்லது பாண்டிய சிற்ப முறை யைப் பின்பற்றிய கட்டடமாகக் காணப்படுகின்றது.

**சுந்தரமூர்த்தி நாயனர்*** (படம் 48)

சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குறிக்கும் இத் திருவடிவம் கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையி லிருக்கின்றது. செம் பிறைற் செய்யப்பட்ட இவ் வடிவம் 12ஆம், 13ஆம் நூற்றாண் டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது. பொலநறுவை ஐந்தாம் சிவாலயத்தில் எடுக்கப்பட்டது. உயரம் 25·04 அங்குலம்.

இவ்வடிவம் தென்னிந்திய சிற்ப வடிவங்களுளெல்லாம் தலை சிறந்த வடிவமாக உலகத்துக் கலைப் புலவர்களால் மதிக்கப்படுகின்றது.

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்*** (படம் 49)

இவ்வடிவமும் கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையி லிருக்கின்றது. செம்பிறைற் செய்யப்பட்ட இவ் வடிவம் 12ஆம்,

*ஐந்தாம் சிவாலயத்தில் எடுக்கப்பட்ட இவ் வடிவங்கள் யாவும் ஏனைய வடிவங்களிலும் பார்க்கக் கலை வனப்பும், சிற்பச் சிறப்பும் பொருந்தியனவாகக் காணப்படுகின்றன.

13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பொலநறுவை ஐந்தாம் சிவாலயத்தில் எடுக்கப்பட்டது. உயரம் 19·44 அங்குலம்.

இதுவும் சிறந்த தென்னிந்திய சிற்ப வடிவங்களி லொன்று.

**திருநாவுக்கரசு நாயனர்** (படம் 50)

இவ்வடிவமும் கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது, பொலநறுவை முதலாம் சிவாலயத்தி லெடுக்கப்பட்டது. 12ஆம், 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. உயரம் 23·36 அங்குலம்.

**சண்டேசுவர நாயனர்*** (படம் 51)

இவ்வடிவமும் கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையிற் காணப்படுகின்றது. 12ஆம், 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ் வடிவம் பொலநறுவை ஐந்தாம் சிவாலயத்தில் எடுக்கப்பட்டது. சிறந்த தென்னிந்திய சிற்ப வடிவங்களில் ஒன்று. உயரம் 29·2 அங்குலம்.

**சிவமூர்த்தம்*** (படம் 52)

சிவமூர்த்தங்களி லொன்று. கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையி லிருக்கின்றது. 12ஆம், 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பொலநறுவை ஐந்தாம் சிவாலயத்தில் எடுக்கப்பட்டது. உயரம் 26·8 அங்குலம். சிறந்த தென்னிந்திய சிற்பங்களி லொன்று.

**நடராஜ வடிவம்** (படம் 53)

நடராஜ வடிவத்திற்குக் கூறப்பட்ட அம்சங்கள் யாவும் இதன்கண் பொறிக்கப்பட்டிருப்பினும், கலை வனப்புப் பொருந்திய வடிவமாகக் காணப்படவில்லை. பொலநறுவை முதலாம் சிவாலயத்தி லெடுக்கப் பட்டது. 13ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதா யிருத்தல் வேண்டும். உயரம் 36·16 அங்குலம். கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையி லிருக்கின்றது.

---

*ஐந்தாம் சிவாலயத்தில் எடுக்கப்பட்ட இவ் வடிவங்கள் யாவும் ஏனைய வடிவங்களிலும் பார்க்கக் கலைவனப்பும், சிற்பச் சிறப்பும் பொருந்தியனவாகக் காணப்படுகின்றன.

**திருகோணமலைத் திருவடிவங்கள்** (படம் 54)

இவ்வடிவங்கள் 1950ஆம் ஆண்டில் திருகோணமலையிற் கண்டெடுக்கப்பட்டன. சோமாஸ்கந்த வடிவமும், அம்பாளின் வடிவமும் அழகுவாய்ந்தன. சந்திரசேகர வடிவம் மிகப் பழமையுடையதாகக் காணப்படுகின்றது. சோமாஸ்கந்த வடிவமும் அம்பாளின் வடிவமும் பாண்டியர் காலத்தனவாதல் வேண்டும். 1622ஆம் ஆண்டில் போத்துக்கேயர் திருக்கோணேசுவரர் ஆலயத்தை அழித்தபோது இவ் வடிவங்கள் மண்ணுள் மறைக்கப்பட்டன; இப்பொழுது கோணேசர் மலையிற் புதிதாய் அமைக்கப்பட்ட ஒரு சிறிய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

**அநுமார்** (படம் 55)

இலங்கையிற் கண்டெடுக்கப்பட்ட இவ்வடிவம் இப்பொழுது பாரிஸ் நகரில் இருக்கின்றது. சிறந்த தென்னிந்திய சிற்ப வடிவங்களில் இதுவுமொன்று. பீடத்தோடு உயரம் 30·48 அங்குலம்.

**வாயிற்படிக் கல்லு** (படம் 56)

யாழ்ப்பாணக் கோட்டையின் அத்திவாரத்திற் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் கோவில்களை இடித்து எடுத்த கற்களால் போத்துக்கேயர் கோட்டையைக் கட்டினார்கள் என்பதை உலகிற்கு இக் கல்லும் எடுத்துக் கூறுகின்றது.

**கஜலக்ஷ்மி** (படம் 57)

யாழ்ப்பாணத்து நல்லூர் சட்டநாதர் ஆலயத்தைக் கட்டியபொழுது மண்ணுள் எடுக்கப்பட்ட வடிவங்களில் ஒன்று. யாழ்ப்பாண நூதன பொருட்காட்சிச்சாலையில் இப்பொழுது இருக்கின்றது. பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட சிற்பமுறையில் அமைந்துள்ளது.

**சிகிரியா ஓவியம்** (படம் 58)

சிகிரியா மலைக்குகையிற் காணப்படும் ஓவியங்களி லொன்று. அஜந்தா ஓவிய முறையைப் பின்பற்றி இலங்கையில் அமைக்கப்பட்ட ஓவியம்.

**திவங்க ஆலய ஓவியம்** (படம் 59)

**பொ**லநறுவையிலுள்ள சேதவனராமா என்னும் திவங்க ஆலயத்திற் காணப்படும் ஓவியம். 12ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது.

**சிம்மாசனம்** (படம் 60)


**க**ண்டி அரசர்களின் சிம்மாசனம். கொழும்பு நூதன பொருட் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

**வெள்ளி மயிலும் திருவாசியும்** (படம் 61)

**ம**யில் வாகனம் யாழ்ப்பாணத்து நல்லூரில் இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்துக் கதிரேசன் கோவிலில் இன்று இருக்கின்றது. திருவாசியும் திருவடிவங்களும் யாழ்ப்பாணத்தில் இக்காலத்திற் செய்யப்பட்டன.

**மரச்சித்திர வேலை** (படம் 62)

**யா**ழ்ப்பாணத்துக் கதிரேசன் கோவிலிற் காணப்பட்ட மரச் சித்திரம். இற்றைக்கு 75 வருடங்களுக்குமுன் செய்யப்பட்டது.



டக்டர் ஆநந்தக்குமாரசுவாமி D. Sc.

*(22-8-1877 — 9-9-1947)*

அநுபந்தம்

# டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி

'கூருமா னந்தக் குமாரசா மிப்பெயர்பூண்
பேரறிஞன் வந்து பிறந்திலனேல் — பாரதநாட்
டொண்கலைகள் தாமெங்கே, ஓதுசிவ ஞானர்ஞான
நுண்கலைக்கூத் தெங்கே, நுவல்.'

**ஆ**நந்தக் குமாரசுவாமி யென்னும் பேரறிஞனை அறியாதவர், இந்திய இலங்கைக் கலைகளின் சிறப்பியல்புகளை அறியாதாரே யாவர். இவ்விரு நாட்டுக் கலைகளின் மறுமலர்ச்சிக்கு டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் செய்துள்ள **பணி,** இந்து சமய மறு மலர்ச்சிக்குச் **சுவாமி விவேகாநந்தர்** ஆற்றிய பணியையும், இந்திய நாட்டின் அரசியல் விடுதலைக்கு **காந்தி யடிகள்** ஆற்றிய பணியையும் போன்றதாகும். **இந்து சமயமும், இந்திய நாடும், இந்தியக் கலைகளும்** உலகில் நிலைநிற்கும் வரை, இம்மூவர் திருநாமங் களும் அழியா வென்பது திண்ணம். டக்டர் ச. இராதாகிருஷ்ணன் அவர்கள், இவரைப்பற்றிக் கூறுமிடத்து: "இந்திய மறுமலர்ச்சிக்கு மாத்திரமன்றி, உலகத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சிக்கு வழிகோலிய வர்களுள் ஒருவர்" எனக் குறிப்பிடுகின்றார்.

## வாழ்க்கைச் சுருக்கம்

**இ**ப்பெரியார் இலங்கைத் தமிழ் மக்கள் திலகமாக விளங்கிய **சேர் முத்துக்குமாரசுவாமி** அவர்களின் அருந்தவப் புதல்வராக, 1877ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம், 22ஆம் திகதி, கொழும்பில் அவதரித்தார்.

சேர் முத்துக்குமாரசுவாமி ஓர் அரசியற் தலைவராக விளங்கியது மாத்திரமன்றி, சிறந்த கலா விற்பன்னராகவும் புகழ்பெற்றிருந்தார். அவர் ஆங்கிலம், தமிழ், சிங்களம், பாளி முதலிய மொழிகளிற் புலமையுடையோராய் விளங்கினர். **தாதுவம்சம், சுத்தநிபாதம்** என்னும் பௌத்த நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சத்தியசீலனை **அரிச்சந்திர மகாராசனது கதை**யை ஆங்கிலத்தில் நாடகமாக எழுதி, அதனை விக்டோரியா மகாராணியாருக்கு முன்பாக

நயம்பட எடுத்து விளக்கிப் பெரும் புகழ் பெற்ருர். இலங்கையின் சிறந்த தலைவர்களாக விளங்கிய சகோதரர்களான பொன். குமார சுவாமி, சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணசலம் ஆகியவர்கள், சேர் முத்துக்குமாரசுவாமியின் சகோதரியாரின் புத்திரர்களாவர்.

ஆநந்தக் குமாரசுவாமி பிறந்த எட்டாம் மாதம், அவர் அன்னையார் உடல் நலக்குறைவு காரணமாகத் தமது தாய்நாடாகிய இங்கிலாந்திற்குக் குழந்தையுடன் பிரயாணமாஞர். தந்தையார் அவர்களுடன் செல்லாது தமது பிரயாணத்தைப் பின்போட்டிருந்தார். எதிர்பாராத விதமாகச் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள் நோய்வாய்ப்பட்டு, 1879ஆம் ஆண்டு, மே மாதம், 4ஆம் திகதி இவ்வுலகை நீத்தார்.

குழந்தையாகிய ஆநந்தர், தாயின் பாதுகாப்பில் வளர்ந்து, திறமையுடன் கல்வி கற்று, இலண்டன் சர்வகலாசாலையில் நிலநூலில் பி. எஸ் ஸி. என்னும் பட்டம் பெற்ருர். தாயின் உதவியாலும், ஏனைய பிரமுகர்களது உதவியாலும், அக் காலத்தில் இங்கிலாந்தில் வசித்த கலைவாணர் பலரின் நட்பைப் பெற்று அவர் தமது அறிவைப் பல வழிகளிலும் விருத்திபண்ணிக்கொண்டார்.

சிறந்த நிலநூற் பண்டிதராக விளங்கியமையால், அவரை இலங்கை அரசினர் 1903ஆம் ஆண்டு, தமது உலோக பரிபாலனப் பகுதிக்குத் (Mineralogical Survey) தலைவராக நியமித்தனர். இலங்கையில் இத்துறையில் அவர் வெளியிட்ட பல சிறந்த அறிக்கைகளைப் பாராட்டி, இலண்டன் சர்வகலாசாலையார் அவருக்கு 'விஞ்ஞானமேதை' (D. Sc.) என்னும் பட்டத்தை 1906ஆம் ஆண்டில் வழங்கிஞர்கள்.

கலையார்வம் மிகுந்து விளங்கிய தந்தைக்கு மகனய் உதித்த ஆநந்தரின் இளம் உள்ளம், இயல்பாகவே கலை இன்ப வெள்ளத்துள் திளைக்க விரும்பியது. இலங்கையின் பல பகுதிகளுக்குத் தமது உத்தியோக முறையிற் செல்ல நேர்ந்த காலங்களில், ஆங்காங்கு மணற்கும்பங்களாலும், செடி கொடிகளாலும் மூடப்பட்டுக் கிடந்த பண்டைப் பெளத்த தாதுகோபங்களிலும், விகாரைகளிலும், அரண்மனைகளிலும் காணப்பட்ட சிறந்த கலை வனப்பு வாய்ந்த சிற்ப வடிவங்களும், மலைக்குகைகளின் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த வர்ண ஓவியங்களும், பண்படுத்தப்பட்ட அவரது உள்ளத்தில், இன்ப

உணர்ச்சிகளை எழுப்பின. வெறுந் தரையைக் கிண்டி, உலோகங்களின் அமைப்பை அறிய முயற்சித்த அவரது இளம் உள்ளம், இலங்கை மக்கள் சுதந்திர வாழ்க்கை நடாத்திய காலத்தில், அன்போடும், ஆர்வத்தோடும் அமைத்து வைத்த கலைச் செல்வத்திற் பரவசமடைந்தது; உத்தியோகப்பற்று மனதை விட்டகன்றது; கலைப் பொருள்களைத் தேடுவதிலும், அவற்றை ஒன்றுபடுத்தி ஆராய்வதிலும் நாட்கள் பல கழிந்தன. பூர்வீக இலங்கையின் கலைகளைப் பற்றியும், அவற்றின் அமைப்பு இலக்கணத்தைப்பற்றியும், பண்டைய இலங்கையின் சமய, சமூக அமைப்பு முறைகளைப்பற்றியும் நன்கு ஆராய்ந்து அறிந்தார். விசேஷமாக, கண்டியரசர் காலத்திலும், அதற்குப் பின்னும் நாட்டில் தோற்றிய கலைப் பொருள்களைப்பற்றிய விபரங்களை நன்கு சேகரித்தார். இவ்விதமான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் காலத்தில், நாட்டின் சமூக சீர்திருத்தப் பணியிலும் ஈடுபட்டு உழைத்தார்.

ஆநந்தக் குமாரசுவாமி அவர்களின் சமூக சீர்திருத்த முயற்சியின் பயனாய், 1906ஆம் ஆண்டில் **இலங்கைச் சமூக சீர்திருத்த சபை** (The Ceylon Social Reform League) என்னும் கழகம் அவரைத் தலைவராகக்கொண்டு நிறுவப்பெற்றது. அச்சபையின் பெயரால் வெளிவந்த **'இலங்கைத் தேசீய சஞ்சிகை'** (The Ceylon National Review) என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக விருந்து, இலங்கை மக்கள் தங்கள் பண்டைப் பெருமையை அறிந்து, அதற்கமையத் தங்கள் கலாசார வாழ்வை நடாத்துதல் வேண்டுமென்னும் கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகளை அப் பத்திரிகையில் வெளியிட்டார். அவர் முயற்சியால் அக் காலத்தில் நாட்டிற் கலைப்பற்றும், சமயப்பற்றும் வளர்ச்சி பெற்றன.

தாம், அரிதில் முயன்று தேடிப் பெற்ற கலைப் பொருள்களின் சிறந்த இயல்புகளை, உலகறியச் செய்யவேண்டுமென்னும் பேரவா அவரிடத்தே தோற்றியது. 1907ஆம் ஆண்டில் தமது உத்தியோகத்தை விட்டு நீங்கி, தாம் சேகரித்த கலைப் பொருள்களையும், குறிப்புக்களையும் கொண்டு இங்கிலாந்து சென்றார். அங்கு இடைவிடாது உழைத்து, உலகப் பிரசித்திபெற்ற **'இடைக்காலச் சிங்களக் கலைகள்'** (Medieval Sinhalese Art) என்னும் சிறந்த நூலைத் தமது முதல் நூலாக வெளியிட்டார். இந் நூல் மத்தியகால

இலங்கை மக்களின் கலைகளை உலகிற்கு அறியப்படுத்தியதுடன், ஆநந்தக் குமாரசுவாமி அவர்களின் கலைப்பண்பையும், கலைப்பொருள்களை ஆராய்ந்து உணரும் திறனையும் வெளிக்காட்டியது. இதன்பின் **இந்திய சிற்பி** (Indian Craftsman) என்னும் நூலையும் வெளியிட்டார். அதே காலத்தில், **ஓ. சி. கங்கூலி** அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, '**இந்தியக் கலைகளின் நோக்கம்**' என்னும் கட்டுரையை வெளியிட்டார். இக் கட்டுரை இந்தியா முழுவதிலும் இந்தியக் கலைக்கு ஒரு புதிய உணர்ச்சியை ஏற்படுத்தியது. அவரது புகழ் படிப்படியாக உலகம் முழுவதும் பரவியது. இந்தியக் கலைகளுக்கும் உலகத்தில் மதிப்பு ஏற்படத் தொடங்கியது.

1910ஆம் ஆண்டில் **அலகபாத்**தில் நடந்த **அகில இந்தியக் காட்சி**யின் கலைப்பகுதிக்கு, ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் தலைவராக நியமிக்கப்பெற்றார். அதன் பயனாக, அவர் இந்தியாவில் இரண்டாண்டுகளுக்கு மேல் வசிக்கக்கூடியதாக விருந்தது. அக் காலத்தில், இந்திய கலைகளைப்பற்றிய ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்ததுமன்றி, பல அறிஞர்களது நட்பையும், உதவியையும் பெற்றார். அங்கு வதிந்த காலத்தில் **தஞ்சாவூர், மைசூர், மதுரை** முதலிய இடங்களுக்குச் சென்று தென்னிந்திய நுண் கலைகளாகிய நாட்டியம், நாடகம், சிற்பம், ஓவியம் ஆகியவற்றை ஆராய்ந்து கற்றார். வட இந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று மொகலாய ஓவியங்களையும், இராஜபுத்திர ஓவியங்களையும் ஆராய்ந்து, அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை நன்கு கற்றார். அக் காலத்தில்தான் வங்கநாட்டுக் கவி **டக்டர் இரவீந்திரநாத் தாகூர், டக்டர் பகவான் தாசர், சகோதரி நிவேதிதா, ஸ்ரீமதி அன்னி பெசண்ட் அம்மையார்** முதலியோரின் நட்பும் அவருக்குக் கிடைத்தது. டக்டர் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் பாடல்களை முதல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களேயாவர்.

'டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களின் கலை அறிவையும், ஆராய்ச்சி வன்மையையும் அறிந்த அமெரிக்க நாட்டினர், 1919ஆம் ஆண்டில், **போஸ்டன் நகரத்துக் கலைப் பொருட் காட்சி நிலையத்தின் கீழைத்தேசக் கலைப் பொருட் பகுதியின் தலைவராக** அவரை நியமித்தனர். அந்நிலையத்திற்கு வேண்டிய கலைப் பொருள்களைச் சேகரிப்பதற்குப் பலமுறை உலகத்தைச் சுற்றிவந்தார்.

சென்ற நாடுகளில் எல்லாம் அவ்வந்நாட்டுக் கலைப் பொருள்களை நன்கு ஆராய்ந்து இந்திய நாட்டுப் பொருள்களோடு ஒப்புநோக்கிக் கற்ருர். அவ்விதமாகத் தாம் தேடிய அறிவின் பயனைப் பல சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், பல அரிய நூல்களையும் வெளியிட்டார். அக் கட்டுரைகளும், நூல்களும் பலநாட்டு மொழிகளில் பெயர்க்கப்பட்டன. எல்லாநாட்டு மக்களும் இந்திய இலங்கைக் கலைகளின் சிறந்த இயல்புகளை நன்கு அறிந்து போற்றினர். ஆங்கிலங் கற்ற மோகத்தில் மயங்கி இருந்த இந்திய இலங்கை மக்களின் கண்களும் திறக்கப்பட்டன. அவர்களுந் தங்கள் நாட்டுக் கலைகளின் சிறப்பினை ஒரு சிறிது அறியத் தொடங்கினர்கள்.

உலகம் போற்றும் கலாயோகியும், பேரறிஞருமாகிய டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள், தமது எழுபதாம் வயதில், போஸ்டன் நகரில் சிவனடி சேர்ந்தார் என்பதை அறிந்த கலை உலகம் துயருற்றது. கலாவல்லியும் புதல்வனை இழந்து சோர்வுற்றனள்.

### அவர் வெளியிட்ட நூல்கள்

டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் வெளியிட்ட கட்டுரைகளும், நூல்களும் 500க்குக் குறையாதென மதிக்கப்படுகின்றது. அவர் வெளியிட்ட நூல்களுள் முக்கியமானவை பின்வருவன :—

#### 1. இடைக்காலச் சிங்களக் கலை (Medieval Sinhalese Art) — 1908.

இந்நூலே டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் வெளியிட்ட முதற் கலை நூலாகும். இலங்கைக் கலைகளின் சிறப்பினை உலகறியச் செய்த பெரியார் குமாரசுவாமி அவர்களேயாவர். இந் நூலின் மூலமாகவே அப் பெரும் தொண்டை இலங்கைக்கு ஆற்றினுர். இலங்கையின் கலைகளின் இலக்கணத்தை அறிய விரும்புவோர் இந் நூலைக் கற்பது அவ்சியமாகும்.

#### 2. இந்திய சிற்பி (The Indian Craftsman) — 1908.

இந்திய சிற்பிகளின் வாழ்க்கைமுறை, தொழில், கல்வி முறை, முதலிய விபரங்கள் அடங்கிய சிறந்த நூல்; இலங்கைச் சிற்பிகளைப் பற்றியும், கைத்தொழில் முறைகளைப்பற்றியும் பல விபரங்கள் இதில் உள.

3. **இந்திய தேசீய தத்துவக் கட்டுரைகள்** (Essays in Indian National Idealism) — 1908.

பல அரிய கட்டுரைகளைக் கொண்டுள்ள இச் சிறந்த நூல் பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. மேல்நாட்டு நாகரிக மோகத்திலழுந்திக் கிடந்த பலரின் கண்களைத் திறந்து இந்திய இலங்கை நாடுகளின் கலைச் செல்வங்களின் உயர்வை அவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளது. இந்தியக் கலைகளின் மறுமலர்ச்சிக்குப் பெருந் துணைபுரிந்த நூல்களில் இதுவுமொன்று. இந் நூல் இப்பொழுது கிடைப்பதரிது.

4. **சிறந்த இந்தியக் கலா வடிவங்கள்** (Selected Examples of Indian Art) — 1910

நாற்பத்தேழு கலை வடிவங்களை விளக்கி வெளியிடப்பட்ட தொகுதி. இத் தொகுதி வெளிவந்த பின்பே கலை உலகம் இந்தியக் கலையைப் பற்றி நன்கு அறிந்தது.

5. **கலையும் சுதேசியமும்** (Art and Swadeshi) — 1911

பல அரிய கட்டுரைகள் அடங்கிய சிறந்த நூல். மேலே கூறப்பட்ட 'இந்திய தேசீயத் தத்துவக் கட்டுரைகள்' என்னும் நூலைப் போன்றது.

6. **இந்திய இலங்கைக் கலைகளும், கைத்தொழிலும்** (The Arts and Crafts of India and Ceylon) — 1913

225 விளக்கப் படங்களுடன் இந்திய இலங்கைக் கலைகள், கைத்தொழில்கள் பற்றிச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் இந் நூலிற் கூறப்பட்டிருக்கின்றன. இந் நூலின்கண் கூறப்பட்டுள்ள பொருளைப் பற்றி அறிவதற்கு இதைவிடச் சிறந்த நூல் வேறில்லை என்பது மிகையாகாது.

7. **இலங்கையின் உலோக வடிவங்கள்** (Bronzes from Ceylon) —1914

கொழும்பு நூதன பொருட்காட்சிச்சாலையிலும், பிறநாடுகளிலும் காணப்படும் இலங்கை உலோக சிற்ப வடிவங்களைப் பற்றிய விளக்கங்கள் உடைய நூல்.

**8. இராஜபுத்திர ஓவியங்கள்** (இரு தொகுதிகள்) (Rajput Paintings: 2 Vols.) — 1916

**மொ**கலாய அரசர் காலத்திலும், அதற்குப் பின்பும் வட இந்தியாவிற் சிறந்து விளங்கிய இந்து ஓவியங்களைப் பற்றிய விளக்கங்களைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல் இதுவேயாகும். பிற்காலத்தில் இராஜபுத்திர ஓவியங்களைப் பற்றி எழுதியவர்களுக்கு முதல் நூலாக அமைந்துள்ள சிறந்த கலைக் கருவூலம்; 78 வர்ண ஓவியங்களையுடையது.

**9. புத்தரும் அவர் போதனைகளும்** (Buddha and the Gospel of Buddhism) — 1916

**பு**த்த பகவானது சீவிய சரித்திரமும், அவரது போதனைகளும் அடங்கிய நூல். ஓவியப் புலவர்களாகிய அபநேந்திரநாத் தாகூர், நந்தலால் போஸ் முதலியோரின் வர்ண ஓவியங்களுடன் விளங்குவது.

**10. சிவ நடனம்** (Dance of Shiva) — 1918

**சி**வ நடனம், இந்திய கலா தத்துவம், புத்தர் வடிவங்கள் முதலிய சிறந்த கட்டுரைகள் அடங்கிய நூல். பிரான்சு தேச அறிஞர் ரோமான் ரோலண்ட் என்பவரின் மதிப்புரையோடு வெளியிடப்பட்டுள்ளது. இந்திய இலங்கைக் கலைகளின் இலக்கணத்தை அறிவதற்கு இன்றியமையாத நூல்.

**11. இந்தியாவினதும் இந்திய - ஆசியாவினதும் கலைகளின் வரலாறு** (History of Indian and Indonesian Art) — 1927

**இ**ந்தியக் கலைகளின் வரலாற்றை விளக்கமாகக் கூறும் நூல் இதைவிடச் சிறந்தது வேறில்லை. இந்தியா, இலங்கை, ஜாவா, பர்மா, சுமாத்திரா, பாலி, கம்போடியா, இந்திய சீனு, சீயம் முதலிய நாடுகளில் இந்தியக் கலைகள் பரவிய வரலாற்றையும் அவற்றின் சிறந்த அம்சங்களையும் எடுத்துக் கூறும் நூல். பிறமொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது.

**12. புத்தர் வடிவத்தின் ஆதித் தோற்றம்** (The Origin of Buddha Image)— 1927

**பு**த்தர் திருவடிவம், கிரேக்கர்களது சிற்ப வடிவங்களைப் பார்த்து அமைக்கப்பட்டதென்பதைக் கண்டித்து எழுதப்பட்ட கட்டுரை. புத்தர் திருவடிவம் இந்திய சிற்பிகளால், இந்திய கலாதத்துவ

முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டதென விளக்கமாக இந் நூலில் கூறப்பட்டுள்ளது.

**13. பௌத்த விக்கிரக அமைப்பு இலக்கணம்** (Elements of Buddhist Iconography) — 1934

பௌத்த சமய விக்கிரகங்களின் அமைப்பு முறையை விளக்கும் நூல்.

**14. கலையில் இயற்கையின் திரிபு** (The Transformation of Nature in Art) — 1935

இந்திய கலாதத்துவத்தின் முக்கிய உண்மையைப் பல நாட்டுக் கலைகளின் உதவிகொண்டு விளக்கும் சிறந்த நூல்.

**15. கலைப் பொருள்களைக் காட்சிக்கு வைப்பதேன்?** (Why Exhibit Works of Art?) — 1943

ஒன்பது கட்டுரைகள் அடங்கிய இந்நூல், கலைசம்பந்தமான பல அரிய விஷயங்களை எடுத்து விளக்குகின்றது. இந்தியக் கலைப் பொருள்கள் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டனவே யன்றி, காட்சிக்காகச் செய்யப்பட்டனவன்று என்பதை மிகவும் தெளிவாக இந் நூல் விளக்குகின்றது. இதுபோன்ற பல கட்டுரைகள் இதன்கண் உள.

**16. சொற் சித்திரமும் நினைவுச் சித்திரமும்** (Figures of Speech and Figures of Thought) — 1946

பதினெட்டுக் கட்டுரைகள் அடங்கிய இந் நூல், கலை சம்பந்தமான பல அரிய பொருள்களை மிகவும் நயமாக விளக்குகின்றது.

**17. காலமும் காலாதீதமும்** (Time and Eternity)

கால தத்துவத்தையும், காலாதீதமான உண்மைத் தத்துவத்தையும் பற்றி மிக நுணுக்கமாக ஆராயும் நூல். பல நாட்டுத் தத்துவ முடிபுகளுக்கமைய எழுதப்பட்ட சிறந்த தத்துவ நூல் (Metaphysical).

டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் தம்து சொந்த ஆராய்ச்சியின் பயனாகத் தாம் அறிந்தனவற்றை எழுதி வெளியிட்ட நூல்களை விட, வடமொழியிலிருந்து நந்திகேஸ்வரர் அபிநய தர்ப்பணம்,

சுக்கிர நீதி சாரம், **விஷ்ணு தர்மோத்திரம், சில்பரத்தினம், அபிலாசார்த்த சிந்தாமணி** முதலிய கலை நூல்களை ஆங்கிலத்தில் திறமையுடன் மொழிபெயர்த்துமுள்ளார்.

இச் சிறந்த தமிழ் மகன் எழுதி உலகிற்களித்த பல நூல்களி லொன்ருவது அவரது தாய்மொழியாகிய தமிழில் இன்றுவரை வெளிவரவில்லை. இந் நிலை தமிழ்மக்கள் தமது கலைகளிற் கொண் டுள்ள ஆர்வக் குறைவிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

### அவர் சிறப்பாகச் செய்துள்ள பணி

டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் இந்தியக் கலைகளின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் செய்துள்ள தொண்டுகள் பல. அவர்களால் வெளியிடப்பட்ட நூல்களுள்ளே தலைசிறந்து விளங்குவன **இடைக்காலச் சிங்களக் கலைகள்** என்பதும், **இந்திய கலைகளின் வரலாறு** என்பதுவுமாம். இந்தியக் கலைகளின் வரலாற்றினை நன்கு அறிய விரும்புவோருக்கு இந் நூல்கள் மிகச் சிறந்த சாதனங்களாக அமைந்துள்ளன.

சைவ சமயத் திருவடிவங்களுட் சிறந்தது நடராஜ வடிவமே யாகும். **திருமூலர் திருமந்திரம், திருவதிகை மனவாசகங் கடந்தாரது உண்மை விளக்கம்** முதலிய நூல்களில் இவ்வடிவத்தின் தத்துவக் கருத்து மிகவும் தெளிவாக விளக்கப்பட்டிருப்பது, தமிழ்ச் சமய சாத்திரங்களிற் பழக்கமுடையார் பலருக்குத் தெரிந்த விஷயமே. ஆனால், இவ் வடிவத்தின் கலைச் சிறப்பினையும், தத்துவக் கருத்தினையும், உலகிற்கு மிக நயம்பெற எடுத்து விளக்கிய பெருமை, டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கட்கே உரியதாகும். **சிவ நடனம்** என்னும் ஆங்கில நூலில், அவர் நடராஜ வடிவத்தைப் பற்றி எழுதி வெளியிட்ட கருத்துக்கள், இன்றும் அறிஞர்தம் மனத்தைக் கவர்ந்துகொண்டே இருக்கின்றன. ஆநந்தக் குமார சுவாமி பிறந்திலரேல், உலகம் நடராஜ வடிவத்தை அறிந்திராது என்பது திண்ணம்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில், இந்திய சிற்பத்தினை ஆராய்ந்த மேலைத் தேசத்தினர், "புத்த பகவானது திருவுரு வத்தை இந்திய சிற்பிகள், கிரேக்க உருவங்களைப் பார்த்தே

அமைத்தனர்" என்னும் ஒரு புதிய ஆராய்ச்சி முடிபை உலகிற் பரப்பினர். அம் முடிபை இந்திய கலைப் புலவர்களும், ஆராய்ச்சி யாளர்களும் ஏற்று 'ததாஸ்து'க் கூறிவந்தனர். ஆனால், டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள், தக்க சான்றுகளுடன், அம் முடிபு ஆதாரமற்ற தென்றும், புத்த பகவான் திருவடிவம் இந்திய நாட்டுப் பண்டைச் சிற்ப முறைகளைப் பின்பற்றியே அமைக்கப் பெற்றதென்றும் அறுதியிட்டுக் கூறி, மேலைத் தேச ஆராய்ச்சி யாளரை வாய் மூடப்பண்ணினர்.

இந்திய நாட்டில், இஸ்லாமியர் (மகமதியர்) காலத்திலே காணப் பட்ட இந்து ஓவியங்கள் யாவும், இஸ்லாமியரால் நாட்டில் நிறுவப் பெற்ற கலை ஆக்கத்தின் பயனாகவே தோன்றியன என்னுங் கொள்கை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில், உலகில் பரவியிருந்தது. அவர் இக் கொள்கையை மறுத்து, பூர்வீக இந்திய ஓவியங்களின் வழிவந்தனவே இந்து ஓவியங்களாகிய '**இராஜபுத்திர ஓவியங்கள்**' என்றும், அவை இஸ்லாமிய ஓவியக் கலை இலக்கணங்க ளில்லாத தனி இந்திய முறையில் ஏற்பட்டன வென்றும் விளக்கி னர். இராஜபுத்திர ஓவியங்களைப் பற்றி அவர் வெளியிட்ட நூல்கள் இன்றும் அத்துறையில் ஆராய்வோர்க்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

இந்தியாவில் '**தேசியம்**', '**சுதேசியம்**' என்னுங் கொள்கைகள் தோன்றிய காலத்தில், தேசியத்தைப்பற்றியும், சுதேசியத்தைப்பற்றியும் விரிவான கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர் அறிஞர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களேயாவர். அவரால் வெளியிடப்பட்ட **இந்திய தேசீய தத்துவக் கட்டுரைகள், கலையும் சுதேசியமும்** என்னும் இரு நூல்கள் அக் காலத்தில், சுதேசீயத்துக்கோர் அரணாக விளங்கின.

கலைத்துறையில் மாத்திரமன்றி, சமயத்துறையிலும் அவர் பல கட்டுரைகளும், நூல்களும் இயற்றியுள்ளார். மேல் நாட்டு அறிஞர் பலர் அவரை ஒரு சமய குரவராகவும், தத்துவ ஞானியாகவும் மதித்து வருகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டிலே உலகம் போற்றும் பெருமையுடன் வாழ்ந்த இத் தமிழ் மகனைத் தமிழ்ச் சமூகம் மறவாது போற்றி வாழ

வேண்டும். கலா ரிஷியாகவும், தத்துவ ஞானியாகவும் விளங்கிய இப் பெரியாரைப் பாராட்டிப் போற்றி வாழ்தல் இலங்கை மக்கள் கடனாகும்.

**புகழுரைகள்**

எறிக் ஜில் என்னும் ஆங்கிலப் புலவர் :—

"இக் காலத்திலுள்ள எந்த எழுத்தாளனும் கலை, வாழ்க்கை, சமயம், பக்தி ஆகிய துறைகளோடு சம்பந்தமான உண்மைகளை அனுபவ ஞானத்தோடும், ஆழ்ந்த விளக்கத்தோடும் ஆநந்தக் குமார சுவாமியைப் போல எடுத்துரைக்கவில்லை என்பது எனது நம்பிக்கை.

சேர் வில்லியம் ரொதன்ஸ்ரீன் என்னும் ஆங்கிலக் கலைப் புலவர்.—

"இன்று இந்தியா கலையில் முதன்மை பெறும் நாடுகளுள் ஒன்றாக விளங்குமாயின், அந்நிலைக்குப் பெருமளவிற் காரணராக விருந்தவர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களே யாவர்."

இந்தியாவின் மகா தேசாதிபதியாக விருந்த ஸ்ரீ ச. இராஜகோபாலாச் சாரியார் அவர்கள்:—

"அழகை இறைவனுகக் கண்டவருள் ஆநந்தக் குமாரசுவாமி அவர்கள் முதன்மை பெறுவர். அவர் ஒரு பெரியார். மற்றையோர் காணாத பலவற்றைக் கண்டவர்."

பாரத குடியரசுத் தலைவர் டக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் :—

"டக்டர் குமாரசுவாமி அவர்கள் எங்கள் உரிமைகளின் உயர்ந்த இலட்சியத்தை எடுத்து அறிவுறுத்தியவரும், இந்திய கலையின் சிறந்த அழகினை உலகிற்கு விளக்கியவருமாகிய ஒரு ரிஷியாவர்."

பாரதக் குடியரசின் உப தலைவர் டக்டர் ச. இராதாகிருஷ்ணன் அவர்கள்:—

"நான் டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களின் நூல்களைப் பல வருடங்களாகக் கற்றுவந்தேன். அவரைப் போஸ்டன் நகரில் 1946ஆம் ஆண்டிற் சந்திக்கும் பெரு மகிழ்ச்சியைப் பெற்றேன். இந்திய மறு மலர்ச்சிக்கு மாத்திரமன்றி, உலகத்தில் ஒரு புதிய மறு மலர்ச்சிக்கு வழிகோலியவர்களுள் அவரு மொருவராவர். இக் காலத்து நிலையற்ற வேஷங்களில் ஏமாற்றமடையும் எங்கள் மாணவர்கள், உண்மை

உணர்ச்சியைப் பெறுவதற்கு, அவரின் நூல்களைக் கற்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.''

இலங்கைப் பிரதமர் கௌரவ டி. எஸ். சேனநாயகா அவர்கள் :—

''இக் காலத்தில் எங்கள் பழைய கலாசாரத்திற்கும், ஆத்மீக உரிமைகளுக்கும் புத்துயிர் அளிப்பதற்கு வேண்டிய உற்சாகத்தை, டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களிடமிருந்தே நாம் பெற்றோம்; வேறு எவரிடமிருந்துமல்ல.

''அவர், கலைப் பொருள்களை ஆக்கும் வினைஞராயிராதபோதிலும் எங்கள் முன்னோர்கள் எமக்கு விட்டுச்சென்ற கல், உலோகம், மரம் ஆகியனவற்றால் ஆக்கப்பட்ட கலைப் பொருள்கள் மூலம், அவர்களது எண்ணங்களையும், நோக்கங்களையும், கலைப் பண்பையும், அவர்களது உற்சாகத்தின் ஊற்றையும், உணர்ந்து அறியக்கூடிய ஒரு தெய்வீக சக்தி வாய்ந்தவராக விளங்கினார். இலங்கையின் பண்டைய கலைப் பண்புகளைக் கற்க விரும்புவோர்க்கு, அவர் ஒரு உண்மைக் குருவாக எக்காலத்திலும் விளங்குவார்.''

டக்டர் ஆநந்தக் குமாரசுவாமி அவர்களின் ஆராய்ச்சி வன்மையையும், ஆழ்ந்த அறிவையும், புத்திக் கூர்மையையும், பேரின்பப் போக்கினையும், கலையே உருவாகிய அவர் வாழ்க்கையையும் பாராட்டிப் பல நாட்டு அறிஞர்கள் அவருக்குப் புகழ்மாலை சூட்டியிருக்கின்றார்கள்.[1]

---

1. யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை திரு. எஸ். துரைராசசிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் தொகுத்து வெளியிட்ட 'Homage to Ananda Coomaraswamy' என்னும் நூலில் அவற்றைக் காணலாம்.

## இந் நூலின்கண் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிற நூல்கள்

**ஆங்கில நூல்கள் :**


History and Culture of the Indian People, Vol. 2. — Edited by R. C. Majumdar and A. D. Pusalkar.

Dravidian India, Vol. 1 — by T. R. Shesha Iyengar, M. A.

History of the Tamils — by P. T. Srinivasa Iyengar, M. A.

A Short History of Ceylon — by H. W. Codrington.

Buddhist Remains in Andhra and Andhra History — by K. R. Subramaniam, M. A.

Buddhist Art — Dr. J. H. Vogel.

History of Indian and Indonesian Art — by Dr. Ananda K. Coomaraswamy

Indian Architecture Vol. 1 — by Percy Brown.

Polonnaruwa Bronzes — by Sir P. Arunachalam.

The Stupa in Ceylon — by Dr. A. Paranavidane.

The Story of the Stupa — by A. H. Longhurst.

Medieval Singhalese Art — by Dr. Ananda K. Coomaraswamy.

Naga Dipa and Buddhist Remains in Jaffna — by Dr. Paul E. Peiris.

Ancient Jaffna — by Mudaliyar C. Rajanayagam, J. P.

Indian Sculpture and Painting — by E. B. Havell.

Indian Craftsman — by Dr. Ananda K. Coomaraswamy.

Dance of Shiva — by Dr. Ananda K. Coomaraswamy.

Essays in Indian National Idealism — by Dr. Ananda K. Coomaraswamy.

Hindu View of Art — by Dr. Mulk Raj Ananda.

The Culture of South East Asia — by Dr. Reginald Le May.

Mahavamsa

Bronzes from Ceylon — Edited by Dr. Ananda K.Coomarswamy

Homage to Dr. Ananda K. Coomaraswamy — Edited by K. Durairajasingham.

**தமிழ் நூல்கள் :**

இலங்கைப் பூர்வ சரித்திரம்— ஜி/ஸ்ரீ. மென்டிஸ்.

பட்டினப்பாலை

சிலப்பதிகாரம்

மணிமேகலை

கலிங்கத்துப்பரணி

யாழ்ப்பாணச் சரித்திரம் — முதலியார் செ. இராசநாயகம்.

யாழ்ப்பாண வைபவமாலை — மயில்வாகனப் புலவர்.

இலங்கைத் தமிழ்விழா மலர்

தென்னிந்திய சிற்ப வடிவங்கள் — க. நவரத்தினம்.

பெரிய புராணம்

# அரும் பொருள் அட்டவணை


## அ

அகத்தியரின் 17
அகநானூறு 24
அசோகன் 7, 9, 11, 25
அண்டம் 26
அதிஷ்டான 41
அத்தாணி மண்டபம் 16, 22
அநுமார் 45, 78
அநுராதபுரம் 9, 10, 12, 14, 15, 16, 25, 27, 29, 32, 34, 35, 36, 69, 70, 74, 75, 76
அந்தராளம் 21, 41
அபநேந்திரநாத் தாகூர் 87
அபயகிரி 11, 30, 32
அபிநய தர்ப்பணம் 88
அப்சரஸ்திரிகள் 52
அப்பர் 59
அமராவதி 11, 25
அமெரிக்கா 84
அம்பஸ்தல 30
அரண்மனைக்கோட்டம் 19
அருணாசலம், சேர் பொன் 82
அர்கதர் 24
அர்த்த மண்டபம் 21, 41, 42
அலகபாத் 84
அவுகன 18, 19, 32
அறவோர் பள்ளி 14
அன்னிபெசண்ட், ஸ்ரீமதி 84
அஜந்தா 50, 51

## ஆ

ஆங்கிலேயர் 19
ஆசியா 19
ஆதி இராஜேந்திரன் 15
ஆனந்தக் குமாரசுவாமி 8, 9, 13, 19, 54, 58, 61, 81, 82, 84, 85, 88, 89, 90, 91, 92
ஆநந்தர் 17
ஆந்திரநாடு 10, 11, 12
ஆரியமக்கள் 3
ஆரியர் 24
ஆலைகள் 62
ஆலைத்தொழில் 60

## இ

இடைக்காலச் சிங்களக் கலைகள் 83, 85, 89
இதிகாச 2, 38
இந்தியநாடு 2, 81
,, இலங்கைக் கலைகளும் கைத்தொழிலும் 86
,, கலைகளின் நோக்கம் 84
,, கலைகள் 64, 65, 81
,, சிற்பி 84, 85
,, தேசிய தத்துவக் கட்டுரைகள் 86, 90
,, சீனு 87
இந்தியாவினதும், இந்திய ஆசியாவினதும் கலைகளின் வரலாறு 87, 89
இயக்கர் 2, 3
இரங்கொதவிகாரம் 18, 30
இரத்தினதீவம் 6
இரவீந்திரநாததாகூர், டக்டர் 84
இராணிமாளிகை 13
இராதாகிருஷ்ணன், டக்டர் ச 81, 91
இராமநாதன், சேர் பொன் 22, 23, 82

இராமாயண 6
இராமேஸ்வரத்தில் 20, 47
இராயகம 21
இராவணன் 6, 39
இராஜகோபாலாச்சாரியார் 91
இராஜ புத்திர ஓவியங்கள் 84, 87, 90
இராஜராஜன் 15, 39, 40, 70
இராஜராஜேஸ்வரம்,ரீ 15, 40, 50
இராஜேந்திரபிரசாத் 91
இராஜேந்திரன் 15, 40
இலங்காராமா 11
இலங்கைச் சமூக சீர்திருத்த சபை 83
இலங்கைத்திலக 16, 35, 51, 71, 73
இலங்கைத் தேசிய சஞ்சிகை 83
இலங்கை மக்கள் 1
இலங்கையில் சைவமும் பௌத்தமும் 6
இலங்கையின் உலோக வடிவங்கள் 86
இலம்பகர்ணர் 2, 3, 4
இஸ்லாமியர் 90

ஈ

ஈசுரமுடையார் 15, 70
ஈசுர முனிய 10, 13, 14
ஈழத்துணவு 5
ஈழம் 1, 5, 6
ஈனயான 37

உ

உக்கிரசிங்கன் 46, 48
உண்மை விளக்கம் 89
உத்தம தச தாலம் 32
உத்தர ராமா 16
உபபீடம் 41, 42
உபோசாத 10, 29
உமாதேவி 48
உரும்பராயில் 47

ஊ

ஊர் 4

எ

எகிப்து 3, 4
எம்பக்க தேவாலயம் 22, 73
எல்லாரா 11
எல்ஜின் மார்பிள்ஸ் 66
எறிக் ஜில் 91

ஐ

ஐரோப்பா 3
ஐரோப்பிய கலை 64, 65
,, சிற்பம் 64

ஒ

ஒய்சால 34

ஓ

ஓவியம், இந்திய 52
,, இலங்கை 52
,, களனியா 52
,, குகை 52
,, சிகிரியா 53
,, சுவர் 52
,, தம்புள்ளா 52, 53
ஓவியக் கலை 52
ஓவியங்கள் 19, 50, 51, 52, 53
ஓவியத் தொழில் 59
ஓவியப் புலவர் 9

க


கங்காவதார 13
கங்கூலி ஓ. சி. 84
கடலதேனியா 22, 73
கட்டடக் கலை 8, 23
கணேசர் 37
கணேஸ்வர ஆசாரி 22
கண்டி 22, 52, 59
,, அரசர், 9, 51, 60, 83
,, நகர் 9, 20, 21, 22, 73
கதிரைமலை 37, 46
கதிர்காம ஆலயம், 37
,, வேலவர், 37
கந்தக சைத்திய 11, 12 27, 69
கந்தசுவாமி கோயில் 46, 47, 48
கந்தரோடை 46, 49
கம்பளை 21, 22, 73
கம்போடியா 8, 35, 37
கம்மாளர் 55
கயவாகு 5, 11
கருணாகரத் தொண்டைமான் 47
கருணாகரப் பிள்ளையார் 47
கர்ணகூடுகள் 41
கர்ப்பக்கிரகம் 16, 18, 21, 23, 33, 41, 71
கலாதத்துவம் 64
கலிங்கதேசம் 3, 46
கலிங்கத்துப்பரணி 47
கலிங்கர் 2, 3
கலைப் பொருட்களைக் காட்சிக்கு வைப்பதேன் 88
கலையில் இயற்கையின் திரிபு 88
கலையும் சுதேசியமும் 86
கல் இரதங்கள்
கல் விகாரை 17
களனியா 22, 38, 52, 60, 73
கூறல்ல 26
கனககுரியன் 47
கனிஷ்டதீசன் 11
கஜசிம்மத் தலைகள் 21
கஜலக்ஷ்மி 48, 78
காசியப்பன் 13, 52
காஞ்சிபுரம் 50
காந்தி அடிகள் 81
காலமும் காலாதீதமும் 88
கிரிவிகாரை 16, 30, 71
கிரேக்க 87, 89
கிரிமலை 38
குணவீரசிங்கன் 47
குதிரைத்தலை 14
குப்தர், கள் 12, 13, 50
குமாரசுவாமி, சேர் பொன் 82
கும்பங்கள் 29, 34
குருநாக்கல் 21
குலோத்துங்கன் 46
குவேனி 3
குளக்கோட்டன் 39
கெடிகே 14, 70
கொட்டுவ 26
கொழும்பு 9, 12, 13, 20, 22, 34, 42, 45, 60, 69, 76, 77, 79
கோட்ட 26
கோட்டம் கோவில் 72
,, சதுர 26
கோட்டை 21, 47, 48
,, , யாழ்ப்பாணக் 78
கோணேசர் 37
கோணேரிராஜபுரம் 44
கோதைமழுவை 5
கோபுரங்கள் 23
கோமடேஸ்வரர் 19

கோவலன் 50
கைத்தொழில் வகைகள் 59
கைப்பிடிவரிசை 29, 74
கைலாசநாதர் 47, 50

ச

சங்க நூல்கள் 5
சங்கபோதி 47
சங்கமித்தா 5
சங்கிராமம், கள் 29, 35, 36
சட்டநாதர் 47, 48, 49, 78
சண்டேசுவரநாயனார் 43, 44, 77
சதமகால்பிரசாத 35
சதவாகன 11
சதுரக்கல் 74
சந்திரசேகரன், ர் 38, 45, 78
சந்திரவட்ட 10, 13, 18, 28, 35, 65, 70
சமந்தத் 6, 38
சமய அநுபவம் 58
சமயச் சின்னங்கள் 25
சமயம், சைவ 6, 7, 13, 37
,, பௌத்த 6, 7, 8, 12, 37, 46
சம்பல்துறை 38
சம்புகோளம் 38, 46
சனீஸ்வரன் 48
சாகித்திய தர்ப்பண 58
சாஞ்சி 10, 25, 27, 28
சாதகக் கதைகள் 19
சாந்தம் 67
சாலைகள் 41
சான்றோர்கள் 24
சிகரம் 30
சிகிரியா 50, 52, 78
சிங்க நகர் 45, 47
சிங்களமொழி 9
சிங்களரும், தமிழரும் 1
சிங்களர் 1, 2, 3, 6, 7
சிசுநாகன் 2
சிதம்பரம் 30
சித்தன்னவாசல் 50
சித்திரவாசல்களில் 57
சிம்மாசனம் 60, 79
சிரவணபெல்கொலா 19
சிராவத்தி 12, 69
சிலப்பதிகாரம் 5
சில்பரத்தினம் 89
சில்பிகள் 8
சிவநடனம் 87, 89
சிவமூர்த்தம் 44, 77
சிவலிங்கம் 42
சிவஞானபாதம் 6, 38
சிவாலயம், கள் 15, 16, 19, 20, 40, 41, 42, 43, 57, 70, 72
சிறந்தஇந்தியக்கலாவடிவங்கள் 86
சிற்பம், அமராவதி 12
,, ஆந்திர 9
,, இந்திய 8
,, குப்த 9
,, சோழ 9
,, தென்னிந்திய 9
,, நாயக்க சேதுபதிகள் 9
,, பல்லவ 9
,, பாண்டிய 9
,, பௌத்த 11
,, மௌரிய 9
,, விஜயநகர 9
சிற்பக்கலை 23
சிற்பங்கள், நடனச். 21
சிற்பமுறை, அமராவதி 19, 31
,, ஆந்திர 9, 11, 12
,, இந்திய 8

சிற்பமுறை, குப்த 9, 12, 13
,, சோழ 9, 15, 16
,, திராவிட 16, 71
,, தென்னிந்திய 9, 22
,, நாயக்கசேதுபதிகள்
,, பல்லவ 9, 13, 14
,, பாண்டிய 9, 19, 21
,, மௌரிய 9
,, விஜயநகர 20, 48
சீதாவாக்கை 21
சீயம் 87
சுகாசனம் 17
சுக்கிரநீதிசாரம் 89
சுதுமலை 60
சுதேசியம் 90
சுத்தநிபாதம் 81
சுந்தரமூர்த்தி 43, 76
சுந்தரர் 59
சுமாத்திரா 8, 87
சுமேரியா 4
சுளிபுரம் 5
சுற்றுப்பிரகாரம் 26, 41
சுற்றுவீதி 28
செண்பகப்பெருமாள் 47, 48
சென்னை 44
சேக்கிழார் 43
சேசறுவர் 18
சேதவனராம 11, 12, 19, 69, 71
சேதுபதிகள் 9
சேர 61
சேனநாயகா, கௌரவ டி. எஸ். 92
சேனை இலங்காதிகார 21
சொற்சித்திரமும், நினைவுச்சித்திரமும் 88
சோகம் 67
சோமாஸ்கந்தர் 45, 78
சோழர், கள் 6, 35, 39, 40, 41, 50, 51, 71

**த**

தக்கின தூபம் 11
தஞ்சை 40, 44, 50, 84
தடாகம் 19
தந்தஆலயம் 18, 21, 22, 40, 53, 73
தமிழமகாசய 16
தமிழ்நூல்களும், ஈழமும் 5
தம்பதிகளின் 13, 70
தம்பதேனியா 21
தம்பலகாமம் 23
தம்புள்ளா 51, 52
தராச்சர் 2, 3, 4
தர்மசால 29
தக்ஷிணாமூர்த்தி 42, 48
தாதுகோப அமைப்புமுறை 26
தாதுவம்சம் 81
தாதோபதீசனுல் 13
தாமரைத்தடாகம் 14
திசமகாவிகாரை 46
திம்புலாகலா 51, 52
திராவிடர் 1, 2, 3, 4
திரிபங்கம் 19, 34
திருக்கேதீச்சரர் 39
திருக்கேதீஸ்வரம் 15, 38, 39
திருகோணமலை 23, 39, 40, 45, 47, 78
திருக்கோணேசர் 38, 39, 45
திருஞானசம்பந்தர் 43, 76
திருத்தம்பலேஸ்வரன் 38, 39, 45
திருநாவுக்கரசு 44, 77
திருநெல்வேலி 44
திருமந்திரம் 89
திருமூலர் 89

திருவடிநிலை 5
திருவடிவம், இருந்த 32
,, கிடந்த 31, 32
,, நின்ற 31, 32
,, புத்தர் 72, 75
திருவதிகை 89
திவங்க ஆலயம் 19, 35, 51, 52
துட்டகைமுனு 10, 11, 15, 37
துரைராசசிங்கம், எஸ். 92
துவாரபாலகர், கள் 28, 34, 42, 65, 74
தூண்கள் 14, 21, 28, 26, 34, 35, 76
,, கண்டி 22
தூபாராம ஆலயம் 16
தூபி 26
தென்னிந்திய 3, 4, 5, 22, 50
தென்னிந்தியாவும் பிறநாடுகளும் 4
தேசியம் 90
தேர்கள் 60
தேவதாகொட்டுவ 26
தேவநம்பியதீசன் 6, 9, 10, 38, 46
தேவாரத்திருமுறை 6
தேவாரம் 6, 15, 39
தொலுவிலா 13, 32, 70
தொல்காப்பியம் 24
தொழிலும் கலைகளும் 56
தோரணங்கள் 27

நடராச மண்டபம் 50
நடராஜ வடிவம் 44, 77, 89
நந்தலால்போஸ் 87
நந்தவனம், கள் 35, 36
நந்திகேஸ்வரர் 88
நல்லூர், ரில் 46, 47, 48, 49, 78, 79
,, கந்தசுவாமிகோவில் 47, 48
நல்லைநகர் 49
நாகதீபம் 2, 3, 6, 38, 46
நாகதுவாரபாலகர், கள் 10, 18, 29, 34, 35
நாகராஜ 12, 74
நாகர், கள் 2, 38
நாகர்கோவில் 49
நாகார்ச்சுனகுண்டம் 11
நாகார்ச்சுனர் 12
நாயக்க 9, 22
நாலந்தா 14, 70
நிசங்கமல்ல, னால் 18, 19, 20, 51
,, லதாமண்டபம் 18, 35
நிசங்கேஸ்வரம் 20
நிவேதிதா, சகோதரி 84
நீராடுதுறை, கள் 35, 36, 76
நீராடும் கேணிகள் 35

பகவன்தாசர், டக்டர் 84
பங்குளியா 32, 75
பஞ்சதால 32
பட்டினப்பாலை 5
பத்தினி 34 75
பத்மாசன 32
பரணவிதான, டக்டர் 12, 19
பரராசசேகரன் 47, 48
பராக்கிரமபாகு, முதலாம் 15, 16, 17, 18, 19, 51, 71, 72
,, இரண்டாம் 20, 40
,, ஆரும் 47
பரிநிர்வாண 17, 31, 33, 71
பர்கத் 25
பலிபோஜகர் 2, 3, 4
பல்லவ, ர் 6, 13, 15, 41, 50, 51

பருளாய் 60
பாக் 50
பாசின விகாரை 46
பாண்டி, யர், கள் 1, 6, 19, 39, 40, 72
பாத்திகாபயன் 11
பாரசீகம் 4
பாரி 8, 87
பாரிஸ்நகர் 45, 78
பித்தளை மாளிகை 29
பிப்பிராவ 55
பிம்பிசாரன் 2
பிரகிருதிவாதம் 64, 65
பிரதக்ஷிணபாதை 26
பிலிமகே 29
பீடம், கள் 42, 60
புத்ததத்தர் 12
புத்ததேவர் 12
புத்தரும் அவர் போதனைகளும் 87
புத்தர் திருவடிவம் 18, 21, 72, 75
புத்தர் வடிவங்களின் அளவுப் பிரமாணம் 33
புத்தர் வடிவத்தின் ஆதித் தோற்றம் 87
புராண, ங்கள் 38
புலஸ்திய நகர் 17, 41
,, முனிவர் 17, 72
புலைநகரி 41
புலைநரியான 41
புவனேகபாகு 21, 22, 47, 48, 73
புறநானூறு 24
புஷ்பபீடம் 26
பூதந்தேவனர் 5
பூரண கும்பம், கள் 28, 35, 65
பூர்வீக இலங்கை மக்கள் 2
பெல் 18
பேரூர் 44
பேர்கமம் 66
பேர்சிபிரவுன் 16
பொக்குண 29
பொத்கல் விகாரை 16, 17
பொலநறுவை, வா 10, 15, 16, 17, 18, 19, 20, 21, 26, 30, 32, 33, 39, 40, 41, 42, 51, 52, 71, 72, 74, 75, 77, 79
பொலநறுவாக்காலம் 9
பொலிகொடகல்கே 51, 52
பொற்கொல்லர் 59
பொன்னம்பலம் 29
பொன்னம்பலவாணேஸ்வரம் 22
போதிகை 34
போதிகோட்டம் 29
போதிசத்துவர் 12, 13, 33, 34, 51, 75
போதிமழுவை 5
போர்த்துக்கேயர் 45, 48
போஸ்டன் 84, 91
பௌத்த விக்கிரக அமைப்பு இலக்கணம் 88

ம

மகதநாடு 2
மகரதோரணங்கள் 60
மகாசேனன் 11
மகாதாட்டிக மகாநாகன் 11
மகாதூபம் 11, 16
மகாபரிநிர்வாணசூத்திரம் 24
மகாபலிபுரம் 13
மகாமண்டபம் 41, 42
மகாயான 13, 34, 35, 75
மகாவம்சம் 1, 3, 6, 11, 27, 29, 38, 50

மகியங்கண 10, 51, 52
மட்டக்களப்பு 39
மணிபல்லவம் 6
மணிமேகலை 6, 24, 38, 50
மண்டலகிரி 26
மதுரை 5, 84
மயில்வாகனப்புலவர் 38, 39
மயில்வாகனம், ர் 48, 79
மரச்சித்திரவேலை 60, 79
மலகூடம் 36
மனவாசகங்கடந்தார் 89
மனிதவடிவமும் 14, 70
மனோகற்பிதம் 65
மாசாத்துவான் 50
மாணியக்கிக 38
மாதோட்டம் 15
மாத்தறை 38
மாயாதேவி 12, 69
மாயோன் 37
மாருதப்புரவீகவல்லி 46
மாவிட்டபுரம் 46, 48, 60
மாளிகை களின் 14, 16
மானவர்மன் 13
மிகுந்தலை 10, 26, 29, 69
மிரிசவெதி 10, 27
மீன்கொடி 40
முத்துக்குமாரசுவாமி, சேர் 81, 82
மும்முடிச் சோழமண்டலம் 51
முருகன் 37, 39
முருகன் ஆலயம் 76
முல்க்ராஜ் ஆநந்தர், டக்டர் 65
முறகே 29
மைசூர் 19, 84
மைத்திரேயர் 13
மென்டிஸ், ஜி சி. 1, 3
மொகலாய ஓவியங்கள் 84
மொஹஞ்சதாரோ 4
மோரியர் 2, 3
மௌரியநாடு 3

ய

யமுனேரி 48
யாப்பகூவா 21, 73
யாவா 8, 17, 32
யாழ்ப்பாணக்குடாநாடு 46, 49
யாழ்ப்பாணம் 5, 6, 22, 38, 45, 46, 47, 48, 59, 60, 79, 92
யாழ்ப்பாண வைபவமாலை 38
யானைச்சித்திரங்கள் 70
யானையுருவங்கள் 13

ர

ரஸாநுபவம் 58
ரூபாவளி 8, 9
ரூவான்வெலிசாயா 10, 11, 12, 22, 30, 50, 69
ரோமான் ரோலண்ட் 87

ல

லதாமண்டபம் 72
லோகமகாபாயா 10, 16

வ

வஞ்சதீசன் 11
வஞ்சிமாநகரில் 50
வட்டதாகே 16 18, 33, 72, 74, 75
வட்டுக்கோட்டை 92
வத்தகாமணி அபயன் 11, 51
வரத 34
வரிசை கள் 26, 28
வல்லிபுரம் 46, 49


வழிபாடு, உருவ 25, 31
,, ஞாபகச்சின்ன 31
,, முருக 37
,, விருட்ச 31
,, வீர 24
வாகல்கடம், வைகள் 11, 27, 74
வாகனங்கள் 60
வாசற்படி 10
வாயில், கள் 28, 74
வாயிற்படிக்கல்லு 78
வானவன்மாதேவி 15, 39, 40
41, 70
விதர்க்க 34
விமலதர்மசூரியா 21, 73
விமானம், கள் 11, 27, 28, 30, 41
வில்லியம் க்ரெகரி, சேர் 91
விவேகாநந்தர், சுவாமி 81
விஷ்ணு 37, 42
விஷ்ணுதர்மோத்திரம் 89
விஜயபாகு 21, 47
விஜயன் 1, 2, 3, 38, 39
வீரபாண்டியன் 40
வீரமாகாளிஅம்மன் 47
வீரம் 67
வெயிலுகந்த பிள்ளையார் 47
வெள்ளரசு 5
வெள்ளிமயில் 79
வேசகிரி 10
வேதகால 2
வேதி, குச்ச 27
,, முத்த 27
வேதிகை 26

## ஜ


ஜனநாதபுரம் 40, 42
ஜாவா 87
ஜோர்ஜ் பேட்லூட், சேர்

## ஹ


ஹட்டதாகே 18, 72
ஹதரஸ்கொட்டுவ 26, 27
ஹரப்பா 4
ஹவல் 66
ஹாஸ்யம் 67
ஹிந்தலாகலா 51, 52



இல. 2. ருவான் வெலிசாயா தாதுகோபம்



இல. 3. சேதவனராமா தாதுகோபம்



இல. 4. கந்தகசைத்திய தாதுகோபம்



இல. 5. சிராவத்தியின் அற்புதச்செயல்



இல. 6. மாயாதேவியின் கனவு




இல. 7. தொளுவிலா புத்தர் வடிவம்



இல. 8. தம்பதிகள்



இல. 9. சந்திரவட்டப் படிக்கல்லு




இல. 10. யானைச் சித்திரங்கள்



இல. 11. மனித வடிவமும் குதிரைத் தலையும்




இல. 12. நாலந்தா கெடிகே



இல. 14. கிரிவிகார தாதுகோபம்




இல. 13. இரண்டாம் சிவாலயம்



இல. 15. இலங்கைத்திலக ஆலயம் ( பொலநறுவை )




இல. 16. சேதவனராம விகாரம் ( திவங்க ஆலயம் )



இல. 16a. தூபாராம ஆலயம்




இல. 17*a*. பராக்கிரமபாகு




இல. 18, வட்டதாகே



இல. 19. ஹட்டதாகே




இல. 20. லதா மண்டபம்




இல. 21. புத்தர் திருவடிவம் (அவுகன)




இல. 22. முதலாம் சிவ தேவாலயம்



இல. 23. யாப்பகூவா அரண்மனை




இல. 24. இலங்காதிலக விகாரை (கம்பளை)



இல. 25. கடலதேனிய விகாரை




இல. 26. கண்டி புத்ததந்த ஆலயம்




இல. 27. எம்பக்க தேவாலயச் சித்திரம்




இல. 28. களனியா விகாரை




இல. 29. பொன்னம்பலவாணேஸ்வரம் (கொழும்பு)




இல. 31. வாகல்கடம் (அநுராதபுரம்)



இல. 32. வாகல்கடம் (மிகுந்தலை)



இல. 33. நீள்சதுரக் கல்



இல. 34. வாயில்




இல. 35, நாகராஜ துவாரபாலகர் (பொலநறுவை)




இல. 36. துவாரபாலகர் (அநுராதபுரம்)




இல. 37. கைப்பிடி வரிசை



இல. 38. *புத்தர் திருவடிவம் (அபயகிரி)




இல. 39. புத்தர் திருவடிவம் (பங்குளியா)



இல. 40. புத்தர் திருவடிவம்
(கல்விகாரை)



இல. 41. புத்தர் திருவடிவம்
(கல்விகாரைக் கர்ப்பக்கிரகம்)




இல. 12. புத்தர் திருவடிவம்
(வட்டதாகே)




இல. 13. மைத்திரேய
போதிசத்துவ



இல. 44. பத்தினி



இல. 45. சிற்பத் தூண்கள்



இல. 46. நீராடு துறை



இல. 47. முருகன் ஆலயம்



இல. 48. சுந்தரமூர்த்திநாயனர்



இல. 49. திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்



இல. 50. திருநாவுக்கரசு நாயனுர்




இல. 51. சண்டேசுவர நாயனார்



இல. 52. சிவமூர்த்தம்




இல. 53. நடராஜ வடிவம்



இல. 54. திருகோணமலைத் திருவடிவங்கள்



இல. 55. அநுமார்



இல. 56. வாயிற்படிக்கல்லு (யாழ்ப்பாணம்)




இல. 57. கஜலக்ஷ்மி (யாழ்ப்பாணம்)



இல. 58. சிகிரியா ஓவியம்




இல. 59. திவங்க ஆலய ஓவியம்



இல. 60. சிம்மாசனம் (கண்டி)



இல. 61. வெள்ளி மயிலும் திருவாசியும்



இல. 62. மரச்சித்திரவேலை (யாழ்ப்பாணம்)